# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 12 சனிக்கிழமை (26-06-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:214


# புலிகள் தமது நிலைப்பாட்டில் உறுதி; படையினருடனான சந்திப்பு ரத்து!

## கண்காணிப்புக் குழுவிடம் முடிவைத் தெரிவித்தனர்

கொழும்பு,ஜூன்26

**இலங்கைப் படையினருடனான வழமையான - மாதாந்த - சந்திப்பை இடைநிறுத்திவைக்கும் தமது முடிவில் விடுதலைப் புலிகள் விடாப்பிடியான - உறுதி - நிலையில் உள்ளனர். இதனால் இன்று கிழக்கில் புலிகளுக்கும் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலீஸாருக்கும் இடையில் நடக்கவிருந்த சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றது.**

**படையினரைச் சந்தித்து, வழமை நிலையை ஏற்படுத்துவது குறித்துக் கலந்துரையாடுவது தொடர்பான நிகழ்ச்சிகளைப் புலிகள் தொடர்ந்து புறம் தள்ளி வருகின்றனர்.**

இன்று அக்கரைப்பற்றில் இந்தச் சந்திப்பு நடக்கவிருந்தது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அதிரடிப்படையினர், பொலீஸார் ஆகியோரின் மூத்த அதிகாரிகள் இன்று புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதிகளைச் சந்தித்து உரையாடவிருந்தனர் என்று இலங்கை கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் டிஸா பின்போகா நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

ஆனால், இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ள இயலாது என்ற புலிகளின் தகவல் தமக்கு நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கிடைத்ததாக அவர் சொன்னார்.

சந்திப்பில் கலந்துகொள்ள இயலாமைக்கான காரணம் எதனையும் புலிகள் தெரிவிக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

"இலங்கை அரசு இரட்டைவேடம் போட்டுக்கொண்டு பேசுவதை நாம் அனுமதிக்கமுடியாது. முதலில் போரா, சமாதானமா என்பதை அரசு தீர்மானிக்கட்டும். அதுவரை இராணுவத்துடனான மாதாந்த சந்திப்பை நிறுத்தியிருக்கிறோம்" - என்று கிழக்குப் பகுதிக்குப் பொறுப்பான மூத்த தளபதி ரமணன் தெரிவித்திருந்தார் என்ற

(16ஆம் பக்கம் பார்க்க)

## கருணா இன்னமும் கொழும்பில்தான்!

கொழும்பு,ஜூன்26

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து தப்பி ஓடிவந்த அந்த இயக்கத்தின் முன்னாள் தளபதி கருணா இன்னமும் தலைநகருக்கு வெளியில் ஓரிடத்தில் பாதுகாப்பாகத் தங்கவைக்கப்பட்டிருக்கிறார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருந்தன.

கருணாவுடன் இருந்த அவரது முன்னாள் தளபதிகள் நிலாவினி மற்றும் மூன்று பெண்கள் கொழும்பிலிருந்து கிழக்கிற்கு விடுதலைப் புலிகளிடம் தப்பிச் செல்வதற்கு முன்னர், அவர்களை விட்டு கருணா வெளியேறி விட்டார்.

அவர் தமது குடும்பத்தவர்களுடன் வேறு எங்கோ புறப்பட்டுச் சென்றார் என நிலாவினியும் ஏனைய மூவரும் தெரிவித்திருப்பதால், கருணா கொழும்பை விட்டு வெளியேறி வெளிநாடு ஒன்றுக்குச் (16ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவுடன் தொடர்பு வைத்த டக்ளஸின் பதவி பறிக்கப்படுமா?

கொழும்பு,ஜூன்26

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருண்ாவுடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற காரணத்தால் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்படுவாரா? என்ற கேள்வி தற்போது கொழும்பு அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது.

கருணாவிற்கு ஆதரவளித்தார் என்பதற்காக ஐ.தே.கட்சி அலி சாஹிர் மௌலானாவின் பதவியைப் பறித்தது. இதவேளை, கருணாவுடன் தொடர்புகொண்டதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒப்புக்கொண்டுள்ளார்.

இதற்கிடையில், வாக்குறுதியளிக்கப்பட்ட நிதியுதவியைப் பெறுவதற்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

## 'ஹலோ ரஸ்ட்' வாகன எரிப்புச் சம்பவம்; விசேட பொலீஸ் குழு தீவிர விசாரணை

யாழ்ப்பாணம்,ஜூன்26

குடாநாட்டில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடும் 'ஹலோ ரஸ்ட்' நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனங்கள் நேற்றுமுன்தினம் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசேட பொலீஸ் குழு ஒன்று தீவிர விசாரணையை மேற்கொண்டுவருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்றும் -

அவர் விசாரணையின் பின் பொலீஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் சிலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் -

ஆனால், சம்பவத்துக்கான காரணத்தை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் - பொலீஸார் கூறினர்.

இதேவேளை -

வெளிநாட்டு 'ஹலோ ரஸ்ட்' நிறுவனத்தின் அதிகாரிகளின் கோரிக்கையின் பேரில் அவர்களது கண்டிவீதி மற்றும் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள அவர்களது வாசஸ்தலங்களுக்குப் பொலீஸ் காவல் போடப்பட்டுள்ளது. (ஒ-3-7)

## புலிகளின் பணிமனை மீது தாக்கு!

மட்டக்களப்பு,ஜூன்26

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள களுவாஞ்சிக்குடியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் இரவு கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவநேரம், அலுவலகத்தில் எவரும் இருக்கவில்லை என்றும் - அலுவலகத்துக்கு சிறிது சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் - விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

வழமைக்கு மாறாக விசேட அதிரடிப்படையினர் தமது அலுவலகப் பகுதியில் கடந்த சில தினங்களாக ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் -

கிரனேட் தாக்குதலில் அவர்களே பின்னணியில் இருக்கலாம் எனச் சந்தேகம் எழுந்துள்ளது என்றும் - விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கண்காணிப்புக் குழுவினிடம் முறைப்பாடு ஒன்றை விடுதலைப் புலிகள் செய்துள்ளனர். (ஒ-3)

### தமிழ்ச்செல்வனுடன் புரூஹோவ்டே திங்கள் சந்திப்பு

கிளிநொச்சி,ஜூன்26

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் புரூஹோவ்டேயும் நாளைமறுதினம் திங்கட்கிழமை கிளிநொச்சில் சந்திந்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

இச்சந்திப்பு நேற்றையதினம் நடைபெறுவதாக இருந்தது. (ஒ-9-7)

## குடாநாட்டில் முதல் தடவையாக வீதிச் சமிக்ஞை விளக்குகள் அமைப்பு

### யாழ். நகரில் நான்கு இடங்களில் பொருத்தப்படும்

யாழ். நகரப் பகுதியில் வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்காகவும் போக்குவரத்தைச் சீராக மேற்கொள்வதற்காகவும் முதல் தடவையாக வீதிச் சமிக்ஞை விளக்குகள் 4 இடங்களில் அமைக்கப்படவுள்ளன.

வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காக நேற்றுப் பிற்பகல் கூட்டப்பட்ட கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பொலீஸ் அதிகாரிகள் மற்றும் மாநகரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ். செயலகம் ஆகியவற்றின் அதிகாரிகளும் போக்குவரத்துடன் தொடர்புடைய சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

பிரதான சந்திகளில் சோதனைச் சாவடிகள், காவலரண்கள், சட்ட விரோதமான கட்டடங்கள் போன்றவை அமைந்திருப்பதே பெரும்பாலான விபத்துக்களுக்குக் காரணம் என மாநகரசபை அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு குணசிங்கபுரத்தில் தமிழ்ப்பெண் கொலை!

கொழும்பு,ஜூன்26

கொழும்பு - குணசிங்கபுரம் தொடர்மாடி வீடு ஒன்றில் தமிழ்ப் பெண் ஒருவர் கொலைசெய்யப்பட்டிருக்கிறார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை இடம் பெற்றிருக்கின்றது. இவர் வீட்டுப் பணிகளுக்காக மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு வந்தவர் என்று தெரிய வருகிறது.

பபி என்று அழைக்கப்படும் 28 வயது நிரம்பிய இப்பெண் குணசிங்கபுரம் தனியார் பஸ்நிலையத்துக்கு முன்னுள்ள மாடி வீட்டுக் குளியலறையில் கை கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

கத்தியால் குத்தப்பட்டே இவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. வாழைத் தோட்டப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

## தந்தையின் சாவு வீட்டுக்கு வந்த மகனைத் தடுத்து வைத்தனர்!

### ஜேர்மன்வாசிக்கு நேர்ந்த அவலம்

கொழும்பு,ஜூன்26

ஜேர்மனியிலிருந்து தனது தந்தையின் மரண வீட்டுக்காக வந்த தமிழர் ஒருவரை கொலைச் சந்தேகத்தின்பேரில் தவறுதலாக கைதுசெய்த பொலீஸார் அவரை ஒரு வாரகாலம் விளக்கமறியலில் வைக்கவும் செய்தனர்.

இதனை ஆட்சேபித்து ஐந்து லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அதை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளது.

ஜேர்மன் பிரஜையான கந்தசாமி என்பவரே இந்த மனுவைத் தாக்கல் செய்திருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் தமது தந்தையாரின் சாவு வீட்டில் பங்குபற்றுவதற்காகக் கடந்த மே 23ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய சமயமே அங்கிருந்த குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் அவரைக் கைதுசெய்தனர் எனக் கூறப்படுகின்றது.

குடியகல்வு, குடிவரவு அதிகாரிகளினால் கட்டுநாயக்க பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட அவர், நீர்கொழும்பு பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார். கொலை வழக்கு ஒன்று தொடர்பாக யாழ். மேல்நீதிமன்றத்தில் அவர் ஆஜர்செய்யப்படவேண்டியிருக்கிறார் என்றும் பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

எனினும், தம்மை அடுத்த நாளேனும் யாழ்.மேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படியும், அப்படிச் செய்தால், தாம் அங்கு பிணை அனுமதி பெற்று, தந்தையின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றமுடியும் என்றும் கந்தசாமி கோரினார்.

பொலீஸாரின் கோரிக்கைப்படி

(16ஆம் பக்கம் பார்க்க)

### விபத்துக்களில் நேற்றுமட்டும் 15 பேர் காயம்!

யாழ்ப்பாணம்,ஜூன்26

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற விபத்துக்களில் நேற்றுமட்டும் 15 பேர் காயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிள், ஓட்டோ, சைக்கிள் போன்ற வாகனங்கள் சம்பந்தப்பட்ட விபத்துக்களிலேயே அதிகமானவர்கள் படுகாயமடைந்துள்ளனர் என்று யாழ்.வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (9-7-5)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்





யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்துசேர்ந்த பாங்கொக் சத்தியசாயி பல்கலைக்கழகத்தின் தலைவர் கலாநிதி ஆர்ற் ஓங் ஜூம்சாய் மானிப்பாய் சாயிபாபா சமித்தியில் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், சாயிபஜனை நடைபெறுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.
(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# ரவியின் முன் பிணைமனு செவ்வாயன்று தீர்ப்பு

## சட்டமா அதிபரின் கருத்தும் கோரப்படுகிறது

கொழும்பு,ஜூன்26

முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்கவின் முன் பிணை கோரும் மனு சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இம் மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் 29 ஆம் திகதி வழங்கப்படும்.

ரவி கருணாநாயக்கவுக்கு முன் பிணை கோரும் மனு கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் மூலம் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. நேற்று அது பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது.

இப் பிணைமனு தொடர்பாகச் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற வேண்டியுள்ளதால் அதனை சட்டமா அதிபரின் கவனத்துக்குச் சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்ட கோட்டை நீதிவான் எதிர்வரும் 29 ஆம் திகதி இம் மனு மீதான தீர்ப்பு வழங்கப்படும் என அறிவித்தார்.

முன்னாள் அமைச்சர் ராஜிதசேனாரதன உட்பட பல ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்று நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தனர். (க)

# வவுனியா வளாக மாணவர்கள் 4ஆவது நாளாகப் பகிஷ்கரிப்பு

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக மாணவர்களின் வகுப்புப் பகிஷ்கரிப்பு நேற்று நான்காவது நாளாகத் தொடர்ந்து இடம்பெற்றது.

வவுனியா வளாகத்தின் அவல நிலையையும் மாணவர்களின் குறைபாடுகளையும் நன்கு தெரிந்த யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் இக்குறைகளை நீக்கத் தவறிவிட்டார். மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கோரிக்கைகளையும் உதாசீனப்படுத்துகின்றார் - என மாணவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

நேற்று வவுனியா வளாகத்திற்கு வந்த யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரின் பிரதிநிதிகளும், யாழ். பலகலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கும் மாணவர்களுடன் கலந்துரையாடினா. எனினும், இப்பேச்சு வெற்றியளிக்கவில்லை.

வவுனியா வளாக மாணவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த நான்கு தினங்களாக வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றுக்காலை வழமைபோல் வளாகத்தின் நிர்வாகக் கட்டடத்தின் முன் அனைத்து மாணவர்களும் கூடிநின்றனர். அவ்வேளையில் யாழ்ப்பாணத்தில் இருந்து துணைவேந்தரின் பிரதிநிதிகளும், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவரும் அங்குவந்து துணைவேந்தரின் உறுதி மொழிகள் என சில கருத்துக்களை முன்வைத்தனர்.

மாணவர்கள் இதனை ஏற்கமறுத்துவிட்டனர். யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரே நேரடியாக வரவேண்டும் என வலியுறுத்தினர்.

இவ்வேளையில், அங்கு சமுகமளித்திருந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் துணைவேந்தருடன் தொடர்பு கொண்டு மாணவர்களின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினார்.

ஆனால், துணைவேந்தரோ உடனடியாக வரமுடியாது என்றும், திங்கட்கிழமை வவுனியாவுக்கு வருவதாகவும் பதில் அளித்துள்ளார்.

இதனால் ஆத்திரமுற்ற மாணவர்கள் துணைவேந்தரின் பிரதிநிதிகள் வந்த வாகனத்தைச் செல்லவிடாமல மறித்து வைத்துக்கொண்டனர்.

நிலைமை மோசமடையவே நாடாளுமன்ற உறுப்பினர் கிஷோர் மீண்டும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருடன் தொடர்புகொண்டு பேசிய போது அவர் உடனடியாகப் புறப்பட்டு வருவார் என அறிவித்துள்ளார். இந்த உறுதிமொழியின் பின்னரே பிரதிநிதிகள் வந்த வாகனத்தை யாழ். செல்வதற்கு அனுமதித்தனர் மாணவர்கள்.

## யாழ். பல்கலையில் ஜூம்சாய் உரை

யாழ் வந்துள்ள பாங்கொக சத்திய சாயி பல்கலைக்கழகத்தின் தலைவர் கலாநிதி ஆர்ற் ஓங் ஜூம்சாய் இன்று காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள நிகழ்வொன்றில் உரையாற்றுவார்.

பிற்பகல் 2.30 மணிக்கு மானிப்பாய் சத்தியசாயி ஆரம்ப பாடசாலையில் நடைபெறும் நிகழ்வில் கலந்துகொள்வார். (4)

# பன்றிகளால் வீதி விபத்துகள் தென்மராட்சியில் அதிகரிப்பு

தென்மராட்சி,ஜூன்26

தென்மராட்சியில் கல்வயல், மட்டுவில், சரசாலை போன்ற இடங்களில் பன்றிகள் அதிகரித்துள்ளதால் மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் பன்றிகளால் விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

நேற்று மட்டுவிலிலிருந்து கனகன்புளியடி ஊடாகச் சாவகச்சேரிக்கு வநத மோட்டார் சைக்கிளை பன்றி மோதித தள்ளியதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த கணவனும் மனைவியும் காயமடைந்தனர்.

கொடிகாமம் வெள்ளம் போக்கட்டியைச் சேர்ந்த சின்னத்துரை துரைராசா (வயது-58), அவரது மனைவியான துரைராசா மங்கயர்க்கரசி (வயது-57) ஆகியோரே காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனா. அவர்கள் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

கடந்த மாதம் கல்வயல் பகுதியில் வர்த்தகர் ஒருவரும், நேற்றுமுன்தினம மட்டுவில் பகுதியில் ஆசிரியர் ஒருவரும் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தபோது பன்றிகளால் மோதப்பட்டு காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-31-117)

## பேராளர் சங்கமம்

யாழ்.மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கமம் நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு மானிப்பாய் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட, கோட்ட, பிரதேச, ஊரக பேராளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதில் கருத்துப் பகிர்வு, சிறப்புரைகள், தீர்மானங்கள் எடுத்தல் என்பன இடம்பெறும். (ஒ-30)

## திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஜூன்26

யாழ். தமிழ் மிஷன் சபையின் புதிய கட்டடத் திறப்புவிழா இன்று பிற்பகல் 4 மணிக்கு அரியாலையில் நடைபெறவுள்ளது. (4)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி,ஜூன்26

மருதங்கேணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று சனிக்கிழமை நடைபெறும். (10-173)

★ ★ ★

தென்மராட்சி,ஜூன்26

புலோப்பளை புதின இராயப்பர் தேவாலய நாவலர் உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமை 7 மணிக்கு முதன் நன்மை திருப்பலிப்பூசையும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு திருநற்கருணை ஆராதனையும் திருப்பலிப்பூஜையும் இடம்பெறும். (10-117)

★ ★ ★

வலி.தென்மேற்கு,ஜூன்26

பண்டத்தரிப்பு, பிரான்பற்று பெரியவளவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயக் கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 1130 மணிககு நடைபெறவுள்ளது.

இதனையொட்டி இன்று காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்தும் வைபவமும் இடம்பெறும். (10-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்26

கச்சாய் வீதி, கொடிகாமம் பேதுருவானவர் ஆலயத்தின் திருவிழா கடந்த 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

இதனையொட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை முதன நன்மைப் பெருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை மாலை நற்கருணை விழாவும் இடம்பெறும். 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ. ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம ஆண்டகை தலைமையில் திருநாட் திருப்பலியும், திருச்சொருபபவனியும், ஆசீர்வாதமும் இடம்பெறும். (10-ரி)

★ ★ ★

வலி.தெற்கு,ஜூன்26

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை எட்டு மணிக்கு தேர்த திருவிழாவும் மறுநாள் காலை ஒன்பது மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (10-152)

# தேசியம், சமுதாயம் என்ற நம் கட்டமைப்பில் கல்விச்சாலைகளே வழிகாட்டு நிறுவனங்கள்

## யாழ். இந்து பரிசுத்தின உரையில் டாக்டர் ஜோதிலிங்கம் விளக்கம்



யாழ்ப்பாணம்,ஜூன்26

"தனித் தேசியம், சமுதாயம் என்ற கட்டமைப்பிலே கல்லூரி என்ற தனி அலகு முக்கியத்துவம் பெறுகின்றது. சீரிய சமூக வளர்ப்பை நெறிப்படுத்தும் அடிப்படை வழிகாட்டு நிறுவனங்களில் முதன்மை பெற்றிருப்பவை கல்விச் சாலைகளே"

- இவ்வாறு கூறினார் வைத்திய கலாநிதி சபாலிங்கம் ஜோதிலிங்கம்.

நேற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பரிசுத்தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ். இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த முன்னாள் அதிபர் அமரர் இ.சபாலிங்கத்தின் மகனான டாக்டர் எஸ். ஜோதிலிங்கம், கடந்த முப்பது ஆண்டுகளாக லண்டனின் பிரபல வைத்திய சாலை ஒன்றின் ஆலோசனை நிபுணராகப் பணியாற்றிவருகின்றார்.

பரிசுத்தினத்தை ஒட்டிய தமது பிரதான உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்றைய எம்நாட்டு சிந்தனையாளர்கள், சமுக சிற்பிகள் 1890 ஆம் ஆண்டு இந்துக் கல்லூரியை உருவாக்கும் பணியில் ஈடுபட்டதன் பயனாக யாழ் குடாநாட்டில் 'தனககு நிகர் தானே' என்ற கலைப்பயில் கழகமாக உருவான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, ஈழத்தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு முக்கியமான - அளப்பரிய - பங்களித்து வருகின்றது.

தமிழினத்திற்கே உரிய சைவ கலாசாரங்களையும், பண்பாட்டு விழுமியங்களையும், நம் மாணவர் மனதிற் பதித்து சமூகத்தில் பொறுப்பு வாய்நத சிந்தனையாளர்களை, வழிகாட்டிகளை, விற்பனர்களை, நிபுணர்களை உயர்நிலை வகிக்க, ஏற்ற ஆற்றலும் திறமையும் உடையவராக வளர்த்து, வழிகாட்டிய பெருமையுடன் தமிழர் தலைநிமிர் கழகமாக இன்றும் என்றும் காட்சிதருகின்றது யாழ. இந்துக் கல்லூரி.

இந்து அன்னை வளர்த்தெடுத்த மைந்தர்கள் - தாம் புலம்பெயர்ந்த நாடுகளிலும், கல்லூரியின் அபிவிருத்தி என்ற சமூக சிந்தனையை நோக்கமாகக் கொண்டு, காலங்காலமாக வளர்ந்துவரும் மாபெரும் விருட்சத்தின் விழுதுகளாக, பழைய மாணவர் சங்கங்கள் அமைத்துச் செயற்படுகின்றனர்.

துன்பத்திலும், துயரத்திலும், தாங்கொணாத கொடுமையிலும் நம் மணணில் துவண்டு கிடந்த நமது தமிழ்ச் சமூகம் மீட்சிக்கும், விடிவுககும், விடுதலைக்கும், சுதந்திரத்துக்கும் ஆவலோடு காத்து நிற்கின்றது. கௌரவத்துடன் கூடிய அமைதித் தீர்வும், சமாதான வாழ்வும் கிட்டுவதற்கான ஒளிக கீற்றுத் தென்படத் தொடங்கியுள்ளது.

தனித் தேசியம், சமுதாயம் என்ற நமது கட்டமைப்பிலே கல்லூரி என்ற தனி அலகு முக்கியத்தும் பெறுகின்றது. சீரிய சமூக வார்ப்பை நெறிப்படுத்தும் அடிப்படை வழி காட்டு நிறுவனங்களில் முதன்மை பெற்றிருப்பவை கல்விச்சாலைகளே.

அவ்வகையில், நமது சைவசமய மரபை நெறிப்படுத்தி, வளப்படுத்தி, வழிப்படுத்தி, செழுமைப்படுத்தி, வளர்ந்தெடுத்த உயரிய பெருமையோடும் கீர்த்தியோடும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது யாழ். இந்துக் கல்லூரி. இது அதனது கடந்த காலச் சிறப்பு.

இப்போது மீட்சிக்கான விடியலில் காத்திருக்கும் நமது இனத்துக்குரிய சமூக வழிகாட்டலை வழங்குவதில் அதன் பொறுப்பும் கடமையும் இரட்டிப்பாகின்றது. அது வரலாறுக் கடமையும் கூட.

நான் பார்த்த வைத்தியத்துறையும் இங்கு கல்வி போதிக்கும் ஆசிரியத்துறையும் வேறுபட்டவையானாலும் அடிப்படையில் ஒன்றானவை; ஒரே போக்குடையவை என நான் கருதுகிறேன்.

எத்துறையிலும் சிறந்து ஒருவர் விளங்குவதற்குப் பின்வரும் பத்து முக்கிய விடயங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பது எனது கருத்து.

★ தெளிவான கொள்கைப் பற்றும் எண்ணப்போக்கும் - ஒருவர் செயறறிறன் மிக்கவராக இருக்கலாம். நடைமுறைச் சாத்தியமான வழியில் செயற்படுவராக இருக்கலாம். ஒழுக்க சீலராகவும் நடந்து கொள்ளலாம். ஆனால், இவ்வளவற்றோடு தெளிவான நோக்குடையவராக இருந்தால் அவா நல்லாசானாகின்றார். எனவே, தெளிவான சிந்தனைப்போக்கு அவசியமாகின்றது.

★ தன்னுடைய கொள்கைப்போககைத் தெளிவாக வெளிப்படுத்தல் - வெறும் தெளிந்த சிந்தனைப் போக்கு மட்டும் போதாது. அதன் வழியே, ஏனையோரையும் செயற்படத் தூண்டும் திறமையும் அமைந்திருக்க வேண்டும்.

★ ஏனையோரையும் புரிந்து கொள்ளும் சக்தியுடையவராக இருந்தல் - எல்லோரினதும் உள்ளார்ந்த எண்ணங்களையும் இயல்புகளையும் புரிந்துகொள்ளும் மனப்பக்குவம் இருத்தல் வேண்டும்.

★ ஒவ்வொரு விடயத்திலும் விளக்கமும் அவதானமும் உடையவராக இருத்தல் - உங்களுடன் வேலை செய்யும் சகலரின் செயற்பாடு குறித்தும் விவரமான - விளக்கமான - புரிந்துணர்வும் தேடலும் இருத்தல் முக்கியம்.

★ புத்திக்கூர்மை - நினைத்த காரியங்களைத் தெளிவுபடுத்தும்தன்மை.

★ மனித நேயம் - பல்வேறு வயது வேறுபாடுகளில், பல்வேறு தரங்களில் உள்ளவர்களைக் கவரவும், அரவணைக்கவும், புரிந்துகொள்ளவும் தேவையான அடிப்படை மனிதப் பண்புகள் அவசியமானவை.

★ தொடர்பாடல் - அதிகாரத்தையும், ஆளுமையையும் வெளிப்படுத்த சிறந்த பேச்சாற்றல் - தொடர்பாடல் திறன் அவசியம். அத்தோடு மற்றவர் கருத்துக்களைச் செவிமடுத்து உள்வாங்கும் ஒருவராக இருக்க வேண்டும்.

★ விசுவாசம் - தனது சேவையில - பணியில் - பொறுப்பில் - விசுவாசமும் கடமைப்பாடும் இருந்தால் நற்பணியாளராகிவிடலாம்.

★ அறிந்துகொள்ளும் ஆர்வம் - திறந்த மனதோடு விடயங்களை உள்வாங்குபவன் மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றான். இல்லையேல் பழமைவாதியாகிவிடுவான்.

★ கற்றது கைமண் அளவு என்று விடாது தேடல் - நல்லாசான் ஒருவன் தன்னை மேலும் மேலும் பக்குவப்படுத்தவும் சமூகத்தில் உயரவும் இந்த அயராக் கற்றல் முயற்சி அத்தியாவசியமாகின்றது.

- இவையே வாழ்வில் முன்னேற்றத்துக்கு அடிப்படையானவை - என்றார் எஸ்.ஜோதிலிங்கம்.(க-4-13)

உதயன்

# கருணா விவகாரமும் கருணாநாயக்க விவகாரமும்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் ஆட்சி நிர்வாகம் தொடர்பாக, காலியில் நடந்த கூட்டம் ஒன்றில் எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க சில கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்.

*"கண்டதே காட்சி, கொண்டதே கோலம், - இதுதான் இன்றைய ஆட்சியின் நிலைமை.*

*"அரசுக்குள் இன்னொரு அரசு நடக்கின்றது. அதனால் பெருங்குழப்பம்.*

*"புதிய அரசில் உள்ள அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பொறுப்புகள் குறித்துக் கூடக் குழப்பம். எந்தெந்த அமைச்சுகளின் கீழ் என்னென்ன திணைக்களங்கள் இருக்கின்றன என்பதிலும் தெளிவில்லை. இதனால் ஓர் அமைச்சர் மற்றொரு அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்கள அதிகாரிகளுக்கு இடையூறு செய்யும் இக்கட்டு. கூட்டரசு - கூட்டுக் குழப்பத்துக்குள் ஆழ்ந்திருக்கின்றது."*

- இப்படிச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர்.

அவர் குறிப்பிடும் விடயங்களில் நிறைய அர்த்தமும், உண்மையும் பொதிந்திருப்பதாகவே கொள்ள இடமுணடு.

அண்மையில் நாட்டில் பரபரப்பாகப் பேசப்பட்ட இரு சம்பவங்களில் அரசின் இந்த 'இரட்டை வழிகாட்டும்' போக்கு - துலாம்பரமாக - வெட்ட வெளிச்சமாக - வெளிப்பட்டிருப்பது கண்கூடு.

ஒன்று - கருணாவிவகாரம். மற்றது - கருணாநாயக்கா விவகாரம். இரண்டிலுமே அரசின் போக்கும் செயற்பாடும், எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுவது போல அரசுக்குள் மற்றொரு 'மாயஅரசு' - கண்ணுக்குப் புலப்படாத அரசு - இயங்குவதைத் தெளிவாக்கியிருக்கின்றன.

கருணா விவகாரத்தில் அவருக்கு இலங்கைப் படைகளுள் சிலர் உதவியிருப்பதை அரசின் - அமைச்சரவையின் - பேச்சாளர் அமைச்சர் மங்கள சமரவீர ஒப்புக்கொளகின்றார். ஆனால், அரசின் அங்கீகாரத்தோடு நடந்ததல்ல அது என்கிறார் அவர். அது குறித்து விசாரணை நடத்தப்படும் என்றும், தவறிழைத்தோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறுகின்றார்.

ஆனால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் கருணா விடயத்தில் படையினர் சம்பந்தப்பட்டிருப்பதை அடியோடு மறுத்துரைக்கின்றனர். கருணா விவகாரத்தில் சம்பந்தப்பட்ட படை அதிகாரிகளுக்கு எதிராக விசாரணை நடப்பது குறித்து - அல்லது நடக்கவிருப்பது குறித்து - தமக்கு ஏதும் தெரியாது என்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்.

அதேபோன்று, கருணா எங்கே இருக்கிறார் என்பது தங்களுக்குத் தெரியாது என்றும் கைவிரிக்கின்றார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர். அரசினதும், பாதுகாப்புப் படையினரதும் உத்தியோகபூர்வ நிலைப்பாடும் அதுதான். ஆனால், அரசாங்கத்தின் அமைச்சர்களுள் ஒருவரான டக்ளஸ் தேவானந்தாவோ தாம் கருணாவுடன் தொடர்புகளை வைத்திருப்பதை - தொலைபேசியில் பேசி வருவதை - பகிரங்கமாகவே ஒப்புக் கொள்கிறார்.

ஆனால், கருணா கொழும்பில் உயர்பாதுகாப்போடு இருந்தார் என்ற தகவலை அவருடன் இருந்தவர்களே ஊடகங்களுக்கு முன்னால் பகிரங்கப்படுத்துகின்றார்கள். இராணுவத்தின் எந்தெந்த அதிகாரிகள். எந்தெந்த மட்டத்தில் கருணாவுடன் தொடர்புகளை வைத்திருந்தனர். கருணா கொழும்பில் எந்தப் படை அதிகாரிகளோடு சேர்ந்து இயங்குகின்றார் என்பதெல்லாம் புலிகளின் தலைமைக்கு இப்போது அத்துப்படி.

எனவே, இது விடயத்தில், அரசு வெளிப்படையாக ஒரு நிலைப்பாட்டை எடுத்து இயங்குகிறது. அதேசமயம் அரசுக்குள் இயங்கும் மற்ற 'மாய அரசோ' வேறு கைங்கரியங்களைப் புரிகிறது என்பது தெளிவு.

அதேபோன்ற நிலைமைதான் ரவி கருணாநாயக்கா விடயத்திலும்.

கருணாநாயக்கா - எதிர்க்கட்சியில் முக்கிய பிரமுகர். முன்னைய அரசில் ஒரு மூத்த அமைச்சர், இப்போது பிரபல எம்.பி. இந்த அரசையும் அதன் கொள்கையையும கடுமையாகச் சாடுபவர்.

அவரைக் கைதுசெய்வதற்கு பொலீஸார் முயன்றிருக்கினறனர். ஆனால், பொலீஸ்மா அதிபருக்கு அதுபற்றி எதுவும தெரியாது. சட்டம், ஒழுங்கு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு அதுபற்றித் தெரியாது. எம்.பி. ஒருவரைக் கைதுசெய்யப்போகிறார்கள் என்பது சபாநாயகருக்கும் அறிவிக்கப்படவில்லை. அரசின் நாடாளுமன்றத் தலைவரான பிரதமருக்குக் கூடத் தெரியாது.

இந்த விடயத்தில் கூட அரசுக்குள் இயங்கும் 'மாய அரசு'தான் காய்களை நகர்த்தியிருக்கின்றது.

ரவி கருணாநாயக்கவைக் கைதுசெய்வதற்கு நீதிமன்றம் 'வாரண்ட்' உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதன் பின்னரே அவரைக் கைதுசெய்யப் பொலீஸார் முயன்றனர் என்று அப்பட்டமான பொய் அரச ஊடகங்களில் வெளிவந்ததற்கும் இவ்வாறு அரசுக்குள் இயங்கும் 'மாய அரசு'தான் காரணம் போலும்.

கருணா விவகாரத்தில் படையினரின் நடவடிக்கை போன்ற - தேசிய முக்கியத்துவம் வாய்ந்த - விவகாரங்களில் கூட, அரசின் கட்டுப்பாட்டையும், பங்களிப்பையும் மீறி பிறிதொரு 'மாயச்சக்தி' அரசுக்குள் இயங்குவது எதிர்காலத்தில் விபரீத விளைவுகளைத் தோற்றுவிக்கும். இந்த எச்சரிக்கையை நாடும் மக்களும் கவனத்தில் எடுப்பது நல்லது.

# தீவுப்பகுதியில் அம்புலன்ஸ் படகு அடுத்த வாரம்முதல் சேவையில்

## பிரதி சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூன்26

தீவுப்பகுதிக்கான நோயாளர் அம்புலன்ஸ் படகுச் சேவை அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று பிரதி மாகாணச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி இ.தெய்வேந்திரன் தெரிவித்தார்.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் இந்த அம்புலன்ஸ் படகை கட்டுவதற்கு 58லட்சம் ரூபாவை வழங்கியிருந்தது. இந்த உதவியில கட்டப்பட்ட படகு அண்மையில் ஊர்காவற்றுறைத் துறைமுகத்தில் கட்டப்பட்டிருந்த வேறொரு படகுடன் மோதியதை அடுதது நீர் உள்புகுந்து கடலில் மூழ்கியது. இதனால், அம்புலன்ஸ் படகுச் சேவையை ஆரம்பிப்பது தாமதமாகியது.

தற்போது மீண்டும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை படகின் வெள்ளோட்டத்தை நடத்தி அடுத்தமாதம் முதல்வாரத்தில் இருந்து சேவையை ஆர[illegible]பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

குறிகாட்டுவானில் தரித்து நிற்கும் இந்தப் படகு நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு ஆகிய இடங்களில் உள்ள வைத்தியசாலை நோயாளர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைதது வரும் பணியில் ஈடுபடும்.

புங்குடுதீவு சுகாதார அதிகாரியாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வைத்தியர் தற்காலிகமாக வேலணை வைத்தியசாலையில் பணியாற்றுவார். அம்புலன்ஸ் படகு மூலம் தீவகங்களில் இருந்து அழைத்து வரப்படும் நோயாளர்களுக்கு அவர் முதலில் சிகிச்சைகளை வழங்குவார்.

அதன் பின் மேலதிக சிகிச்சைக்கு நோயாளர்கள் யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுவர் என்றும் - கூறப்பட்டது. (எ-3-13)

# குடாநாட்டில் தென்னைச் செய்கையை மேம்படுத்த 23 ஆயிரம் நல்லின நாற்றுகள்

## கமநல சேவை நிலையங்களில் நடுகை

அச்சுவேலி,ஜூன்26

யாழ்ப்பாணத்தில் தென்னைச் செய்கையை அபிவிருத்தி செய்யும் வகையில் 23ஆயிரம் நல்லின தென்னம் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன.

மாரிமழையை அடுத்து வரும் காலபோகத்தில் இவற்றை நடுகை செய்வதற்கு வசதியாக குடாநாட்டில் உள்ள எட்டு கமநல சேவை நிலையங்களிலும் நாற்று மேடைகள் அமைக்கப்பட்டுளளன.

நல்லூர் கமநல சேவை நிலையத்தில் 6ஆயிரம் தேங்காய்களும், புத்தூர் கமநல சேவை நிலையத்தில் 4ஆயிரம் தேங்காயகளும், சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் 4ஆயிரம் தேங்காய்களும், உரும்பிராய் கமநல சேவை நிலையத்தில் 3ஆயிரம் தேங்காய்களும்

கீரிமலை கமநல சேவை நிலையத்தில் 2ஆயிரத்து 500 தேங்காய்களும், தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் ஆயிரத்து 500 தேங்காய்களும், புலோலி, கைதடி கமநல சேவை நிலையங்களில் தலா ஆயிரம் தேங்காய்களும் நடுகை செய்யபபட்டு நாற்று மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கமநல அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டுள்ள விசேட நாற்று மேடைகளில் உற்பத்தி செய்யப்படும் நல்லின தென்னம்நாற்றுக்கள் எதிர்வரும் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் தென்னைச் செய்கையாளர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன என கமநல அபிவிருத்தி நிலைய அதிகாரி தெரிவித்தார். (எ-11)

# குடாநாட்டில் 21 வீதிகளை மீள் புனரமைக்க நிதி கிடைத்தது

யாழ்ப்பாணம்,ஜூன்26

முன்னுரிமைத் திட்டத்தின் கீழ் குடாநாட்டில் 21 வீதிகள் மீள்புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மேற்படி வீதிகளை மீள் புனரமைப்புச் செய்வதற்கான நிதியினை நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு யாழ்.மாவட்ட செயலகத்துக்கு வழங்கியுள்ளது.

நகரசபை, பிரதேசசபை என்ற பிரிவிற்கமைய நடைபெறவுள்ள இவ்வீதிப்புனரமைப்பு வேலைகள் அடுத்த மாதம்முதல் ஆரம்பமாகும் என யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நகரசபைகளின் கீழ் உள்ள 7 வீதிகளும், பிரதேச சபைகளின் கீழ் உள்ள 14 வீதிகளும் மீள் புனரமைப்புப் பணிகளுக்குள் உள்வாங்கப்படவுள்ளன.

இவ்வாறு முன்னுரிமையின் கீழ் தெரிவு செய்யப்பட்டு மீளபுனரமைப்புச் செய்யப்படவுள்ள நகரசபை வீதிகளின் விவரம் வருமாறு:-

சுன்னாகம் மின்சாரநிலைய வீதி, உடுவில் லவ்லேன், பருத்தித்துறை கடற்கரை வீதி (4ஆம் குறுக்குத்தெரு), கரணவாய் மத்தி சோதி வீதி, சங்கானை நகரசபை வீதி, சாவகச்சேரி மண்டுவில் அம்மன் கோயில் வீதி, மண்டுவில பிள்ளையார் வீதி.

பிரதேச சபைகளுக்கு உட்பட்ட நெடுநதீவு கலாமுனை வீதி, ஊர்காவற்றுறை வல்லியப்பர் கோயில வீதி, காரைநகர் திக்கரை முருக மூர்த்தி கோயில் வீதி, வேலணை இராசையா வீதி, அராலி கிழக்கு வாணர் வீதி, சுழிபுரம் கம்மாலை வீதி, நவாலி வை.எம்.சீ.ஏ. வீதி, மல்லாகம் மத்தி முகாந்திரம் லேன், உரும்பிராய சிவன் வீதி, உசன் விடத்தற்பளை வீதி, மட்டுவில் மத்தி வைரவர் கோயில் வீதி, மீசாலை வடக்கு வேம்பிராய் ஸ்ரீ பரமானந்தர் வீதி, போக்கறுப்பு நித்தியவெட்டை வீதி, நாச்சிமார் கோயில் சக்கோடை வீதி ஆகியனவும் மீள்புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இவ்வீதிகளின் புனரமைப்பு வேலைகள் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையின் பொறியியலாளர் மற்றும் சிரேஷ்ட தொழில்நுட்ப அலுவலர் ஆகியோரின் மேற்பார்வையில் நடைபெறும் என யாழ்.செயலக திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார். (எ-6-185)

# கூட்டுறவாளர் தினத்தையொட்டி கொடிகளைப் பறக்கவிடுக!

அரியாலை,ஜூன்26

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களிலும் ஜூலை மாதம் தொடக்கம் கூட்டுறவுக் கொடியைப் பறக்க விடுமாறு மாவட்டக் கூட்டுறவுச் சபை கூட்டுறவு அமைப்புககளைக் கேட்டுள்ளது.

கூட்டுறவு நிறுவனங்களிலும் மற்றும் சங்கக்கிளைகள், சங்கங்களின் வாகனங்களிலும் கூட்டுறவுக் கொடியைப் பறக்க விடுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் 82 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடுவதற்கு கூட்டுறவு அமைப்புக்கள் தயாராகி வருகின்றன. (10-17)

## பொதுக் கட்டடச் சுவர்களில்

# விளம்பரச் சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடுப்பது அவசியம்

குருநகர்,ஜூன்26

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் பொதுக் கட்டடங்களின் சுவர்களில் விளம்பரச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றமை தொடர்பாக பலத்த விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

தனியார் கல்வி நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் போன்றன ஏட்டிக்குப் போட்டியாக இத்தகைய விளம்பரச் சுவரொட்டிகளை ஒட்டி வருவதனால் இச்சுவர்களின் அழகு கெட்டு விடுகின்றது. விளம்பரங்களை ஒட்டுபவர்களும் புதிதாக வர்ணம் தீட்டப்பட்ட பாடசாலைகள் மற்றும் பொதுக் கட்டடங்களின் மதிற்சுவர்களையே கூடியளவு பயன்படுத்தி வருகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

இவ்வாறு ஒட்டப்படுவதை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது. அண்மையில் யாழ்.செயலகத்தின் மதிற்சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த இத்தகைய விளம்பரச் சுவரொட்டிகள் செயலக ஊழியர்களால் கிழித்தெறியப்பட்டன. (4-51)

## நாளை

ஆனி 13
ஞாயிற்றுக்கிழமை
(27.06.2004)
திதி : நவமி
காலை 6.29 வரை
தசமி
பின்னிரவு 4.48வரை
நட்சத்திரம் : சித்திரை
மாலை 06.38 வரை.
சுபநேரம்: 8.55- 10.25
ராகுகாலம்: 4.25 - 5.55
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

சிலர் காதலுக்காக எதையும் தியாகம் செய்வார்கள். சிலர் அந்தக் காதலையே தியாகம் செய்து விடுவார்கள்.

# மில்லர் சதுக்கத்தில் சிரமதானம்

வடமராட்சி,ஜூன்26

கரும்புலிகள் தினத்தையொட்டி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உள்ள கட்டன் மில்லரின் உருவச்சிலை அமைந்துள்ள மில்லர் சதுக்கம் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டுவருகிறது. இதேவேளை கரும்புலிகள் தினத்தை எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்க, இதற்கான ஏற்பாட்டுக் குழு உரிய ஏற்பாடுகளைச செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. எழுச்சி விழாவுடன் விளையாட்டுப்போட்டிகளும் நடத்தப்படவுள்ளன. (10-173)

# நல்லொழுக்க சாரதி வாரத்தையொட்டி யாழ்.:மத்திய கல்லூரியில் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,ஜூன்26

நல்லொழுக்க சாரதி வாரத்தையொட்டி யாழ்.மத்தியகல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவின் சாரதியப் பயிற்சிப் பிரிவு மற்றும் கல்லூரியின் சேவைக்கழகங்கள் ஆகியவற்றின் ஏற்பாட்டில் பல்வேறு கருத்தரங்குகளும் விரிவுரைகளும் நடைபெற்று வருகின்றன.

கடந்த 21ஆம் திகதியிலிருந்து நாளை மறுதினம் வரை பிற்பகல் 3மணி தொடக்கம் 6மணி வரை மேற்படி கல்லூரியில் நடைபெற்று வரும் இந்நிகழ்வில் பல்வேறு திணைக்களங்கள், சங்கங்கள், அமைப்புக்கள் மற்றும் படையணிகளிலிருந்து பலர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கி வருகின்றனர்.

இந்நிகழ்வில் வாகன உரிமையாளர்கள், சாரதிகள், சாரதியப் பயிற்சி பெறுபவர்கள், சாரதிய பயிற்சிக்குச் செல்ல விரும்புபவர்கள் போன்ற அனைவரும் கலந்து பயன்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-ரி)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


## விற்பனைக்கு

தரமான Prima Broiler அதி விசேட பேட்டுக் குஞ்சுகள் 05.07.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். பருத்தித்துறைக் கிளையிலும், Sudd Farm (வட்டுக்கோட்டை)இலும் பெற்றுக் கொள்ளலாம். முன்கூட்டி பதிவுசெய்யவும். க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33483)

2½ பரப்புக் காணி (கிணற்றுப் பங்குடன்) கோண்டாவில் மேற்கில் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 4590959. (33478)

DASHHUND பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.உருத்திரன், 82/7, செட்டித்தெரு, நல்லூர், யாழப்பாணம். (33481)

Pure Bred Dobermann, Pincher ஆண் நாய்க்குட்டி Dachshund நாய்க்குட்டிகளும் உடன் விற்பனைக்குண்டு. க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33482)

சாவகச்சேரி, டச்சு வீதி, மருதடிச் சந்தியில் வீடு கட்டுவதற்குகந்த தென்னை வளம் உள்ள 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.சி.கமலநாதன், கந்தசாமி கோயில் வீதி, சங்கத்தானை.
T.P.: 0777 676593. (33418)

பல்கலைக்கழக, A/L மாணவர்களுக்குரிய பௌதிகவியல், கணித புள்ளிவிபரவியல் புத்தகங்கள் விற்பனைக்குண்டு. ஆங்கில, தமிழ்மொழி புத்தகங்கள், நாவல்களும் உண்டு. தொடர்பு: சனி, ஞாயிறு மட்டும். ஆசிரியர் R.பாலசுப்பிரமணியம் Bsc. (cey), 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (33454)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தஞ்செய்தது ரூ.260/=. கல்பேட்ஸ் (தேறிய நிறையில்) ரூ.160/= எந்த நேரமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: தாசன், 158/5, கோயில்வீதி, யாழ்ப்பாணம். (33486)

## தேவை

ஓய்வூதியம் பெறும் தம்பதியினருக்கு யாழ். மாநகரசபையை அண்டிய பகுதியில் சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: விளம்பர இலக்கம் 2310, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (33494)

**Colombo விவேகானந்த நடன ஆசிரியையும் Moon Beautde Care நடத்துநரும் ஆகிய திருமதி B.அகிலாவின் Dip. in Beauty Culture Course** ஜூலை முதல்வாரத்தில் ஆரம்பம். ஜூன் 30ஆம் திகதிக்கு முன் பதிவு செய்தவர்களுக்கு நாகஜடை செய்தல் (Bouquets Setting) கொண்டை மாலை, ராக்கொடி மாலை, Hair Spray செய்தல் இலவசமாகக் கற்றுக்தரப்படும்.

*பதிவுகளுக்கும், விவரங்களுக்கும்:*

1. எடிசன் அக்கடமி
K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
2. அச்சுவேலியில்
க.தபோதினி
(லக்ஸ் கொமினிக்கேசன் முன்)
3. உடுப்பிட்டியில்
மயூகொமினிக்கேசன்
(யூனியன் அருகில், இமையாணன்)
4. பருத்தித்துறையில்
C.M.E. Tuhun Center,
ஐயனார் வீதி
5. கரவெட்டியில்
டால்டன் கல்வி நிறுவனம்,
துன்னாலை.
6. தென்மராட்சியில்
ஏசியன் கல்வி நிறுவனம்,
புத்தூர் சந்தி, மீசாலை

வெளிநாடு செல்லும் பெண்களுக்கும். இத்துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் ஏற்ப வடிவமைக்கப்பட்ட 3 மாத கால பயிற்சி முடிப்பவர்கட்கு Diploma Certificate வழங்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு ஆசிரியையிடம் தொடர்புகொள்ளவும்.
**0777 570138**
(C/35826) **0112 544952** (42)


## முன்பள்ளிக் கண்காட்சி

வடமராட்சி,ஜூன்26

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் மற்றும் வடமராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் இணைந்து நடத்தும் முன்பள்ளிக் கண்காட்சி இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை. சத்தியசீலன் தலைமையில் நடைபெறும்.

இக்கண்காட்சியில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவநேசன் பிரதம விருத்தினராகவும் யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா, யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-173)


**College Of Keen**
128/4, Palaly Rd., Thirunelvely

**A/L 2006**
Che. - பொது இரசாயனம்
Sat - Sun - 3.30 p.m.
By: **Mr.K.Nithan**
Bio. - உயிர்பல்வகைமை
Sat - Sun - 5-6 p.m.
By: **Mr.S.Selvan**
Phy. - அலைகளும்,அதிர்வுகளும்
Wed. - Thur.
By: **Mr.Kabilan** 4-5 p.m.
English For A/L & University Students
By: **Mr.Mohan, Robin**
**Mr.S.Arulanantham**
தரம் 3 - **O/L** வரை அனைத்துப் பாடங்களும் அனுபவமிக்க ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன.
**A/L 2006** கணித, விஞ்ஞான, வாத்தக வகுப்புகள் நடைபெறுகின்றன.
"மாணவர்களின் உயர்வே எமது நோக்கம்"
(33487)


## இரண்டாவது பிறந்தநின வாழ்த்துக்கள்

### செல்வி கிஷானா ஜெயசீலன்



ஜெயசீலன் - பிரதீபா தம்பதிகளின்
செல்வப் புதல்வி

**கிஷானா**

தனது இரண்டாவது
பிறந்த தினத்தை லண்டனில்
உள்ள தனது இல்லத்தில்
இன்று (26.06.2004)
சனிக்கிழமை
வெகு விமரிசையாகக்
கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, றதி அத்தை, பிரசன்னா மாமா, ஜேர்மனியில் வசிக்கும் இராஜேந்திரன் மாமா குடும்பத்தினரும், தவசீலன் பெரியப்பா குடும்பத்தினரும், குணசீலன் பெரியப்பா குடும்பத்தினரும், கொழும்பில் வசிக்கும் ஆம்ஸ்ரோங் சித்தப்பா, சுபிச்சித்தி குடும்பத்தினரும், கொக்குவிலில் வசிக்கும் கைலாயநாதன் மாமா குடும்பத்தினரும், கல்வியங்காட்டில் வசிக்கும் யோகராஜா மாமா குடும்பத்தினரும், இத்தாலியில் வசிக்கும் ஜெயகாந்தன் சித்தப்பா குடும்பத்தினரும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நாச்சியம்மன் துணையுடன் பல்கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
யாழ்ப்பாணம். (33489) (40-1917) தியாகராஜா நோனா.

## முதலாவது பிறந்தநின வாழ்த்து




22. வெள்ளந் தெரு. யாழ்ப்பாணம்.

இல.22 வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
**இராஜேந்திரன் - ஞானரஞ்சிதா**
தம்பதியரின்
செல்வப் புதல்வர்களான
செல்வன் **அபிலயன்** செல்வன் **அபிராஜ்**
இருவரும்
தங்களது முதலாவது பிறந்த தினத்தை இன்று (26.06.2004) சனிக்கிழமை தமது இல்லத்தில் வெகு சிறப்புடன் விமரிசையாகக் கொண்டாடுகின்றனர்.
இவர்களை அன்பு அம்மா, அப்பா, அக்காமார், அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம்வல்ல நல்லூர்க்கந்தன் அருள் பெற்று சீரோடுஞ் சிறப்போடும் நீடூழி காலம் வாழ்க வாழ்கவென மனமுவந்து வாழ்த்துகின்றார்கள்.

(33479) -அப்பப்பா.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உளம் மகிழ்ந்து உமைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்!
உள்ளத்தால் உயர்ந்து எமை உய்விக்கும்
உன்னத வங்கியாளர்



திருவாளர் **துரைசிங்கம் ரகு** அவர்கள்
(ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கி கிளை முகாமையாளர்)
இட்டமுடன் இதய சுத்தி இன்முகம்
கிட்டாதாவென எண்ணியிருந்திட்டோம்
கிட்டிடும் என்றுயர் பதவி பெற்றின்று
விட்டதன்று தொட்டதென்று மீண்டும் யாழ்
வட்டத்து பிராந்திய முகாமையாளராகப்
பட்டமும் பதவியுயர்வும் பெற்றதுடன்
தொட்டுயர்வு பலபெற்று நீடுழி வாழ்க!
இட்டசித்தி நல்கும் இறையாசி பெற்று வாழ்க!
வாழ்க! வாழ்க!
சிறி சிவாஞ்சனா நகைமாடம்,
SRI SIVANCHCHUNA,
பட்டம் வெட்டும் நிலையம்,
உரிமையாளர்: சிவமூர்த்தி,
149/A, Kasthuriyar Road, Jaffna. Phone: 222 5481
(C/35786)(42-19-17-24)

## மரண அறிவித்தல்

### திருமதி இலட்சுமிப்பிள்ளை தம்பிமுத்து

அச்சுவேலி, இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிப்பிள்ளை தம்பிமுத்து 24-06-2004 வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து தம்பிமுத்து அவர்களின் அன்பு மனைவியும் நாகேஸ்வரி, கதிரமலை (கனடா / சந்நிதிவேல் லொறி), தேவராசா (மிதிலா லொறி), நடராசா, மகேந்திராதேவி, சரஸ்வதி, அம்பிகாவதி ஆகியோரின் அருமைத் தாயாரும் சிவநாயகம், பார்வதிப்பிள்ளை (கனடா), மகாலட்சுமி, மல்லிகாதேவி, கந்தசாமி (விசுவமடு), கந்தசுவாமி (சுகி வெதுப்பகம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2004) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் அச்சுவேலி இடைக்காடு சாமித்திடல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*செம்பிகலட்டி,*
*இடைக்காடு, அச்சுவேலி.*
(33493)(24-19-17)
தகவல்: சு.இ. கந்தசுவாமி (மருமகன்).


வடமராட்சியில்
Sri Vallipuraalvar Thevasthana
**Universal Education Center**
Sri pathmanathan Bangalow
Off Point Pedro Road
Manthikai, Puloly.
T.P 021-2263860
புதிய பிரிவுகள் ஆரம்பம்



இலாப நோக்கமல்ல
சேவை நோக்கமே
Week Days
01/07/2004
Weekend Days
03/07/2004

# அமெ.படைகளுக்கு போர்க் குற்றங்களிலிருந்து விலக்களிக்கும் பிரேரணையை ஐ.நா.நிராகரித்தது

நியூயோர்க்,ஜூன்26

போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச நீதிமன்ற விசாரணையில் இருந்து அமெரிக்க இராணுவ வீரர்களுக்கு விலக்கு அளிக்க ஐநா. பாதுகாப்புச்சபை மறுத்துவிட்டது.

இது தொடர்பாக பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணை நிராகரிக்கப்பட்டது.

ஈராக் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் துன்புறுத்தப்படுவதால் இத்தீர்மானத்தை ஏற்க பாதுகாப்புச் சபையில் உறுப்பு நாடுகள் பல அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டன.

தர்மசங்கடமான இந்நிலையில், அத்தீர்மானத்தை நிறைவேற்றுமாறு வலியுறுத்தப் போவதில்லை என்று ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கான அமெரிக்காவின் துணைத் தூதர் ஜேம்ஸ் கன்னிங்காம் கூறியுள்ளார்.

மிகவும் மோசமான முறையில் விசாரணை நடத்தப்படும் என்ற காரணத்துக்காக, 2 ஆண்டுகளுக்கு அமெரிக்க இராணுவத்தினருக்கு சிறப்பு அந்தஸ்து பெறப்பட்டிருந்தது.

அமெரிக்கா கொண்டு வந்த இத்தீர்மானம் நிறைவேறவேண்டும் எனில 9 வாக்குகள் பெறவேண்டும். இந்தளவு ஆதரவுபெற அமெரிக்காவினால் முடியவில்லை.

அமெரிக்காவின் தீர்மானத்துக்கு பாதுகாப்புச் சபையில் இடம்பெற்றுள்ள எத்தனை உறுப்பு நாடுகள் ஆதரவு தெரிவித்தன எனத் தெரியவில்லை. எனினும், இத்தீர்மானத்துக்கு அமெரிக்கா உட்பட 5 நாடுகளால் மட்டுமே வாக்கு அளித்திருக்க முடியும்.

ஐநா. தீர்மானம் வாக்குக்கு விடப்பட்ட போது சில நாடுகள் அதில் பங்கேற்கவில்லை.

அமெரிக்கா கொண்டு வந்த இத்தீர்மானத்துக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று முன்னதாக ஐ.நா. செயலாளர் கோபி அனான்கூறியிருந்தார்.

## சவூதிக்கு பிரிட்டிஷ் சிறப்புப்படை!

ரியாத்,ஜூன்26

சவூதி அரேபியாவிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்திற்கு பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் அங்கு சிறப்புப் படையினர் 25 பேர் கொண்ட குழுவை பிரிட்டன் அனுப்பியுள்ளது.

மேலும் அங்குள்ள வெளிநாட்டவரை ஒட்டுமொத்தமாக வெளியேற்றும் திட்டத்திற்காகவும் இந்தப் படைகள் அனுப்பப்பட்டிருப்பதாக லண்டனில் வெளியான நாளிதழ் செய்தி தெரிவிக்கிறது.

சவூதி அரேபியாவில் தற்போது பதற்றமான நிலைமை காணப்படுவதாக பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் அந்த நாளிதழுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். (8)

## இந்திய செயற்கைக் கோளில் இஸ்ரேலின் அதிநவீன கமரா

ஜெருசலேம்,ஜூன்26

இந்தியாவில் தயாரிக்கப்பட்டு வரும் ஜிசாட்-4 செயற்கைக்கோள் விரைவில் விண்ணில் செலுத்தப்படவுள்ளது. அதில் இஸ்ரேலின் அதிநவீன கமரா ஒன்று பொருத்தப்படவுள்ளது.

இந்தக் கமராவைத் தயாரித்து செயற்கைக் கோளில் பொருத்தும் பணி தொடர்பாக தனியார் நிறுவனம் ஒன்றுடன் இஸ்ரேல் அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.

இத்தகவலை இஸ்ரேல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் எலீஸர் தெரிவித்தார்.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் விவசாயத் துறைகளில் இணைந்து பணியாற்றுவது தொடர்பான ஒப்பந்தத்தில் இந்தியாவும் இஸ்ரேலும் ஏற்கனவே கையெழுத்திட்டுள்ளன.

அறிவியல் ஆய்வுக்காக ஜிசாட்-4 செயற்கைக் கோளில் பொருத்தி விண்ணில் செலுத்தப்படும் இந்த கமரா எடுத்து அனுப்பப்படும் படங்கள் அறிவியல் ஆய்வுக்காகப் பயன்படுத்தப்படும்.

வானியல் ஆய்வு தொடர்பாகக் கூட்டாக ஆராய்ச்சி மேற்கொள்வது தொடர்பான ஒப்பந்தம் இந்தியாவுக்ும் இஸ்ரேலுக்கும் இடையே 2003 ஆம் ஆண்டு டிசெம்பரில் கையெழுத்தானது. (8)

## ஈராக்கிய தேசிய மாநாட்டு அழைப்பை நிராகரித்தார் சதார்



ஈராக்கிய தேசிய மாநாட்டில் பங்கெடுத்துக்கொள்ளும்படி விடுக்கப்பட்டிருந்த அழைப்பை ஷியா முஸ்லிம் தலைவர் மெக்ராடா சதார் நிராகரித்தார். ஆயிரக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்ட தமது அமைப்புக்குப் போதிய அங்கீகாரம் வழங்கப்படவில்லையென்று அவர் கூறியுள்ளார்.

மெக்ராடா சதார் பிரிவினருக்கு மாநாட்டில் ஓர் ஆசனம் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த மாநாட்டில்தான் ஈராக்கிய அரசுக்கான ஆலோசகர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

ஈராக் முழுவதுமாக ஏறத்தாழ ஆயிரம் பேருக்கு இந்த மாநாட்டில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் இடைக்கால நிர்வாகத்துக்கு ஆலோசனை வழங்குவதற்கான தேசிய சபையொன்று தெரிவுசெய்யப்படும். தேர்தல்கள் முடியும்வரை இந்த சபை செயற்படும். 2005ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை அங்கீகரிக்கும் அதிகாரமும் இங்கு உண்டு. (ப-8)

## சீனாவில் பலத்த மழை நிலச்சரிவில் 54 பேர் பலி!

சீனாவின் மத்திய பகுதியிலுள்ள ஹுனான் மாகாணத்தில் கடந்த ஒரு வாரமாகப் பலத்த மழைபெய்து வருகிறது. ஆங்காங்கே நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது. ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி 30 இற்கும் மேற்பட்ட கிராமங்களை மூழ்கடித்து விட்டது. இந்த மழை வெள்ளத்துக்கு இதுவரை 27 பேர் பலியாகிவிட்டனர்.

இன்னும் 27 பேரை காணவில்லை. அவர்களும் வெள்ளத்தில் மூழ்கி இறந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. வெள்ளம் சூழ்ந்த கிராம மக்கள் ஒரு லட்சத்து 68 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். (8)

## குண்டுவெடிப்பில் பலியானோர் தொகை 100 ஆக உயர்ந்தது!



பக்தாத்,ஜூன்26

ஈராக்கில் அல்-கெய்டா ஆதரவுத் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் ஒரேநாளில் பக்தாத், பலூஜா, மொசூல, ராமடி ஆகிய நான்கு நகரங்களில் தொடர் குண்டுவெடிப்புத் தாக்குதல் நடத்தினார்கள். ஆங்காங்கே கார் குண்டுகள் வெடித்தன.

இந்தத் தாக்குதலில் பலியானவாகள் எண்ணிக்கை இப்போது 100 ஆக உயர்ந்துள்ளது. காயமடைந்தோர் தொகை 320. அமெரிக்க ஹெலிக்கொப்ரர் ஒன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டது. முக்கிய அரச கட்டடங்கள், எண்ணெய் அலுவலகங்கள் இராணுவ முகாம்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப் போவதாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து அமெரிக்க ஹெலிக கொப்ரர்கள், முக்கிய கட்டடங்கள் மீது தொடர்ந்து பறந்து சென்று கண்காணித்து வருகின்றன. (8)

## போலி உதிரிப்பாகங்கள்



மணிலா,ஜூன்26

பிலிப்பைன்ஸ் நாட்டில் பிரபல 'ஹொண்டா' கார் நிறுவனத்தின் உதிரிப்பாகங்கள் உற்பத்தியாகின்றன. அதே நேரத்தில் போலி உதிரிப்பாகங்களையும் இவர்கள் தயாரிக்கிறார்கள். இந்த போலி உதிரிப்பாகங்களால்தான் விபத்துக்கள் அதிகமாக நடக்கின்றன.

இதைத் தொடர்ந்து போலிக்கார் உதிரிப்பாகங்களைக் கண்டுபிடிக்கும வேட்டையில் பொலீஸார் ஈடுபட்டனர். கடந்த 6 மாதத்தில் 6 கோடி மதிப்புள்ள போலி உதிரிப்பாகங்கள் பிடிப்பட்டன. மணிலா நகரில் இவற்றை மொத்தமாகப் போட்டு அதை புல்டோசரை ஏற்றி நொறுக்கினார்கள் பொலீஸார்.

போலி பொருள்களை இப்படி நொறுக்கினால் போதாது. போலிப்பாகங்களைத் தயாரித்தவர்களையும் நொறுக்கவேண்டும் என்கிறார்கள் போலிகளைக் கண்டு ஏமாந்தவர்கள். (8)

## ஈராக்கில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதை ஒப்புக்கொள்கிறது அமெரிக்க அரசு

### அதனை உறுதிசெய்கிறார் கொலின் பவல்



வாஷிங்ரன்,ஜூன்26

ஈராக்கிய நிர்வாக அதிகாரம் கைமாறுவதற்கு ஓரிரு நாள்களே இருக்கும் நிலையில் அங்கு கிளர்ச்சியாளர்களுடன் மிகமோசமான பிரசசினைகளை எதிர்நோக்கியுள்ளதை அமெரிக்கா ஏற்றுக்கொண்டுள்ளது.

கடந்த வியாழனன்று ஈராக்கிய நகரங்களில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய மிகக்கொடூரமான தாக்குதல்களில் 100 பேர் வரை கொலையுண்டுள்ள நிலையில் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின் பவல் கிளர்ச்சி செயற்பாடுகளை அமெரிக்கா குறைத்து மதிப்பிட்டுவிட்டது. அது பெரும் பிரச்சினையாக மாறிவிட்டிருக்கிறது என்று கூறியுள்ளார். எவ்வாறாயினும் பாதுகாப்பு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என்றும் அவர் உறுதி கூறினார்.

இதேசமயம் ஈராக்கிய இடைக்கால நிர்வாகத்தின் பிரதம அமைச்சர் இயாத் அல்லாவி இது பற்றிக் கருத்து வெளியிடுகையில் கிளர்ச்சிகள் ஒடுக்கப்படும் என்று சூளுரைத்துள்ளார். வியாழக்கிழமை மிக மோசமான தாக்குதலுக்குள்ளான நகரம் மொசூல் என்பதாகும். அங்கு மட்டும் 62 பேர் கொல்லப்பட்டு, 220 பேர் வரை காயமடைந்துள்ளனர் என்று அமெரிக்க இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

அதிகாரம் கையளிக்கப்படுவதற்கான காலப்பகுதியில் கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும் என்று எதிர்பார்த்ததாக பிரதமர் அல்லாவி கூறினார்.

பி.பி.ஸிக்கு கொலின் பவல் அளித்த பேட்டியில் கிளர்ச்சிக்காரர்கள் அதிகாரம் கைமாறுவதை சிதறடித்து விடலாம் என்ற நினைப்பில் இதை ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தக் காலப்பகுதியில் நாங்கள் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகளை குறைத்து மதிப்பிட்டு விட்டோம் என்றே நினைக்கிறேன். இப்பொழுது நாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பாரதூரமானதுதான். ஆனால், அதை நாங்கள் சமாளிப்போம் என்றார். (ப-8)

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

உப பிடிபாடுகளாகச் சிக்கி இறக்கும் சிறிய திமிங்கிலங்கள், டொல்பின்கள் மற்றும் கடற்பன்றிகளின் எண்ணிக்கை மட்டுமே ஆண்டுக்கு 300,000 இற்கும் அதிகம் ஆகும்.

# 26 அகதிகள் வருகை

தமிழ்நாடு, இராமேஸ்வரத்திலிருந்து இலங்கை திரும்பிக் கொண்டிருந்த 26 தமிழ்அகதிகள் கடந்த புதன கிழமை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த அகதிகளும் அவர்களை அழைத்துவந்த மூன்று உள்ளூர் படகோட்டிகளும் தலைமன்னார் பொலீஸாரினால் மன்னார் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அகதிகளை விடுதலை செய்த மாவட்ட நீதிபதி என்.எம்.அப்துல்லா படகோட்டிகளை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

(ஐ-9-7)

## அறிவித்தல்

### தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்

வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை (27.06.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாங்கப் பணிமனையில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி அறியத்தருகின்றோம்.

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை. - செயலாளர்.

(33467)(43-19-34-17)


## e-Quals City & Guilds

**வடகிழக்கு மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்**
**சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்**

உலகின் 102 நாடுகளினால் அங்கீகரிக்கப்பட்ட **London City & Guilds** இன் கணனிச் சான்றிதழை தற்போது யாழ் தொழிநுட்ப நிறுவனத்தின் கீழ் STP கணனி நிறுவனமூடாகப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு வடகிழக்கு மாணவர்களுக்குக் கிடைத்துள்ளது. இதன்மூலம் வெளிநாட்டு வேலை வாய்ப்பை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் உள்ஞூரிலும் உங்கள் திறமைக்குக் களம் அமைக்கலாம்.

| | |
|---|---|
| Duration | 3 Months |
| Course Fee | 5250/- |
| Start | 03/07/2004 |

To Further details and Application form Please contact:
Principal, Jaffna Technical College. T.P:021-2225409/
Director, STP Computer World (Pvt,) Limited, Kantharmadam
T.P: 021-2222674

(ஏற்கனவே STP கணனி நிறுவனத்தில் கற்றுச் சான்றிதழ் பெற்றவர்களுக்கு கட்டணச் சலுகை வழங்கப்படுவதால் உடன் தலைமை நிறுவனத்தினூடாகத் தொடர்பு கொள்ளவும்)


## 21 ஆம் நாள் நெஞ்சைவிட்டகலா நினைவஞ்சலி



அமரர்

### கந்தையா மகேஸ்பரன்

**B.Sc.**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்,
சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

எமது கல்லூரியில் 24ஆண்டுகள் ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் எமது சங்கத்தில் நீண்டகாலத் தலைவராகவும் இருந்து அரும்சேவை ஆற்றி எமது உள்ளங்களில் நீங்கா இடம்பிடித்த அன்னாரின் பிரிவுகேட்டு அதிர்ச்சியும் ஆறாத்துயரமும் அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சங்கம்,
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

(33462)(34-19-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
12
-
12
-
1942.



இறப்பு
27
-
05
-
2004

### திருமதி இரத்தினம் செல்லாச்சி

அன்புக்கோர் அணிகலனாய் அவனியிலே வாழ்ந்தீர்!
இன்ப வாழ்வில் என்றுமே இணையின்றித் திகழ்ந்தீர்!
என்றும் உங்கள் நினைவு இதயத்தில் கனக்கிறதே
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

இன்று (26.06.2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரது நினைவு அஞ்சலி நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

- குடும்பத்தினர்.

அல்லியவத்தை,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

(33406)(39-19-34-17)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்26

சர்வதேச கல்வியகம், பிரடரிக் ஈபேட் மன்றம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் என்பன இணைந்து "தொழிற்சங்க தலைமைத்துவம்" எனும் தலைப்பிலான கருத்தரங்கினை கிளிநொச்சியில் நடத்தவுள்ளன. இன்றும், நாளையும் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இக்கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இககருத்தரங்கில் வள அணியினராக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் த.மகாசிவம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கச் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், தீவக வலயத்துக்கான ஆசிரியர் சங்கத் தலைவர் பொ.அருணகிரிநாதன், மகளிர் பிரிவுத் தலைவர் திருமதி ஈ.ஜெ.மகேந்திரா ஆகியோர் பங்கு கொள்ளவுள்ளனர்.

(ஒ-12)

## இளம் பெண்ணின் முண்டம் ஒதுங்கியது

மன்னார்,ஜூன்26

அடையாளம் காணப்படாத இளம் பெண்ணின் சடலம் ஒன்று, தலையிலலாமல முண்டமாகக் கடந்த புதனன்று மன்னார் கடற்கரையோரத்தில் - பேசாலைக்குப் பக்கத்தில் உள்ள நடுக்குடா கிராமத்துக்குச் சமீபமாகக் கரை ஒதுங்கியது.

மன்னார் நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா, முண்டம் ஒதுங்கிய இடத்துக்கு நேரில்சென்று மரண விசாரணைகளை நடத்தினார். முண்டத்தை அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு அவர் உத்தரவிட்டார்.

இச்சடலம், கடந்த புதன்கிழமை மன்னார்க் கடலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் படகுவிபத்தில் பலியான இலங்கைத் தமிழ் அகதி ஒருவருடையதாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

(ஐ-9)

## ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்26

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுககுக் கல்விகற்பிக்கும் வணிகக கல்வி மற்றும் கணக்கீடு ஆசிரியர்களுககெனப் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவான கருத்தரங்கு ஒன்று சிரேஷ்ட விரிவுரையாளர்களால் நடத்தப்படவுள்ளது.

மேற்படி கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முகாமைக்கற்கைகள் வணிகபீட விரிவுரை மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் பங்குபற்றுபவர்களுக்கான சான்றிதழ்களும், புதிய பாடத்திட்டத்திற்கான கைந்நூல்களும் இலவசமாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆசிரியர்களும் மற்றும் ஆர்வலர்களும் இதில் பங்குபற்றலாம்.

(10-ரி)


## விற்பனைக்கு

**இல 15/8, ஓட்டுமடம், செபஸ்ரியார் வீதியில் 5 பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடனும் அமைந்த மாடி வீடு விற்பனைக்குண்டு.**

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
**த.கனகரத்தினம்**
**இல.234/6 , செபஸ்ரியார் வீதி,**
**ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**

(33461)(40)

## விற்பனையாளர் தேவை

**யாழ்.நகரில் இயங்கும் பிரபல இரும்புக்கடை ஒன்றிற்கு அனுபவமுள்ள விற்பனையாளர் தேவை:**
**தொடர்பு:**
**விளம்பர இல: 2311,**
**மே/பா, உதயன்.**

(33453)(40)

## தேவை

றொசானி காமன்ஸ்க்கு தையல தெரிந்த - பெண்கள் தேவை. கடடிங் வெட்டத் தெரிந்தவர்களும் தேவை. தொடர்பு:
**றொசானி காமன்ஸ்**
263/1, இராஜகாரியா லேன்,
மானிப்பாய்.
(33165)


## 'நீர்ப்' உதவியுடன் ஆஸ்பத்திரிகளுக்கு அம்புலன்ஸ் வாகனங்கள்

'நீர்ப்' உதவியின் கீழ் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைக்கு மூன்று அம்புலன்ஸ் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவை வேலணை மாவட்ட வைத்தியசாலை, வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியாசாலை, காரைநகர் அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றுக்கு நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு வழங்கப்படவுள்ளன.

திருகோணமலையில் இயங்கும் மாகாண சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சில் இருந்து அடுத்த வாரத்தில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும் என யாழ் சுகாதாரத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ-51)

# வாசகர் திருமுகம்

## நோயாளர்கள், ஓய்வூதியர்களின் இன்னல்கள் தொடர்வதா?

குடாநாட்டில் மக்கள்படும் இரண்டு முக்கியமான இன்னல்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

★ **கிளினிக்குக்குச் செல்லும் மக்கள் -**

யாழ். வைத்தியசாலைக்கு கிளினிக்குக்கு ஏராளமான நோயாளர்கள் செல்கிறார்கள். இவர்களில் அநேகர் பல மைல்களுக்கு அப்பால் இருந்து அதிகாலை 4 மணிக்கெல்லாம் புறப்பட்டு வைத்தியசாலை வாயிலுக்கு (Gate) வந்துவிடுவார்கள். ஆனால், இந்த நோயாளர்கள் எல்லோரும் 6 மணிக்கு வாயில் திறக்கப்படும்வரை மழையோ, பனியோ, புயலோ எது இருந்தாலும் காக்க வைக்கப்படுகின்றனர். இருதய நோயாளர்கள், கண்நோயாளர்கள், அழுத்த (Pressure) நோயாளர்கள் உட்பட அநேகர் இதில் அடங்குவர். இந்த அவலத்தை நீக்க வாயிற் பாதுகாவலர் (Security Guard) ஒருவரை நியமித்து வருபவர்களை உள்ளே உட்கார வைக்க நடவடிக்கை எடுக்கக்கூடாதா?

★ **ஓய்வூதியர்கள் -**

ஓய்வூதியர் என்பதன் பொருள் என்ன? தன்னால் இயன்றவரை மக்களுககோ, நாட்டிற்கோ சேவைசெய்து இயலாத காலத்தில் ஓய்வு எடுப்பவரே ஓய்வூதியர். ஆனால், சில நாள்களுக்கு முன்பு நடந்த சம்பவம் மிகவும் கவலைக்குரியது. ஓய்வூதியர்களின் ஓய்வூதிய அதிகரிப்பு நடவடிக்கைக்காக யாழ். உதவி அரச அதிபர் பிரிவுக்கு வரவழைக்கப்பட்ட எல்லா ஓய்வூதியர்களும் சுழல்படியில் (Spiral Stair case) இல் தலை சுற்றச்சுற்ற ஏற வைக்கப்பட்டனர். இந்தநிலை இன்னமும் தொடர்ந்து நடக்கிறது. இது எந்தவிதத்தில் நியாயமானது? ஓய்வூதியர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கத்திலா இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது?

இத்தகைய அவலங்கள் நீங்க, ஆவனசெய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பாதிக்கப்பட்ட நோயாளர், ஓய்வூதியர்**
**யாழ்ப்பாணம்.**

## நாடாளுமன்றத்தில் நடப்பதைப் பார்த்துக்கொண்டு இருப்பதா?

நாடாளுமன்றத்தில் பெரும் அமளி துமளி. மறுக்கிறார் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே - காயங்களுக்குள்ளான புத்த மதத் தலைவர்கள் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நாடாளுமன்றம் என்று கூறும்போது அது அகில இலங்கைக்குமான நன்மை, தீமைகளை எடுத்துரைக்கும் ஓர் அறிவியற்கல்லூரியாகவும், புனித ஸ்தலமாகவும், மக்கள் தத்தமது கருத்துக்களைப் பரிமாறி இனங்கண்டு, ஒன்றிணைந்து செயற்படும் ஓர் உன்னத ஸ்தானமாகவும் இருக்கும் என்பது யாரும் அறிநத விடயம். நாடாளுமன்றத்தில் கலாட்டா பண்ணுபவர்களை என்னவென்று அழைப்பது? நாடாளுமன்றத்தில் இவர்கள் பங்குபற்றத் தகுதியுடையவர்களா என்ற கேள்வி எழுகிறது. மக்கள் மன்ற அங்கத்தவர்கள் தாக்கப்படு வதும், தூஷிக்கப்படுவதும், விஷேசமாக மதகுருமார்கள் (புத்த பிக்குகள்) தாக்கப்படுவதும், ஏளனம் செய்யப்படுவதும் இலங்கை நாடாளுமன்றத்தில் சகஜமாகிவிட்டது. புனித சின்னமான செங்கோலைக் களவாடி ஒழித்து வைத்தல் நாகரிகமான செயலா? நாட்டின் கௌரவத்தை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை இச்செயலைச்செய்த கௌரவ நாடாளுமன்றப் பிரதி அமைச்சர் அறிவாரா? இதேவிதமான கலாட்டாக்களும், குழப்பங்களும், நாடாளுமன்றத்தில் நடந்தது இது முதற்றடவையல்ல. இப்படியான ஒரு சூழ்நிலையில் ஒருதமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டால் நிலைமை என்னவாகும்? நாடே குழப்பத்தில் மூழ்கியிருக்கும். பின்னர் நடக்கவேண்டியது கடவுளுக்குத்தான் தெரியும்.

இன்று புத்தபிக்குகள், நாளை நீங்கள் நடவாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

நம் நாடாளுமன்ற உறுப்பினர்களும், சமயத்தலைவர்களும், ஊடகவியலாளர்களும் மற்றும் மக்கள் அமைப்புகளும் இணைந்து புத்தபிக்குகள் தாக்கப்பட்டமையை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் ஒரு மாபெரும் ஆட்சேப ஊர்வலம் நடத்தினால் நம் தமிழனின் பண்பையும், கலாசாரத்தையும் மனிதநேயத்தையும், மனிதாபிமானத்தையும், பண்பையும் சமாதான மேம்பாட்டையும் சிங்களச் சகோதரர்கள் மத்தியில் மேம்படச்செய்யும். மனிதநேயம், அன்பு இதனால், நம் இரு இன மக்களிடையேயும் இன்பம் ஊற்றெடுத்து ஓடும்.

எந்தச் சமயமும் அன்பையும் சமாதானத்தையும் பற்றியே பிரதானமாக எடுத்துக்கூறியுள்ளன.

நல்ல சமாரியன் என்ற கதையில் காயப்பட்டு, அவஸ்தைக்குள்ளாகியவன் தன் எதிரியென்று தெரிந்தும் பலர் அக்காயப்பட்டவனை விலத்திச் செல்கையில் இந்த சமாரியன் தன்னால் ஆன சகல உதவிகளையும் செய்து நல்ல ஒரு தங்குமிடத்தில் அந்நோயாளியைச்சேர்த்து அவனை நன்றாகக் கவனிக்குமாறு விடுதிப்பொறுப்பாளரிடம் கூறிப் பணமும் கொடுத்துச் செல்கிறான் - அவனுடைய மனிதாபிமானத்தைப் போற்றாமலிருக்க முடியாது.

ஆகவே, மாணவர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள், புத்திஜீவிகள் ஒன்றிணைந்து மாபெரும் எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்தி இலங்கைவாழ் மக்களுக்கு நம் கலை, கலாசாரம், பண்பு, அன்பு, சமாதானம் என்பனவற்றை எடுத்துக்காட்டுங்கள். அதுவே நாம்செய்யும் சிறந்த செயற்பாடாகும்.

**டேவிட் தம்பிராஜா**
ஆசிரியர், இராசாவின் தோட்டம்.

# பாரம்பரிய மீனவரல்லாதவரும்

# இறால் வளர்ப்பில் ஈடுபடலாம்

## இலங்கையில் பண்ணை இறால் வளர்ப்புக்கு இருந்து வரும் சாதகமான சூழ்நிலைகள்

பண்ணை இறால் வளர்ப்புத் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக கடல் வள அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் கலாநிதி கே.சித்திரவடிவேலு வரைந்த கட்டுரை இது. இந்தக் கட்டுரையின் முதற்பகுதி கடந்த 10 ஆம் திகதி உதயனில் வெளியாகி இருந்தது.

இறால் பண்ணைகளை அமைக்கும் பொழுது சகல சந்தை நிலைகளையும், முதலீட்டின் அளவினையும் கொண்டு இருவிதமான இறால் வளர்ப்புக்கான பண்ணைகள் அமைக்கப்படுகின்றன.

1. விரிவான அல்லது குறைந்த செறிவில் இறால் வளர்ப்பு.
2. உயர் செறிவில் இறால் வளர்ப்பு.

### முதல் முறை

இப்பழைமை வாய்ந்த வளர்ப்பு முறையில் குறைந்த செறிவில் இறாலகள வளர்க்கப்படுகின்றன. ஒரு சதுர மீற்றர் பரப்பில் 2 தொடக்கம் 10வரையிலான பிந்திய குடம்பி இறால் குஞ்சுகள் தடாகத்தில் வைப்பிலிடப்பட்டு வளர்க்கப்படுகிறது. இதன்போது நீர்ப்பம்பிகள் மூலம் இறால் தடாகத்திறகு நீர் பாய்ச்சப்படுவதன் மூலம் பாவனையில் இருந்து பழுதடைந்த நீர் மாற்றப்படும். மேலதிகமாக காற்றூட்டல் செயயபடுவதில்லை. இறாலின் அடர்த்தி குறைவாயிருப்பதனால் கூடியளவு இயற்கை உணவின் மூலமும், மிகுதியான உணவுத் தேவைக்காக செயற்கை உணவும் வழங்கப்பட்டு இறால் வளர்க்கப்படுகிறது. இதன்போது நீரின் நுண்ணுயிர்த் தாவரத்தின் வளர்ச்சிக்காக கூடியளவு வளமாக்கிகள் பாவிக்கப்படும். எனினும், இரசாயனப் பொருள்கள் பாவனை மிகக் குறைவாகவே இருக்கும்.

இதன்போது சாதாரணமாக ஒரு ஏக்கரில் 300கிலோ தொடக்கம் 1000 கிலோ வரையான உற்பத்தியினை ஒருமுறையில் பெற்றுக்கொள்ள முடியும். இம்முறையில் முதலீட்டின் அளவு குறைவாக இருப்பதுடன் வளர்ப்புக்குத் தேவையான உள்ளீட்டுப் பொருள்களின் தேவையும் மிகக் குறைவாக இருக்கும். மேலும் அபாயத்திற்கேதுவான காரணிகளின் தாக்கத்தின்போது ஏற்படும் பாதிப்பும் குறைவாக இருக்கும். இதனால், இவ்வளர்ப்பு முறைமூலம் இலாபத்தினைப் பெறும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. எனினும், ஒரு குறிப்பிட்ட அளவு நில அளவிலிருந்து பெறக்கூடிய உற்பத்தியையும் இலாபத்தின் அளவினையும் அதிகரிக்க வேண்டுமாயின் புதிய தொழில்நுட்பத்தின் உதவியுடன் இறால் வளர்ப்பினை கூடிய செறிவினில் செய்வதே சிறந்தது எனக் கருதப்படுகிறது.

### 2 ஆவது முறை

இம்முறையில் இறால்கள் ஒரு சதுரமீற்றரில் 15தொடக்கம் 25வரையிலான பிந்திய குடம்பி இறால் குஞ்சுகள் வளர்க்கப்படுகின்றன. இவ்வாறான உயர்ந்த செறிவுகளினால் ஏற்படும் ஒட்சிசன் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்காகவும், உருவாகும் கழிவு வாயுக்களை அகற்றுவதற்காகவும் காற்றூட்டிகள் பாவிக்கப்படுகின்றன. அத்துடன கூடிய செறிவில் வளரும் இறால்களினால் உருவாக்கப்படும் கழிவுகளை அகற்றுவதற்காக அடிக்கடி நீர்ப்பரிமாற்றம் செய்யப்படுதல் அவசியமாகிறது. மேலும் இறால்கள் மிகவும் கூடிய செறிவில் தடாகங்களில் இருப்பதால் உணவிற்கான போட்டி கூடுதலாக இருக்கும். இதனால், வளர்ப்பதற்கு மிகவும் சிறந்த, தரமான இறால் உணவுகள் வழங்கப்படுதல் வேண்டும. மேலும் இந்த முறையில் கூடியளவு உணவு இடப்படுவதனால் இறால்களினால் உருவாக்கப்படும் கழிவுகளினால் அதிகளவு சேதனப் பொருள்கள் தடாகத்தினுள் சேர்கின்றன. இதனால், தடாகத்திற்குத் தேவையான வளமாக்கிகளின் அளவு மிகக் குறைவாகவும, நீர், மண் என்பவற்றின் தரத்தினைப் பேண பல்வேறுபட்ட இரசாயனப் பொருள்கள் பாவிக்கப்பட வேண்டியும் இருக்கும். இம்முறையில் அதிக முதலீடும், இறால் வளர்ப்பதற்கான உள்ளீட்டுப் பொருள்களின் தேவையும் கூடுதலாக இருக்கும். இத்துடன் இடருக்கேதுவான காரணிகளினால் (Risk Factors) ஏற்படும் பாதிப்பும் அதிகமாக இருககும். எனினும், இம்முறை மூலம ஓர் ஏக்கரில் உற்பத்தி செய்யப்படும் இறாலின் அளவு அதிகமாக இருப்பதால் கிடைக்கும் இலாபத்தின அளவும் கூடுதலாக இருக்கும். இம்முறை மூலம் ஓர் ஏக்கரில் 1800 கிலோ - 3000 கிலோ வரையிலான உற்பத்தியினை ஒரு முறையில் பெற்றுக்கொள்ள முடியும்.

பண்ணையில் இறால் வளர்ப்புக் கைத்தொழிலின் பொருளாதாரம் மிகவும் கவாச்சிகரமானது. 35-40கிராம சராசரி நிறையுள்ள 1கிலோகிராம் இறாலின் உற்பத்திச் செலவு ரூபா 200- 250 (U$ 2.5/=). இவ்வுற்பத்திச் செலவில் 50-60% உணவுக்கான செலவாகும். இன்று ஒரு கிலோகிராம் இறாலின் விலை ரூபா 600 /=. ஒரு வைபபில் அநேகமான பண்ணையில் இறால் வளர்ப்போர் ஒரு ஹெக்ரேயருக்கு 2.5-3.0 தொன் உற்பத்தியை பெறுகிறார்கள். இரண்டு ஹெக்ரேயர் பரப்புள்ள இறால் பண்ணையை அபிவிருத்தி செய்து முதன் முறையாக இறால் வளர்ப்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான செலவு 1,000,000 ரூபா (25,000 U$) என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான திட்டங்கள் முதல் ஆண்டில் இருந்து வருமானத்தைத் தரக்கூடியனவாக அமைகின்றன.

ஆரம்பத்தில் பாரிய அளவில் பண்ணையில் இறால் வளர்ப்போர், செறிவான இறால் வளர்ப்பு செயன் முறைகளில் (intensive) ஈடுபட்டார்கள். 1980இல் ஏற்பட்ட பாரிய நோயைத தொடர்ந்து அநேக பண்ணையாளர்கள் செறிவான பண்ணை முறையிலிருந்து பகுதி செறிவான பண்ணை முறைக்கு மாறினார்கள். ஆனால், விரிவான பண்ணை முறையை தொடர்ந்தும் சிறிய பண்ணைகள் கொண்டிருந்தன. செறிவான வளர்ப்பு நடவடிக்கையானது மிகவும் வினைத்திறனாகவும், பாரிய நிதி மற்றும் தொழில் நுட்பத்தை வேண்டுவதாகவும் உள்ளது.

### இன்றைய நிலைமைகள

மீன்பிடி நீர்வளத்துறை அமைச்சின் அண்மைக்கால புள்ளிவிவரங்கள், கிட்டத்தட்ட 2000ஹெக்ரேயர் விஸதீரணமுள்ள, 380 அதிகாரபூர்வமான இறால் பண்ணைகள் விவரிக்கின்றன. ஆனாலும், கிட்டத்தட்ட 600 ஹெக்ரேயர் விஸ்தீரணமுள்ள, தனிப்பட்ட உரிமையாளர்களிடம் இருந்து வாங்கப்பட்ட அல்லது திறந்த பிரதேச நிலப்பரப்புகளில் சுமார் 600வரையான அதிகாரமளிக்கப்படாத பண்ணைகள், இயங்கி வருகிறதாக நம்பப்படுகிறது. அண்ணளவாக 75 இறால் குஞ்சு உற்பத்தி நிலையங்களில் இருந்து உச்ச உற்பத்திக் காலத்தில் ஆண்டுக்கு 500 மில்லியன் முதிர்ந்த குடம்பிகள் (PLS) உற்பத்தி செய்யப்படும்.

1950இன் பிற்காலப் பகுதியிலிருந்து 1990வரை இலங்கை அரசு, மானியங்களை பண்ணையாளர்களிற்கு வழங்கி வந்தது.

1950இல் அரசாங்கம் தனது உள்நாட்டு மீன் பிடிக்கான மானியத்தை விலக்கிக் கொண்டதும், முதிர்ந்த குடம்பிகளை சேமித்து பொருத்தமான நீர் நிலைகளில் புகுத்தும் திட்டம் பாரிய பின்னடைவைச் சந்தித்தது.

இலங்கை (1995-2000) தேசிய மீன்பிடி அபிவிருத்தி அபிவிருத்தித் திட்டத்தின் தொடர்ச்சியாக, அரசாங்க இயந்திரமானது. இறால் வளர்ப்பினை ஊக்குவிப்பதற்கும், அதன் தரத்தை மேம்படுத்துவதற்கும் தனியார் துறையினருககு தன்னாலான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இலங்கையில் இறால் வளர்ப்புக்குத் தேவையான கரையோரப்பகுதிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் முதலீடு செய்யுமாறு தனியார் துறையினருக்கு அழைப்பும் விடுக்கபபட்டுள்ளது. பண்ணையாளர்களின அதிகரித்த வேலையைப் பூர்த்தி செய்வதற்காக புதிய குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் அமைப்பதற்கு ஊக்குவிப்பு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கான திட்டங்களும் மேறகொள்ளப்பட்டு வருகின்றன.

### பிரச்சினைகள் - கண்டற்தாவரங்கள்

கண்டற்தாவரங்கள் ஊடகச்சத்து படிவுகளை கைப்பற்றுவதுடன் கடல் மற்றும் உவர் நீர் உயிரினங்களினது காப்பரண்களாகவும் தொழிற்படுகின்றன. கண்டற்தாவரங்களின் வேர்த் தொகுதி வண்டல் படிவுகளை சிறைப்பிடிப்பதன் மூலம் புதிய நிலப்பரப்புகளை உருவாக்குகின்றன.

கண்டற்தாவரங்கள் புயலுக்கும், கடும் காற்றிற்கும் எதிராக சுயமாக நிலைத்து நிற்கும் தாங்கல் வலயமாகச் செயற்படுவதனால் கடற்கரையினது மண்ணரிப்பினைக் குறைககும் கண்டற் தாவரப் பிரதேசங்களில் இறால வளர்ப்பின் தாக்கமானது குறிப்பிடத தக்களவு கவனத்தை ஈர்த்துளளது. பண்ணையில் இறால் வளர்ப்பு விரிவடைந்ததனால், கண்டற்தாவரங்கள் ஓரளவு பாதிப்பிற்கு உள்ளாகி இருக்கின்றன என்பது ஓரளவு உண்மையே. கண்டல் வளங்களின் இழப்பிற்கு காரணமான ஏராளமான கரையோர நடவடிக்கைகளில், பண்ணையில் இறால் வளர்ப்பும் ஒன்றாகவே இருக்கின்றது.

இருந்தும் அண்மைக்கால அபிவிருத்தி ஆராய்ச்சிகள் மூலம் மேற்கூறபபட்டது போன்ற பிரச்சினைகளிற்கு தீர்வுகாணப்பட்டுள்ளது.

1. கரையோர கண்டற்தாவர மண்டலத்திற்கு 100m அல்லது அதற்கு மேற்பட்ட தூர இடைவெளியை வைத்துக்கொண்டு பொதுவாக புது இறால் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன.

2. புறஎல்லைக் கால்வாய் நிர்மாணிப்பதன் மூலம் ஒரு தாங்கல் (buffer) பிரதேசங்களை அமைத்தல்.

3. பண்ணைகள் அமைக்கப்படும் பொழுது அழிக்கப்பட்ட கண்டற்தாவரங்களிற்கு ஈடாக அப்பிரதேசங்களில, கண்டல் தாவர மீள்நடுகையை மேறகொள்ளலாம்.

### நோய்களின் தாக்கம்

1980களில் ஏற்பட்ட வைரசு நோய் காரணமாக முதிர்ந்த குடம்பிகளின் உற்பத்தி 200மில்லியனாக குறைந்துள்ளது.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அறே சாலோ Aarre salo என்னும் விஞ்ஞானியால் அண்மையில் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள (Quantum ponics) குவாண்டம் பொனிக்ஸ் தொழில்நுட்பம் பண்ணையில் இறால் வளர்போருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

கதிரியக்க அலைவீச்சுப் புலத்தின் பிறப்பாக்கம் ஆனது இறால் இனப்பெருக்கமடையும் நீர் நிலைகளின் நீரை, நிரம்பல் அடையச்செய்யும். இது முதிர்ந்த குடம்பிகளை ஆரோக்கியமானதாகவும், உறுதியான உடற் கலங்கள் மற்றும் மென்சவ்வுகள் என்பவற்றைக் கொண்டதாக வளரச் செய்யும். அத்துடன் உறுதியான இயற்கை நீர்ப்பீடன தொகுதிகளையும் பிந்திய இறால் குடம்பிகளில் உருவாக்கும். மேலும் உயர் நோயெதிர்ப்பு சக்தி, உயர் உயிர் தப்பி வாழும் வீதம், உயர் வளர்ச்சி வீதம் போன்ற ஆற்றலுடைய பிந்திய குடம்பிகளை Guantum Ponics தொழில்நுட்பம் ஆனது உருவாகுகின்றது. இங்கு உருவாகும் இறால்கள் Super Prawn எனவும் குறிப்பிடப்படுகின்றன.

இலங்கையின் இறால் வளர்ப்பில வைரசுகளால் ஏற்பட்ட பாரிய இழப்பானது அண்மையில் புகுத்தப்பட்ட குவாண்டம் பொனிக்ஸ் Guantum Phonics) தொழில்நுட்பததின் திறனான பிரயோகத்தால், விரைவாகவும் வினைத்திறனாகவும் ஈடுசெய்யப்பட்டு வருகின்றது.

இத்தொழில்நுட்பம் பயன்படுத்தப்படின் ஒரு மீற்றருக்கு 150 முதிர்நத குடம்பிகள் உள்ள குஞ்சு பொரிக்கும் தடாகங்களில் 92 % ஆன குஞ்சுகள உயிர் தப்பி வாழுதல் அவதானிக்கப்பட்டுள்ளது.

### சூழலில் ஏற்படும் தாக்கம்

பண்ணைகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவு நீரானது, முறையாக அகற்றப்படாதவிடத்து, அது மண்ணில் படிவடைகின்றது. இப்படிவுகள் பிரிகையுறுவதனால் இயற்கையான நீரை மாசுபடுத்துவதுடன் கரையோர வளங்களான கண்டற்தாவரங்கள் மீன்கள், அல்காக்கள் போன்ற கரையோர உயிரினங்களையும் பாதிப்படையச் செய்கின்றன. அதுமட்டுமின்றி இம்மாசடைந்த நீரானது, இறால் பண்ணையினுள் மீண்டும் உட்புகுவதால வளர்க்கப்படும் இறால் குஞ்சுகளுக்கும் நோய்களை விளைவித்து உற்பத்தியை பாதிக்கின்றன.

1980களின் ஆரம்பத்திலிருந்து இறால் வளர்ப்புத்தொழில்நுட்பங்களில குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இலங்கையின் வடமேற்குப் பிரதேசத்தில் பண்ணையில் இறால வளர்ப்பு பெரிய கைத்தொழில் நிலையை அடைந்துள்ளது. இலங்கையின் முதலாவது இறால் பண்ணை 1970களில் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டிருந்தும், வடகிழக்கில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக இக்கைத் தொழில் வடமேல் மாகாணத்திற்கு நகர்த்தப்பட்டது. இருந்தும் கிழக்கு மாகாணத்தில் இன்று 15 இறால் பண்ணைகள் உள்ளன. ஆனால், வடக்கில பின்வரும் பல முயற்சிகள் எடுக்கப்பட்டும் இன்று துரதிர்ஷ்டவசமாக ஒரு இறால் பண்ணையேனும் இல்லை.

### புங்குடுதீவில் இறால் பண்ணை

குறிகட்டுவான் - யாழ்ப்பாண வீதிக்கு தெற்காகவும், புங்குடுதீவு பிரதான நிலப்பிற்கும், நடுவுத்துறைக்கும் இடையில் 04 ஹெக்டேயர் நிலப் பரப்பில் இப்பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. இப்பண்ணை 1981 ஆம் ஆண்டளவில் உற்பத்தியைத் தொடங்கியதாயினும் இப்பண்ணையாளருக்கு ஏற்பட்ட பண நெருக்கடியினாலும், திருட்டினாலும், காலப்போக்கில் அது கைவிடப்பட்டது.

### தொண்டைமானாறில் இறால் பண்ணை

1982 ஆம் ஆண்டு பருத்தித்துறை - தொண்டைமானாறு யாழ்ப்பாணம் வீதிக்கு மேற்குப்பக்கமாக அமைந்துள்ள, தொண்டைமானாறு கடல்நீரேரியில் அணைக்கு எதிராக உள்ள 0.21 ஹெக்ரெயர் பரப்பில் இப்பண்ணை அமைக்கப்பட்டது. இந்த இறால் பண்ணையில் யாழ்.கடல்நீரேரியிலிருந்து சேகரிக்கப்பட்ட சருகன் இறால் (Penaeus monodon), வெள்ளை இறால் (penaeus indicus) என்பவற்றின் குஞ்சுகள் வைப்பிடப்பட்டன. இதன் உற்பத்தி திருப்திகரமாக இருந்த போதிலும் இதன் உரிமையாளராகிய கப்பல் ஒன்றின் தலைவர் யாழ். பருத்தித்துறை வீதியில் அரச படையினரால் சம்பவம் ஒன்றில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இப்பண்ணை கைவிடப்பட்டது.

### பொற்பதி குடத்தனைப் பிரதேசத்கில்

குடத்தனை தொடக்கம், சுண்டிக குளம வரை காணப்படும் கரையோரப பிரதேசத்தில் கடற்கரையை அண்மித்தாக ஆழமற்ற பரந்த நீரேந்து பகுதிகள் காணப்படுகின்றன. இப்பகுதிகளில் ஒக்ரோபர் தொடக்கம் டிசம்பர் வரையான பருவகாலங்களில் கடல் நீரால நிரம்பிக் காணப்படும். இந்நீரேந்து பகுதிகளுக்குள் கடல்பெருக்கின்போது பெரும் எண்ணிக்கையான சருகன் இறால் (Penaeus monodon), வெள்ளை இறால் (Penaeus indicus) என்பவற்றின் குடம்பிகள் அகப்பட்டுக்கொள்கின்றன. இவை முதிர்ச்சியடையாத நிலையிலேயே இப்பகுதியில் வசிக்கின்ற மீனவர்களால் வருடாவரும் அறுவடை செயயப்படுகின்றன.

இப்பிரதேசத்தினை ஒரு மீற்றர் ஆழத்திற்கு நீர் தேங்கக்கூடியவாறாகவும் கடல் நீர்பாய்ச்சல் நடைபெறக கூடியதாகவும், பொருத்தமான முறையில் வடிவமைத்து இதற்குள் அகப்படும் குடம்பிகளை நன்றாக உணவூட்டி பராமரித்து வளர்ப்பதன் மூலம் இங்கு இறால் உற்பத்தியைப் பன்மடங்காக்கலாம்.

இப்பகுதியில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்ட சாத்தியக்கூற்று ஆய்வுகளின் பின் இங்கு நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 450,000 செலவுள்ள இறால் வளர்ப்புத்திட்டம் தயாரிக்கப்பட்டு, 1994 மேயில் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தும் அது சாத்தியப்படவில்லை

### கல்லுண்டாய் வெளியில்

1990 ஆம் ஆண்டு முற்பகுதியில் அராலி வீதியின் தெற்குப்பக்கமாக கல்லுண்டாய் வெளியில் 1/4 ஏக்கர் பரபபில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் ஓர் இறால் பண்ணை நிறுவுவதற்கான ஆரம்ப வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் இப் பிரதேசத்தில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக அம்முயற்சி வெற்றியளிக்கப்படவில்லை.

இலங்கையில் பண்ணையில் இறால் வளர்ப்புக் கைத்தொழில் மீன்பிடி நீரியல்வள ஆராய்ச்சி அமைச்சினால் முகாமைத்துவப்படுகிறது.

இச்சட்டம் சூழலைப் பாதுகாப்பதற்கும் முகாமைத்துவப்படுத்துவதறகுமான தேசியத்தன்மை கொணடது. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் 4 ஹெக்ரெயர் பரப்புக்கு மேற்பட்ட பண்ணைகளில் இறால் வளர்ப்பதற்கான புதிய திட்டங்கள் அங்கீகரிப்பதற்கு முன் சூழல் தாக்க மதிப்பீடு (Environmental Impact Assessment) நடைமுறைகள் பற்றிய விதிமுறைகள் வரையப்பட்டுள்ளன. சூழல் வளங்கள் பற்றிய தீர்மானங்கள் எடுககப்படுமுன் அரச அதிகாரிகளிற்கும், மக்களிற்கும் உயர்தர சூழல் தகவல்கள் கிடைக்கக்கூடியவாறு, சூழல் தாக்க மதிப்பீடு நடைமுறைகள் உறுதிப்படுத்த வேண்டும், பிரச்சினைகள் ஏற்பட்டபின் எதிர் நோக்குவதிலும் பார்க்க அவற்றை முற கூட்டியே எதிர்பார்ப்பதுவே சிறந்தது.

அரசு பின்வரும் கவர்ச்சியான சலுகைகள் பண்ணை, இறால் வளர்ப்பில ஈடுபட முன்வரும் முதலீட்டாளர்களுக்கு வழங்குகின்றது.

1) 15வருடத்திற்கான வரிவிலக்கு
2) இக்காலகட்டத்திற்குப்பின் பகுதி வரியினை அறவிடாமை
3) இறால் பண்ணைக்கு உபகரணங்கள், உணவுப்பொருளகள், இதனோடு தொடர்புடைய ஏனைய பொருளகளிற்கு வரிவிலக்களித்தல்.
4) கடன்பெறும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**கே.சித்திரவடிவேல்**

பாரம்பரியமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களே பண்ணையில் இறால்வளர்ப்புக் கைத்தொழிலை மேற்கொள்ள வேண்டியவர்கள் என்ற அவசியமில்லை. தொழில் முயற்சிகளில் ஈடுபட ஆர்வம் உள்ள மூலதன வசதி உள்ளவர்கள் பண்ணை இறால் வளர்ப்பில் ஈடுபடலாம். பண்ணையில் இறால் வளர்ப்புக்கு தகுந்த இடங்களை தெரிவுசெய்வதற்கானதும் மற்றும் நீரில்வளர்ப்புக்கான தொழில்நுட்ப அறிவுகளும், உள்ளடுகள், சந்தை வாய்ப்பு என்பன பற்றிய போதிய அறிவும் எம் பிரதேச முதலீட்டாளர்களிற்கு பெறும் வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றது இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும முகமாக யாழ்ப்பாண FOROUT நிறுவனத்தினதும் சிலாபத்திலுள்ள Agua Service Private Ltd. இறால் வளர்ப்பு பண்ணை நிறுவனமும் முயன்று வருகின்றன. இவைகளின் அனுசரணையுடன் யாழ்பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தினால் பண்ணைகளில் இறால் வளர்ப்பு தொடர்பான செயலமர்வொன்று நடத்தப்பட்டது.

இறால் வளர்ப்புக்கென பொருத்தமான, பரந்த, திறனுடைய பிரதேசம் வழங்கப்பட்டு அரச, தனியார் முதலீ[illegible]கள் ஊக்குவிக்கப்பட்டால், எதிர்கா[illegible]தில் பண்ணையில் இறால்வள[illegible]து பிரதேசத்தில் மிகவும் நம்பி[illegible] கைத்தொழிலாக மாறுமென்[illegible]மில்லை.

(முற்றும்)

# யாழ். மண்ணில் மாபெரும்

# கண்டிய நடனம்



இலங்கையின் தேசிய நடனமான கண்டிய நடனம் யாழ். மண்ணில் உலகப்புகழ் வாய்ந்த கண்டிய நடனக் கலைஞர்களால் ஒவ்வொரு நடனத்திற்குமான தனித் தனி விளக்கங்கள் தமிழில் விளக்கப்படுத்தி நடைபெறவுள்ளது

இக்கண்டிய நடன நிகழ்ச்சியின் நடன அம்சங்களாக,

01) மங்கள வாத்தியத்துடன் நடனம்
02) பூஜா நடனம்
03) மயில் நடனம்
04) உடக்கி என்று அழைக்கப்படும் சாஸ்திரிய நடனம்
05) முகமூடி நடனம்
06) யக்கம் என்று அழைக்கப்படும் நகைச்சுவை நாட்டிய நாடகம்
07) கஜகாவன்ன நடனம்
08) ரபான் நடனம்
09) கோலாட்டம்
10) தமிழ் நடனப் பாடலுக்கு அபிநயம்
11) பந்தேரு நடனம்
12) பெண்கள் தீயுடன் ஆடும் நடனம்
13) கிராமத்து நடனம்
14) செம்பு நடனம்

இந்த நடனங்களுடன் இன்னும் பல கண்டிய நடனங்களும் நடைபெறவுள்ளன.

இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்
காலம்: 2004-06-27ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பி.ப. 1.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(சி-35735) (26-19-18)

அனுமதிக்கு முந்துங்கள்: **T.K. ரூறிஸ்ற் இன்**
இல. 200, அரசடி வீதி,
பலாலி வீதி அருகில், கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 222 5680 / 0776209963.



# ஊடகமே உலகம்

(வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை)
ஊடக டிப்ளோமா கற்கை நெறி

**DIPLOMA IN MASS MEDIA**
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. In. M.M. (Sri Lanka)

**DIPLOMA IN BROADCASTING**
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. In. B.C. (Sri Lanka)

சான்றிதழை பெற்றுக்கொள்ளுங்கள்

**தபால் மூலம்**


6 மாத கால பாடநெறி
தொடர்பு: (011) 4512830

**MMIC** 50, 2nd Floor, "Colombo Plaza" Galle Road, Wellawatta, Colombo - 06.
Mass Media Institute of Ceylon (Pvt) Ltd.,



# Swan
# சுவான் டீசல் என்ஜின்

- நம்பிக்கையில் தலைசிறந்தது
- 4 ஸ்ரோக் என்ஜின்
- தற்போது 9.5 H/p சக்திவரை கிடைக்கிறது
- உதிரிப்பாகங்கள் உண்டு



அதிஉயர் விற்பனைக்குப் பிந்திய சேவையும் உண்டு

Access Graphics

ஏக முகவர்கள்:
சென்ட். அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்.
524, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலை: 2324261-5, 2337283-5 ., பெக்ஸ்: 2446554



# மொறட்டுவை பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றம் வழங்கும்

## தொழில்சார் கற்கைநெறி வழிகாட்டல் மற்றும் கணனியியல் கருத்தரங்கு

உயர்தரப் பரீட்சைக்கு அடுத்த படிமுறை நகர்வைப் பற்றிய தெளிவின்மையை மாணவர் மத்தியில் நீக்கும்முகமாக, மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் மேற்படி முழுநாள் நிகழ்வை முதற்கட்டமாக யாழ்ப்பாணம், வலிகாமம் பகுதிகளில் நடத்த ஒழுங்குசெய்துள்ளனர்.

இந்நிகழ்வில்:-

- ★ குழுநிலை தொழில்சார் கற்கைநெறி வழிகாட்டல் (Career Guidence- Group Level)
- ★ குழுநிலை கணனியியல் கருத்தரங்கு (Group discussion of Computing)
- ★ ஆற்றல் மேம்படுத்துகை விவாதம் (Skill Development Programme)

என்பன உள்ளடங்கும்.

| இன்று வலிகாமத்தில் | மிக விரைவில்... |
|---|---|
| இடம் : இராமநாதன் கல்லூரி | வடமராட்சியிலும் |
| காலம் : 26.06.2004 சனிக்கிழமை | தென்மராட்சியிலும் |
| நேரம் : காலை 8.30 மணி | விவரம் பின்னர் அறிவிக்கப்படும் |
| பிரவேசம் : இலவசம் | |

குறிப்பு:-
பாடசாலை மாணவப் பிரதிநிதிகளுக்கான அழைப்பிதழ்கள் தனித்தனியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இளைஞர்களின் எதிர்காலத் திட்டமிடலை இலகுவாக்கும் இந்நிகழ்வில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு வேண்டுகிறோம்.

தமிழ் இலக்கிய மன்றம்
மொறட்டுவை பல்கலைக்கழகம்

மொறட்டுவை பல்கலைக்கழக
மாணவர்கள்.

ஊடக அனுசரணை :- உதயன்

(C/ 35733)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 - 03 - 1915



மறைவு
07 - 07 - 2003

## திருமதி கந்தையா பூரணம்


அன்புடனும் பண்புடனும் எம்முடன் வாழ்ந்து
ஆதரவு மொழிபேசி அரவணைத்த அன்புத் தெய்வமே
ஓராண்டு மறைந்தாலும் உங்கள் நினைவு மறையாது
ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி!

கேணியடி,
திருநெல்வேலி. (33436)(39-12-19-40)

அன்புடன் நினைவுகூரும்:
பிள்ளைகள்.

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
08 - 02 - 1980



தாயக மண்ணில்
26 - 06 - 1999

## கிருஷ்ணமூர்த்தி வதனரூபன்
(லெப்டினன்ட் மருதநம்பி)

அஞ்சாது மண்காக்கப் புறப்பட்டு மாவீரன் ஆனாய்
ஆறாத துயர் தன்னை எமக்குத் தந்தாய்
ஐந்தாண்டு சென்றாலும் அகலாது உன் நினைவு
உனது ஆத்ம சாந்திக்காக நாம் பிரார்த்திக்கிறோம்.

முத்தவிநாயகர்கோயிலடி,
"தாயகம்",
கரணவாய்.

அம்மா, அப்பா,
அண்ணன்மார்,
தங்கை.

(33350)(39-12-19-40)

# வலுவிழந்தவர்களை உரிய முறையில் இனங்கண்டு உதவி வழங்க வேண்டும்

## மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

கொக்குவில்,ஜூன்26

வலுவிழந்தவர்கள் உரிய முறையில் இனங்காணப்பட்டு அவர்களுக்குக் கல்வி வசதிகளும், மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி.

யாழ். மாவட்டத்திலுள்ள வலுவிழந்தவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கான கூட்டம் அண்மையில் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்தியபோதே மேலதிக அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வலுவிழந்தவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக உதவிகள் வழங்கப்படவேண்டும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம், அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், வெண்புறா போன்ற நிறுவனங்கள் இவர்களுக்கு உதவ முன்வந்துள்ளன.

மேலும் சமூக சேவைகள் அமைச்சும் குறிப்பிட்ட தொகை நிதியினையே ஒதுக்கீடு செய்கிறது. கிராமிய, பிரதேச, மாவட்ட மட்டத்தில் தேவை மதிப்பீடு செய்யப்பட்டு உரிய படிவங்கள் சமூக சேவைகள் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் - என்றார்.

யாழ். வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் த.பஞ்சலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்:-

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வலுவிழந்த சிறுவர்களுக்கு கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம், ஐ.நா. சிறுவர் நிதியம் என்பன உதவி புரிகின்றன.

மேலும், முறைசாராக் கல்வித திட்டத்தின் கீழ் குடாநாட்டிலுள்ள 5 வலயங்களிலும் 15 பாடசாலைகளில வலுவிழந்தவர்களுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன - என்றார்.

சிறுவர் பாதுகாப்பு நிறுவனப் பிரதிநிதி கே.மகேந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்:-

தமது நிறுவனம் 18 வயதுக்குக் குறைந்த வலுவிழந்த சிறுவர்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்க விருப்பதாகவும், தேவை மதிப்பீடு வலுவிழந்தோருக்கு உதவும் தொண்டர்கள் மூலம் சமூக சேவை உத்தியோகத்தர்களின் மேற்பார்வையில் நடத்தப்படும் - என்றும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வலய கல்வித் திணைக்கள அதிகாரிகள், அகதிகளுக்கான ஐ.நா. பிரதிநிதிகள், சிறுவர் பாதுகாப்பு நிறுவனப் பிரதிநிதிகள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-76)




### தென்மராட்சி தெற்கில்

# கட்டாக்காலிக் கால்நடைகளை பிடிக்க பொருண்மியம் தடை

தென்மராட்சி,ஜூன்26

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் கட்டாக்காலிகளாக நடமாடும் கால்நடைகளைப் பிடிக்கவேண்டாமென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

அண்மையில் இப்பிரதேசத்தின் மறவன்புலோ, கைதடி நாவற்குழி பிரிவின் தெற்கு, வடக்கு ஆகிய பகுதிகளில் கட்டாக்காலிகளாக அலையும் கால்நடைகளை சிலர் பிடித்து விற்பனை செய்து வருவதையடுத்தே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தென்மராட்சி தெற்கில் மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான மாடுகள் கட்டாக்காலிகளாகக் காணப்படுகின்றன என்றும் -

பிரதேசத்தில் இன்னமும் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத தனங்கிளப்பு, மறவன்புலோ ஆகிய பகுதி மக்களின் கால்நடைகள் பெருமளவில் உள்ளன என்றும் -

அந்தக் கால்நடைகளைப் பிடித்து விற்பதில் சிலர் அக்கறைகாட்டி வருகின்றனர் என்றும் - பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்தன. இதனையடுத்து கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.(ஒ-117)

# உடுவில் பொதுநூலகத்தில் வாசகர் வட்டம் ஆரம்பம்

வலி. தெற்கு,ஜூன்26

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகத்தின்கீழ் இயங்கிவரும் பொதுநூலகத்தில் வாசகர் வட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ள வாசகர் வட்டக் கூட்டத்தில் நூல்நிலைய அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

நூலகத்துக்கு அருகில் மருதனார்மடம் பொதுச்சந்தை செயற்படுவதால் நூலகத்தில் படிப்பவர்கள் பல கஷ்டங்களை எதிர்கொள்வதாக அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இக்குறைபாட்டை நீக்குவதற்கு சந்தைக்கும் நூலகத்துக்கும் இடையில் 'மதில்' ஒன்றைக் கட்டுவது சிறந்தது எனவும், நூலகத்துக்கு இட வசதி போதாதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பல நூல்களைக் கொள்வனவு செய்து, வாசகர்களுக்கு மேலும் வசதிகள் செய்துகொடுப்பதெனவும் - வாசகர் வட்டத்தின்மூலம் மாதாந்தக் கருத்தரங்குகளை நடத்துவது எனவும் - வாசகர் வட்டத்துக்கு மேலும் பல அங்கத்தவர்களைத் திரட்டுவது எனவும் - அங்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (எ-152)

# மெலிஞ்சிமுனையில் ஞாயிறன்று நாட்டுக்கூத்து மேடையேற்றம்

யாழ்ப்பாணம்,ஜூன்26

ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனை கிறிஸ்துராசா தேவாலய முன்றிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிமுதல் 'ஆனந்தசீலன் நாட்டுக்கூத்து' மேடையேற்றமும், அண்ணாவிமார் கௌரவிப்பும் நடைபெறவுள்ளன.

கிறிஸ்துராசா தேவாலயத்தின் வருடாந்தப் பெருவிழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வுகள் கரம்பன் பங்குத் தந்தையும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபருமான அருட்திரு.எஸ்யேசுதாசன் அடிகளார் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில், தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் பிரதம விருந்தினராகவும் ஊர்காவற்றுறைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.ரதன், தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணன், கலை பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த முருகையன், ஊர்காவற்றுறை நாரந்தனைப் பங்குத் தந்தையர்கள், ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர்ப் பகுதிகளுக்கான பண்பாட்டு அலுவலர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

'ஆனந்தசீலன்' நாட்டுக்கூத்தின் அண்ணாவியார் அந்தோனி சவரிமுத்து மற்றும் மிருதங்க அண்ணாவியார் கிறிஸ்தோ சவரிமுத்து ஆகியோர் இந்த நிகழ்வில் பொன்னாடை போர்த்துப் பட்டம் வழங்கிப் பணப்பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (எ)



**காரைநகர் மணிவாசகர் சபையினரும், கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய சமூகத்தினரும் இணைந்து கனடா சைவ சித்தாந்த மன்றத் தலைவர் தில்லையம்பலம் விசுவலிங்கத்தின் சேவையினைக் கௌரவிக்குமுகமாக நடத்திய பாராட்டு விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள்.**

**விசுவலிங்கம் அவர்களின் துணைவியார் மங்கள விளக்கேற்றுவதை முதலாம் படத்திலும் விழா நாயகரை கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீசுவரக் குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதை அடுத்த படத்திலும் காணலாம்.** *(படங்கள்: காரைநகர்ச் செய்தியாளர்)*

# குளங்கள், உவர் அணைகள் புனரமைக்க ரூபா 2 கோடி 90 லட்சம் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜூன்26

யாழ். குடாநாட்டில் உள்ள குளங்கள் மற்றும் உவர் நீர் தடுப்பணைகள் என்பவற்றைப் புனரமைப்பதற்கு 'நியாப்' திட்டத்தின் கீழ் 2 கோடியே 90 லட்சத்து 40 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சந்திரன் கிராய் குளத்தைப் புனரமைப்பதற்கு 18 லட்சத்து 88 ஆயிரம் ரூபாவும் -

நுணாவில் குளததைப் புனரமைப்பதற்கு 9 லட்சத்து 99 ஆயிரம் ரூபாவும், கொலலன்கிராய்குளம் புனரமைப்புக்கு 10 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவும், கோம்பையன்குளம் புனரமைப்புக்கு 30 லட்சம் ரூபாவும் -

கோப்பாய் பகுதியிலுள்ள உச்சுவில் குளத்துக்கு 5 லட்சத்து 11 ஆயிரம் ரூபாவும், வாதரவத்தைப் பெருங் குளத்துக்கு 21 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும், கூனிக்கழிவென் உவர் நீர்த்தடுப்பணைக்கு 18 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் -

சங்கானை நவியாசுட்ட குளத்துக்கு 13 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், நெடுந்தீவு செட்டிக்கழிக்குளத்துக்கு 46 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும், ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள மெலிஞ்சிமுனைக் குளத்துக்கு 35 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவும்-

வேலணை மினியன் வாய்க்காலுக்கு 33 லட்சத்து 99 ஆயிரம் ரூபாவும், இறுப்பிட்டி நீர் தடுப்பணைக்கு 9 லட்சத்து 39 ஆயிரம் ரூபாவும், கொக்குவில் நந்தாவில் வாய்க்காலுக்கு 33 லட்சத்து 99 ஆயிரம் ரூபாவும் -

புனரமைப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டங்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திற்குள் பூர்த்திசெய்யப்படவேண்டியுள்ளதால் அவற்றுக்கான புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படுவதாக யாழ். செயலக 'நியாப்' திட்டப் பிரதிப் பணிப்பாளர் கே.பாலகிருஷ்ணன் தெரிவித்தார். (ஒ-5-ரி)



**தேசிய சேமிப்பு வங்கியின் மானிப்பாய் கிளையில் இருந்து சுன்னாகம் கிளைக்கு இடமாற்றலாகிச் சென்ற வங்கி முகாமையாளர் வி.அருளானந்தனுக்குப் புதிய வங்கி முகாமையாளர் ப.சச்சிதானந்தன் பிரியாவிடையின் போது மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.**

**திருமதி அருளானந்தன், வங்கியின் மானிப்பாய் கிளையின் உதவி முகாமையாளர் ந.பகீரதன் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (10-185)**

## அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்26

வலிகாமம் வடக்குக் கலாசாரப் பேரவையின் 2ஆவது உப பிரிவிற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வலிகாமம் வடக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் தலைமையுரை, நிர்வாக உத்தியோகத்தர் உரையினைத் தொடர்ந்து செயற்பாட்டு உறுப்பின் தெரிவு இடம்பெறும். நன்றியுரையைக் கலாசார உத்தியோகத்தர் மா.அருள்சந்திரன் நிகழ்த்துவர்.

### சுழிபுரம் மழுவை இந்துமயானத்தில்

# மழைநேரத்தில் தகனஞ்செய்ய தகரக் கொட்டகை அமைப்பு

வலி. தென்மேற்கு,ஜூன்26

சுழிபுரம் கிழக்கு மழுவை இந்து மயானத்தில் பிரேதங்களைத் தகனஞ் செய்வதற்கு வசதியாகத் தகரக் கொட்டகை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த மயான[illegible]ல் மழைகாலங்களில் பிரேதங்க[illegible]த தகனஞ்செய்வதில் கடந்த ப[illegible] வருடங்களாகப் பனிப்புலம் மற்றும் சுழிபுரம் கிழக்குப் பகுதிகளிலுள்ள மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்தத் தகரக் கொட்டகையை அமைப்பதற்குத் தேவையான நிதியைப் பனிப்புலம் சமுதாய முன்னேற்றச் சங்கத்தினர் பொதுமக்களிடமிருந்து சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தற்போது 'ஹொலண்ட்' நாட்டில் புலம் பெயர்ந்து வசித்துவரும் சிற்றம்பலம் வரதராசா என்ற நலன் விரும்பி இந்தத் தகரக் கொட்டகை நிறுவும் நிதிக்கு 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

சுழிபுரம் சம்வில்துறை, மழுவை இந்து மயானத்தினைப் பயன்படுத்துவதற்குக் கடற்படையினர் தடைவிதித்ததையடுத்து மற்றுமோர் இடத்தில் நலன்விரும்பி ஒருவர் அன்பளிப்பாக வழங்கிய 14 பரப்புக் காணியில் இத்தற்காலிக மயானம் கடந்த பல வருடகாலமாகச் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.(எ-135)

# குருநகரில் இரு தினங்கள் நெய்தல் விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்26

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியினர் நடத்தும் வருடாந்த நெய்தல் விழா எதிர்வரும் 30 ஆம் திகதிமுதல் இரு தினங்கள் குருநகர் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவை முன்னிட்டு இப் பகுதி மக்களிடையில் கல்விசார் போட்டிகளாக பேச்சு, கட்டுரை, கவிதை போன்ற எழுத்தாக்கப் போட்டிகளும் -

நாடகம், நாட்டுக்கூத்து, கிராமிய நடனம, பாலர் நடனம், அம்பா பாடல், தனிப்பாடல் போன்ற கலாசார போட்டிகளும் -

உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், தீடுப்பாட்டம், எல்லே, மரதன் ஓட்டம் ஆகிய விளையாட்டுப் போட்டிகளும் -

கடல் சார்ந்த போட்டிகளாக நீச்சல், வள்ளத்தாங்கல், வேகப் படகோட்டம் ஆகிய போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் இப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும் என்றும் -

இப்போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன என்றும் -

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியின் செயலாளர் ம.குயின்ரன் தெரிவித்தார். (எ-1?)





மீசாலை கிழக்கைச் சேர்ந்தவர்களான திரு. திருமதி
**ராஜ்கபூர் - தயாளினி**
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

இன்று (26.06.2004) சனிக்கிழமை தனது இல்லத்தில் முதலாவது பிறந்தநாளை வெகு குதூகலத்துடன் கொண்டாடி மகிழ்கின்றார்.

செல்வன் அபிசயனை நோய் நொடியின்றிப் பல்லாண்டுகாலம் நலமுடன் சீருஞ்சிறப்புமாக வாழவேண்டுமென உளமார வாழ்த்துகின்றார்கள்.

மீசாலை கிழக்கு. மீசாலை. - குடும்பத்தினர்.

(33438)(34-18-19)


## மயோனுக்கு எம்.பி.பதவி?

கொழும்பு,ஜுன்26

ஐ.தே.கட்சி தேசியப் பட்டியல் எம்.பியான அலிஸாகீர் மௌலானா தமது பதவியை இராஜினாமாச் செய்ததை அடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐ.தே.கட்சிப் பிரமுகரும் முன்னாள் எம்.பியுமான மயோன் முஸ்தபாவை கட்சி தனது தேசியப்பட்டியல் எம்பியாக நியமித்திருக்கிறது என அறியவருகிறது. (க)



**நிபுணர்களின் செய்முறைக் காட்சிகள் திரையில்**

Power Gym
Body Care & Fitness Center
நவீன உடற்பயிற்சி நிலையம்
**230/1, நாவலர் வீதி,**
(ஆனைப்பந்தி சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
☎ 0777 252098

(33111)(42-13-14-23)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 - 09 - 1921



உதிர்வு 08 - 07 - 2003

அமரர்
**அப்புத்துரை யோகராஜா**

அன்போடு அரவணைத்து ஆதரித்திட்ட தெய்வமே!
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்மனது
என்றும் எம் நினைவு உங்களுடன் வாழும்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவாக:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்
யோ. சந்திரகுமார் (மகன்).

(33354)(39-13-14-23)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து





பருத்தித்துறையைச் சேர்ந்த
திரு.திருமதி **பீற்றர் - யோறா** தம்பதிகளின்
செல்வப்புதல்வன்

**ராம்சியாஸ்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (26.06.2004) சனிக்கிழமை அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். அவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, சுவிஸில் வசிக்கும் யசோ மாமா, சியாமினி அத்தை, பருத்தித்துறையில் வசிக்கும் கொலின் மாமா, ஜெனி அன்ரி, அஜி அன்ரி மற்றும் நாயன்மார்கட்டில் வசிக்கும் அப்பப்பா, கருணா அத்தை, புஸ்பன் மாமா, சாந்தன் சித்தப்பா, யோகேஸ்வரன் சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் வல்லிபுரஆழ்வார் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
பேரன்: **துரைராஜா**
C.W.E. ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்
அத்தை: **கருணா**
F.H.A. JM.C உத்தியோகத்தர்.

புலோலி தெற்கு,
புலோலி.

(33262)(34-18-19)


## மரண அறிவித்தல்

### திருமதி துரைராசா பாக்கியலட்சுமி

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி துரைராசா-பாக்கியலட்சுமி 15.06.2004 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற துரைராசாவின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி, மகாலட்சுமி, காலஞ்சென்ற செல்வரத்தினம், தேவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் இந்திராணி (பிரான்ஸ்), உதயராணி (ஜேர்மனி), சத்தியபாமா (ஜேர்மனி), தனலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவப்பிரகாசம் (பிரான்ஸ்), தியாகலிங்கம் (ஜேர்மனி), குகபாலன்(ஜேர்மனி), மகேந்திரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் நிலானி, நிவேதன், நிசாந் (பிரான்ஸ்), மிதுலா (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2004) சனிக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

*கே.கே.எஸ். வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்,*

தகவல்:
சீ.உருத்திரன் (பெறாமகன்).

(33375)(39-13-14-23)


# மிதிவெடி அபாயக்கல்வி வாரம்

## ஜுன் 21 தொடக்கம் ஜுன் 27 வரை

**மிதிவெடித் தடை ஒப்பந்தம் (ஒட்டோவா உடன்படிக்கை) அமுல்படுத்தப்பட்டால்!**

★ மிதிவெடியினைப் பயன்படுத்துதல், உற்பத்தி செய்தல், விருத்திசெய்தல், பொறுப்பேற்றல், இடமாற்றம்செய்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்யமுடியாது.

★ சேகரித்து வைக்கப்பட்ட கண்ணிகள் (மிதிவெடிகள்) நான்கு வருடங்களினுள் முற்றாக அழிக்கப்படும்.

★ நிலத்தில் புதைக்கப்பட்ட கண்ணிகள் (மிதிவெடிகள்) 10 வருடங்களினுள் அகற்றப்பட்டு அழிக்கப்படும்.

★ கண்ணிகளினால் பாதிக்கப்பட்டோர்களுக்கான புனர்வாழ்வு, கண்ணிவெடி அபாயக்கல்வி, சேகரித்து வைத்திருத்தலை அழித்தல், கண்ணிவெடியகற்றல் ஆகிய செயற்பாடுகளுக்கு உதவி வழங்கும் நாடுகள் தாராளமாக உதவிபுரியும்.




**District Mine Action Office, Jaffna**

**மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம்,யாழ்ப்பாணம்**

(சு3570)(29-34-13-14-23)

# ரவி கைதா? இல்லவே இல்லையென அடித்துக் கூறுகிறார் ஜி.எல்.பீரிஸ்!

கொழும்பு,ஜூன்26

"நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவைக் கைதுசெய்ய முனைவது அவரது சிறப்புரிமைகளை மீறும் ஒரு செயலாகும்.

அப்படி அவரைக் கைதுசெய்வதற்கு சபாநாயகரின் முன் அனுமதியும் பெறவில்லை. நீதிமன்ற உத்தரவும் கிடைக்கவில்லை. பொலீஸ் ஆணைக்குழுவுக்குக்கூட அது குறித்துத் தெரியாது.

ஒரு சில அரசியல்வாதிகளின் தூண்டுதலின் பேரிலேயே சில பொலீஸ் அதிகாரிகள் ரவி கருணாநாயக்காவை கைதுசெய்ய முயன்றனர்.'

ஆனால், அவர்களால் கைதுசெய்ய முடியவில்லை.அதற்கு சட்டம் இடம்கொடுக்கவில்லை."

- இப்படிக் கூறுகின்றார் ஐ.தே.க. பேச்சாளரான பேராசிரியர் பீரிஸ்.

நேற்றுமுன்தினம் மாலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் முன்னாள் அமைச்சர்களான பேராசிரியர் பீரிஸும், டாக்டர் ராஜித சேனரத்னவும் இம்விடயம் தொடர்பாகச் செய்தியாளர்களுக்கு விளக்கம் அளித்தனர்.

கடந்த புதன்கிழமை ரவி கருணாநாயக்காவின் வீட்டிற்கு வந்த கவிப் பொலீஸ் அத்தியட்சகர் சிறிநாத் வதசிங்கவும், அவரது உதவியாளர்களும் ரவி கருணாநாயக்காவைத் தாம் கைதுசெய்யப் போவதாகவும் அவரைத் தம்முடன் பொலீஸ் நிலையத்திற்கு வரும்படியும் கூறினர்.

அவர்களிடம் கைதுசெய்வதற்கான நீதிமன்ற உத்தரவு இருக்கவில்லை.

நீதிமன்ற உத்தரவைத் தாங்கள் பெற்றுள்ளனரென அவர்கள் கூறிய போதும், அப்படியான உத்தரவு எதுவும் பெறப்படவில்லை. பொலீஸ் தலைமையகத்திற்கும் அவர்கள் இது குறித்து அறிவிக்கவில்லை.

ரவியைக் கைதுசெய்வதற்கான உத்தரவைக்கோரி பொலீஸாரால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அரச ஊடகங்கள் ரவி கருணாநாயக்காவைக் கைது செய்வதற்கான உத்தரவை நீதிமன்றம் வழங்கியுள்ளது என உண்மைக்கு மாறாகச் செய்திகளை வெளியிட்டன. இது நீதிமன்றத்தையும், சட்டமா அதிபரையும், பொலீஸ் ஆணைக்குழுவையும், சபாநாயகரையும், நாட்டு மக்களையும் ஏமாற்றும் ஒரு செயலாகும்.

சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிகாரிக்கும், தவறான செய்தியை வெளியிட்ட ஊடகங்களுக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஊடகங்களுக்கு மட்டுமன்றி செய்தி எழுதியவர், வாசித்தவர், ஒலி-ஒளி பரப்புச் செய்தவர், ஆசிரியர் என ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

ரவி கருணாநாயக்கா ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். அவரைக் கைது செய்வதற்கு முன் சபாநாயகரின் அனுமதியைப் பெறவேண்டும். ஆனால், பொலீஸார் சபாநாயகருக்குக் கூட அறிவிக்கவில்லை.

எனவே, அரசியல்வாதிகளின் அடிவருடிகளாகச் செயற்பட்ட பொலீஸ் அதிகாரிகள் தொடர்பாகச் சட்டமா அதிபர், சபாநாயகர், பொலீஸ் ஆணைக்குழுத் தலைவர் ஆகியோருக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளோம் - என்று அவர்கள் கூறினர். (க)



சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்புத் தினத்தில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றிச் சித்தன்கேணியிலுள்ள வடபிரதேச நல்லொழுக்க சம்மேளன அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். சம்மேளனத் தலைவர் செ.இராசலிங்கம் மற்றும் வி.இரவீந்திரன் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (படம்:-வலி.மேற்குச் செய்தியாளர்)

# புலன்வலுக்கள் குறைந்த இளைஞருக்கு ஒன்றியம்

கொழும்பு,ஜூன்26

புலன்வலுக்கள் குன்றிய இளைஞர்களுக்கான ஒன்றியத்தை அமைத்து அதன் மூலம் நாடளாவிய ரீதியில் புலனவலுக்குன்றிய இளைஞர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கு இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க நடவடிக்கை எடுத்துவருகிறார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட ஆய்வின்மூலம் புலன்வலுக் குன்றிய சுமார் ஒரு லட்சம் இளைஞர்கள் உள்ளனர் என்று தெரியவந்ததையடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய இளைஞர்களின் விபரங்களைத் திரட்டும் பணி தற்போது இடம்பெற்று வருகிறது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆரம்பித்து வங்கி மூலம் மேற்படி இளைஞர்களுக்கான ஒன்றியம் உருவாக்கப்படவுள்ளது. இதன்மூலம் அவர்களுக்கான தொழில் வழிகாட்டல்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும், இவர்களுக்குக் கல்வி, சுகாதாரம், ஆலோசனை மற்றும் சுயதொழில் முயற்சி போன்ற துறைகளில் உதவும் வகையில் திட்டங்கள் பல முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (ஒ-ரி)

# பண்பாட்டு அடையாளங்களைப் பேணுவதில் புலம்பெயர் தமிழர்கள் முன்னிற்கின்றனர்

## பணிநயப்பு விழாவில் ஆறு.திருமுருகன் தகவல்

காரைநகர்,ஜூன்26

"எங்கள் நாட்டில் நாம் கலாசாரப் பண்பாடுகளை இழந்து வருகின்றோம். இங்கு ஆலயங்களில் ஆண்கள் வேட்டி சால்வை அணிந்தும், பெண்கள் சேலை அணிந்தும் வருவது அருகிவருகின்றன. ஆனால், ஆங்கிலேயருடைய நாடான கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் மக்களிடையில் பண்பாட்டு அடையாளங்கள் பேணப்பட்டு வருகின்றன".

-இவ்வாறு தெரிவித்தார் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்.

காரைநகர் மணிவாசகர் சபையினரும், கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய சமூகத்தினரும் இணைந்து கனடா சைவசித்தாந்த மன்றத் தலைவர் தில்லைம்பலம் விசுவலிங்கத்தின் சேவையைக் கௌரவிக்கும் முகமாக நடத்திய பாராட்டுவிழா அண்மையில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மணிவாசகர் சபைத் தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள் விசுவலிங்கம் அவர்களைப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஆறு. திருமுருகன் தமது உரையில்:-

கனடாவில் உள்ள சைவ ஆலயங்களுக்கு ஆண்கள் வேட்டியும், பெண்கள் சேலையும் அணிந்து தமிழ் மக்களின் பாரம்பரிய கலாசார உடைகளில் வருகின்றனர். ஆனால், நாம் எமது மண்ணில் உள்ள சைவ ஆலயங்களில் பஞ்சாபி அணிந்த பெண்களையும், நீளக்காற்சட்டை அணிந்த ஆண்களையுமே காணமுடிகின்றது.

கனடாவில் எம்மவர்கள் பிறந்த நாளைக் கொண்டாடும்போது பிரசாதம் வைத்து வாழ்வில் ஒளிபெற தீபம் ஏற்றி, பிறந்தநாளை கொண்டாடுபவருக்குப் பிரசாதம் ஊட்டி மகிழ்கின்றனர். ஆனால், இங்குள்ளவர்கள் கேக் வெட்டி மெழுகுதிரியில் உள்ள தீப ஒளியினை வாயினால் ஊதி அணைத்து எமது பாரம்பரியங்களுக்கு எதிரான முறையில் பிறந்த நாளைக் கொண்டாடுகின்றனர்.

எமது தாயக மண்ணில் இன்று கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள் போன்ற பஞ்சமாபாதகச் செயல்கள் தலைதூக்கியுள்ளன. பழந்தமிழ் மண்ணில் பரம்பரை பரம்பரையாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்த பண்பாட்டு விழுமியங்கள் சீரழிந்து சினிமா கலாசாரமும், சீரிகெட்ட சமூகப்பிறழ்வு நடத்தைக் கோலங்களும் மேலோங்கி வருகின்றன.

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட சைவப்பெரியர் விசுவலிங்கம் ஆங்கிலேயர் வாழும் கனடா நாட்டில் சைவசித்தாந்த மன்றம் ஒன்றை நிறுவி - கடந்த பத்து ஆண்டுகளாக சைவத்தையும், தமிழையும் பேணி எமது கலை கலாசாரங்களை வளர்த்து வருகின்றார். இருபதைந்துக்கும் மேற்பட்ட நூல்களை அவர் எழுதியும் தொகுத்தும் வெளியிட்டுள்ளார். இதன்மூலம் அவர் சைவசித்தாந்தத்தின் பெருமையை உலகறியச் செய்துவருகின்றார். அவருக்கு இன்று காரைநகர் மக்கள் நடத்தும் பாராட்டுவிழா பெரியார்கள் வாழும் போதே கௌரவிக்கப்பட வேண்டும் என்ற பேர் உண்மையை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது என்றார்.

தி.விசுவலிங்கம் தனது பதிலுரையில், இறைபணிக்குப் பாராட்டு வேண்டியதில்லை என்றும் - தாய் நாட்டில் எதிர்பாராத அளவிற்குத் தமக்கு நடைபெற்ற பாராட்டு விழாவிற்கு நன்றி கூறுகின்றேன் என்றும் - தெரிவித்தார். (எ-73)

# சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாளர் கிரனேட் தாக்குதலில் படுகொலை

கொழும்பு,ஜூன்26

அண்மையில், கலவான பிரதேசத்தில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் இனந்தெரியாத குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட 'கிரனேட்' தாக்குதலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கூட்டு முன்னணியின் ஆதரவாளர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

இம்முறை நடைபெறவிருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பாக இடம்பெற்ற முதலாவது கொலை இதுவாகும்.

சப்பிரகமுவ மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரான மொஹான் எலலாவலையின் நெருங்கிய ஆதரவாளர் ஒருவரே இறந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கலவான பொலீஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் மொஹான் எல்லாவலைக்கு ஆதரவு திரட்டக் கூட்டமொன்றைத் தமது இல்லத்தில் நடத்த கொலையுண்டவரான ஆனந்த சேனவிரத்ன ஒழுங்குசெய்திருந்தார்.

எல்லாவலை தலைமையில் இடம்பெற்ற அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவிருந்த பிரமுகர்களுடன் அவர் தமது இல்லத்தில் தேநீர் அருந்தினார். பின்னர் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அவர்களோடு தமது இல்லத்திலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த அவர் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தக் கொலை ஓர் அரசியல் பழிவாங்கலாக இருக்கக் கூடுமெனப் பொலீஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுமென்பதால், கைது செய்யப்பட்டுள்ள நபரின் பெயர் விவரங்களை வெளியிட இயலாது எனவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கொலையுண்ட ஆதரவாளர் அப்பிரதேசத்தின் பிரபல வர்த்தகர் ஒருவர் என்பதாலும், அப்பிரதேசத்திலுள்ள எதிரணி அரசியல் ஆதரவாளர்களுக்கும் இவருக்கும் இடையில் அண்மையில் ஏற்பட்டுள்ள வாக்குவாதமே இத்தாக்குதலுக்குக் காரணமாக இருக்கக்கூடுமெனவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஓ-ரி)

## கொத்மலை நீர்மின்திட்டம்

# வழங்கிய வாக்குறுதியை அரசு மீறி நடக்கிறது

## இ.தொ.கா.குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூன்26

கொத்மலை நீரமின் திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்போவதாக அரசாங்கம் அறிவித்திருப்பதானது சில தினங்களுக்கு முன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கு அது வழங்கியிருந்த வாக்குறுதியை மீறும் செயலாகும் என்று இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இ.தொ.கா., அரசுடன் சேர்ந்து கொள்ளப்போவதில்லையென்று அறிவிப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னா இந்த உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது. எங்கள் அறிவிப்பு வெளியானதும் அந்த உறுதிமொழி கைவிடப்பட்டுவிட்டது.

கடந்த வாரம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதி அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகே எமது தலைவர் ஆறுமுகம் தொண்டமானைச் சந்தித்து கொத்மலைத் திட்டம் கிடப்பில் போடப்படும் என்று கூறியிருந்தார். அது பற்றி எதுவித அச்சமும் கொள்ளத் தேவையில்லையெனவும் தெரிவித்திருந்தார். இ.தொ.கா., அரசுடன் சேர்ந்து செயற்படப்போவதில்லை என்று அறிவித்ததையடுத்து அந்த தீர்மானத்தை அவர்கள் மாற்றிக் கொண்டுவிட்டார்கள் என்று யோகராஜன் கூறியிருக்கின்றார்.

இ.தொ.கா. ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இரண்டு தேசியப் பட்டியல் உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. அவர்கள் எட்டுப் பேரும் அரசாங்கக் கட்சியில் சேர்ந்து இயங்கப் போகிறார்கள் என்று அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் சிலர் கூறிக்கொண்டிருந்தார்கள். ஆனால், உறுதியில்லாததும், தமக்குள் மோதிக் கொள்வதுமான ஓர் அரசாங்கத்தை ஆதரிப்பதனால் எதுவிதப்பயனும் ஏற்படப் போவதில்லையென்று இ.தொ.கா. முடிவுசெய்துவிட்டது. (பு)

# சிகிரியாவின் வெளிச்சுவரில் புராதன ஓவியம் கண்டுபிடிப்பு

கொழும்பு,ஜூன்26

சிகிரியாக்குன்றின் வெளிப்புறச் சுவரில் தீட்டப்பட்டிருந்த சுமார் 500 ஆண்டுகள் பழமைவாய்ந்த சுவரோவியம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் கலாசார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சிகிரியாக் குன்றுக்கு விஜயஞ்செய்த அமைச்சர் மேற்படி சுவரோவியத்தைப் பார்வையிட்ட போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இவ்வாறான படைப்புக்களை மக்கள் பார்ப்பதன்மூலம் புதிய படைப்புக்களை உருவாக்குவதற்குத் தூண்டுகோலாக அமையும். அத்துடன், பாரம்பரிய கலாசாரச் சின்னங்களைப் பராமரிப்பதன் மூலம் நாட்டின் பழமையான வரலாறு பேணப்படும் மேலும், இத்தகைய இடங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரிக்கும்.

தற்போது நாட்டின் பாரம்பரிய கலாசாரத்தைப் பாதுகாப்பதற்கும், பாரம்பரிய கலாசார இடங்களை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் - என்றார் அவர். (ஓ-ரி)

# நம்பிக்கை நிதிய உறுப்பினர்களின் பிள்ளைகளுக்குப் புலமைப்பரிசில்

கொழும்பு,ஜூன்26

கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் ஊழியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்குப் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை கோரியுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிவரை அனுப்பிவைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கத்தவர்களின் பிள்ளைகள் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையும்வரை வருடமொன்றுக்கு தலா 10 ஆயிரம் ரூபா புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது. இதன்படி 2ஆயிரத்து 500 பேருக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (10-ரி)

# ஊர்காவற்றுறை வீதி புனரமைக்கப்படும்

குருநகர்,ஜூன்26

சேதமடைந்துள்ள யாழ்ப்பண்ணை-ஊர்காவற்றுறை வீதி நிக்கொட் திட்டத்தின்கீழ் புனரமைக்கப்படவுள்ளது என ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தெரிவித்தார்.

அத்துடன், பண்ணைப் பால வீதி அகலமாக்கப்படவுள்ளது. இவ்வீதியில் இருமருங்கிலுமுள்ள மரக்கிளைகளை வீதி புனரமைப்புக்கென அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-51)

# ஜேர்மனியின் ஐரோப்பியக் கிண்ணக் கனவு செக்குடியரசின் அபார ஆட்டத்தால் தகர்ந்தது

லிஸ்பன்,ஜுன்26

ஐரோப்பியக் கிண்ணக் காற்பந்துத் தொடரில் மூன்றுமுறை சம்பியனான ஜேர்மனி இம்முறை கால் இறுதிப் போட்டியில் விளையாடுவதற்குத்



தகுதிபெறாமலே வெளியேறியுள்ளது.

ஜேர்மனிக்கும் செக்குடியரசு அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இரண்டு வெற்றிகளுடன் ஏற்கனவே காலிறுதிக்கு முன்னேறி விட்ட செக்குடியரசு அணியில் 9 மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. முக்கிய வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டு இளம் வீரர்கள் அதிகளவில் களமிறக்கப்பட்டனர். ஜேர்மனியைப் பொறுத்த வரை வாழ்வா சாவா போராட்டத்தில் களமிறங்கியது. இப்போட்டியில் வெற்றிபெற்றால் தான் கால் இறுதிப் போட்டியில் விளையாடமுடியும் என்ற நிலை ஜேர்மனிக்கு.

ஆட்டத்தின் தொடக்கத்தில் இரு அணிகளுமே ஏனோதானோ என்று விளையாடின. வீரர்கள் பந்தை தவறாகப் 'பாஸ்' செய்து வெறுப்பேற்றினர். 20 ஆவது நிமிடத்தில் ஜேர்மனிக்கு ஒரு வாய்ப்புக்கிட்டியது. இதை அணியின் நட்சத்திர வீரரான பொலக் அடித்தார். ஆனால், பந்து கோல் போஸட்டுக்கு மேலே செல்ல வாய்பபு வீணானது.

ஆனாலும், அடுத்த நிமிடத்தில் செக்குடியரசின் பிலாசிடம் இருந்து பந்தைத் தட்டிப் பறித்த ஜேர்மனியின் சினிடர் அதை சகவீரரிடம் அனுப்பினார். அவர், பொலக் பக்கம பாஸ் செய்தார். இம்முறை வலதுகாலால் பந்தை பொலக அடிக்க ஜேர்மனயின் முதல் கோல் விழுந்தது. இதற்கு 30 ஆவது நிமிடத்தில் செக் குடியரசு பதிலடி கொடுதததது. இந்த அணியின் ஹெறயின்ஸ் 'பிரீ' கிக்' வாயப்பு மூலம் அருமையான கோல் அடித்தார். சுமார் 30 மீற்றர் தூரத்தில் இருந்து அடிக்கப்பட்ட இந்தக் கோலைத் தடுக்கும் ஜேர்மனியின் 'சூப்பர் கிப்பர்' ஒலிவர் கானின் முயற்சி தோல்வியில் முடிந்தது. ஆட்டம் சமநிலையை எட்ட ஜேர்மனிக்கு 'டென்ஷன்' அதிகரித்தது. பொலக், சினிடர் களத்தில் பம்பரமாக சுழன்றுகோல் அடிக்க முயற்சித்தனர். 66 ஆவது நிமிடத்தில் பொலக் அடித்த பந்து கோல்போஸ்டில் பட்டுத் திரும்பியது. இதை சினிடர் திரும்ப அடிக்க, பந்தோ கோல்போஸ்டை விட்டு விலகிச் சென்றதால் கைக்கு எட்டிய வாய்ப்பு நழுவிப்போனது.

ஆட்டத்தின் கடைசி 13 நிமிடங்களில செக்குடியரசின் கை மேலோங்கியது. 77 ஆவது நிமிடத்தில் ஹெயின்ஸ் கொடுத்த பந்தைப் பெற்ற மிலன் பாரோஸ் ஜேர்மனியின் அத்தனை வீரர்களையும் சமாளித்துக் கோல் போஸ்டை நோக்கி அதிவிரைவாக முன்னேறிச் சென்றார். இவர், அடித்த கோலை ஒலிவர் கான் தடுத்து வெளியே தள்ளிவிட்டார்.

இதை மீண்டும் பாரோஸ் அடித்து கோல் ஆக்க ஜேர்மனியின் காலிறுதி வாய்ப்புத் தகர்ந்தது. இப்போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற செக் குடியரசு நாளை நடக்கும் காலிறுதிப் போட்டியில் டென்மார்க்கைச் சந்திக்கிறது. (10)

# போட்டி விதிகளைக் கடைப்பிடிக்காமையால் உதைபந்தாட்டப் போட்டிகள் இடைநிறுத்தம்

வலி.வடக்கு,ஜுன்26

உதைபந்தாட்ட விதிகளுக்கு அமைவாகப் போட்டியை நடத்தாமைக்காக அராலியில் நடைபெற்று வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி தமிழீழ விளையாட்டுத்துறையினரால் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

அராலியில் உள்ள விளையாட்டுக கழகம் ஒன்றினால் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் மற்றும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவினரின் முன் அனுமதி பெற்று இப்போட்டி நடைபெற்று வந்தது.

போட்டியை நடத்துபவர்கள் விளையாட்டு விதிகளை உரிய முறையில் கடைப்பிடிக்கவில்லை எனவும், மைதானம் சீரில்லை எனவும் கழகங்கள் செய்துகொண்ட முறைப்பாட்டின் பேரில் இப்போட்டிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (10-86)

# எம்.டி.வி விருது பெறுகின்ற முதலாவது கிரிக்கெட் வீரர் ராகுல் டிராவிட்




புதுடில்லி,ஜுன்26

இந்திய சினிமாவின் ஜாம்பவான்களான அமிதாப்பச்சன், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் உட்படப் பல பிரபலங்களைப் பின்னுக்குத் தள்ளி எம்.டிவி விருது பெற்றுள்ளார் ராகுல் டிராவிட்.

எம்.டிவி நிறுவனம் தேசிய அளவில் பிரபலமானவர்களுக்கு ஆண்டு தோறும் 'யூத்ஐகான்' விருது வழங்கி கௌரவிக்கிறது. நாடு முழுவதும் உள்ள இளைஞர்கள் தங்கள் அபிமானத்துக்குரிய மனிதராக யாரைக் கருதுகிறார்கள் என்று கருத்துக் கணிப்பு நடத்தப்படும். தம்மைக் கவர்ந்தவராக இளைஞர்கள் கருதும் நபர், அந்த ஆண்டின் 'யூத்ஐகான்' விருதுபெறுவார்.

இந்த ஆண்டுக்கான 'யூத்ஐகான்' விருதுக்கான கருத்துக்கணிப்பு டில்லி, மும்பை, கல்கத்தா, ஐதராபாத் உள்ளிட்ட பத்துப்பெரிய நகரங்களில் சமீபத்தில் நடத்தப்பட்டது. இந்தி சினிமா நடிகர் அமிதாப்பச்சன், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் 'டிவி' பிரபலம் சேகர் சுமன், நோபல் பரிசுபெற்ற அமர்த்தியா சென், தொழிலதிபர் ரத்தன் டாடா உளளிட்ட பல பிரபலங்கள் இம்முறை போட்டியில் இருந்தனர்.

அனைவரையும் பின் தள்ளிவிட்டு ராகுல் டிராவிட் இந்த ஆண்டின் 'யூத்ஐகான்' விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார் என மேற்படி நிறுவனம் அறிவித்துள்ளது. 'இது மிகப் பெரிய விடயம். இந்தியாவில் உள்ள இளைஞர்கள் தங்களைக் கவர்ந்தவராக என்னைத் தேர்வுசெயவார்கள் என்று நான் நினைத்துக் கூடப்பார்க்கவில்லை. போட்டியில் இருந்த மற்றைய பிரபலங்களைப் பார்க்கும்போது இந்த விருதின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது." என்றார் ராகுல் திராவிட்.

அழகான உங்கள் தோற்றத்துக்காக நீங்கள் தேர்வு செய்யப்பட்டீர்களா? என்று கேட்டபோது "நான் அழகானவன் எனறு நினைப்பதேயில்லை. இது எனது கிரிக்கெட்டுககுக் கிடைத்த மரியாதை. நிறைய இளைஞர்கள் கிரிக்கெட்டையும் என்னையும் கவனிக்கிறார்கள் என்பதை இது உணர்த்துகின்றது - என்று தெரிவித்துள்ளார். இந்த விருதுபெற்ற முதல் கிரிக்கெட் வீரர் இவர்தான் என்பது விசேடம். கடந்த ஆண்டுக்கான தேர்வில், மிகக்குறைந்த ஓட்டுவித்தியாசத்தில் தொழிலதிபர் அனில் அம்பானியிடம் விருதை இழந்தார் சச்சின் டெண்டுல்கர். (10)

# விளையாட்டு

## விளையாட்டு விழா

சாவகச்சேரி,ஜுன்26

மட்டுவில் தெற்கு கலைமகள் முன்பள்ளிச் சிறுவர்களின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் இளைப்பாறிய அதிபர் க.துரைரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நரவிராஜ் பிரதம விருந்தினராகவும், சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் மு்.செ.சரவணபவ சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (10-31-117)

## கால் இறுதி ஆட்டங்கள்

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தி வரும கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள கால் இறுதி ஆட்டங்கள் வருமாறு:-

★ காலை 8.30 மணி - மானிப்பாய் பரீஸ் வி.க. எதிர் யங்ஸ்ரார் வி.க.

★ பிற்பகல் 1.30 மணி - பற்றீசியன் வி.க. எதிர் ஒல்கோல்ட் வி.க.

(10-190)

## உதைபந்தாட்ட அணி மன்னார் சென்றது

யாழ்ப்பாணம்,ஜுன்26

மன்னார் மாவட்டத்தில் இன்று ஆரம்பமாகவுள்ள மாகாணமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காக யாழ்.மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட உதைபந்தாட்ட அணியினர் நேற்று மன்னாருக்குச் சென்றுள்ளனர்.

இன்று தொடக்கம் மூன்று நாள்கள் இடம்பெறவுள்ள இப்போட்டியில் 8 மாவட்டங்களைச் சேர்ந்த உதைபந்தாட்ட அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

இன்றுகாலை 9 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகும் முதல் போட்டியில யாழ்.மாவட்ட அணி திருகோணமலை மாவட்ட அணியை எதிர்த்து விளையாடவுள்ளது. (10-190)

## அமரர் ஆறுமுகம் கமலநாதன் ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம்,ஜுன்26

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் ஆறுமுகம் கமலநாதன் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவுசெய்த கழகங்கள் கலந்து கொள்ளவுள்ள இச்சுற்றுப் போட்டிக்கான அணி ஒழுங்குத் தெரிவு நாளை ஞாயிறுக்கிழமை நடைபெறவுள்ளது. (-10)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் திரு.பொ.நாகரத்தினம்
அவர்களின் அன்புச் சகோதரி

**திருமதி குணரத்தினம் சிவக்கொழுந்து**

அவர்கள் 22.06.2004 அன்று காலமானதையிட்டு நாம் மிகவும் மனம் வருந்துகின்றோம். அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/குளமங்கால் றோ.க. வித்தியாலயம். மல்லாகம்.

(33490)(40-19)

## யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன் இலவச ஆங்கில நேரடி வகுப்பு

### ஒருமணி நேரத்தில் முழுமையாக ஆங்கிலத்தில் கதைக்க முடியும்

சந்தேகம் வேண்டாம். இதுவரை முப்பதாயிரத்துக்கு மேற்பட்டோர் பயிற்சிபெற்று நிருபிக்கப்பட்ட பாடநெறி

இடம்: றிம்மர் மண்டபம் (TRIMMER HALL)
யாழ். மத்திய கல்லூரிஅருகில்

காலம்:26.06.2004, 27.06.2004 மற்றும் 28.06.2004
சனி, ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை

வகுப்புகள் (ஏதாவதொரு வகுப்பில் கலந்துகொள்ளலாம்)

| | |
|---|---|
| காலை 9.00 முதல் 10.00 | காலை 10.00 முதல் 11.00 |
| மாலை 2.00 முதல் 3.00 | மாலை 3.00 முதல் 4.00 |
| மாலை 4.00 முதல் 5.00 | மாலை 5.00 முதல் 6.00 |

குறிப்பு: ஞாயிறு காலை வகுப்புகள் நடைபெறமாட்டாது.

### அனுமதி இலவசம்

பாடசாலை மாணவர்கள், பெற்றோர், கணனி, உயர்கல்வி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வீட்டுப்பெண்கள், இளைஞர், யுவதிகள், பட்டதாரிகள், அரச தனியார் அலுவலர்கள், ஆசிரியர்கள் -

அனைவரும் கலந்துகொள்ளலாம்

கலந்துகொள்ளும் அனைவருக்கும் கற்கைநெறி வழிகாட்டியும் கலந்துகொண்டதற்கான சான்றிதழும் இலவசம்.

குறிப்பு: கடந்த காலங்களில் வகுப்புகளில் கலந்து சான்றிதழைப் பெறாதவர்கள் நேரடியாக வந்து சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம். எமது பாடநெறிகளுக்கான புத்தகங்கள் கிடைக்கப் பெறாதவர்களும் நேரடியாக பெற்றுக்கொள்ளலாம்.

PSALM INSTITU[illegible] ENGINEERING AND TECHNOLOGY

(சி-35829)(34-19)

## WANTED

Euroville Investments (Pvt) Ltd. a Stock brokers & Insurance agents have following vacancies to be filled immediately.

- Investements Advisors
- Insurance Promotion Officers

**QUALIFICATION:**

- Degree in Economics / Commerce / Management
  OR
- 3 Passes at the G.C.E. (A/L) Commerce / Science
- Good command of English
- Computer Literate

**APPLICANTS MUST BE:**

- Age Between 22-35 Years.
- Part - time basis can be considered.

The selected candidates will be given comprehensive training in all aspects of Stock Broking and Insurance for a period of three months.

Apply with references within 7 days.

**Human Resource Manager,**
**EUROVILLE INVESTMENTS (PVT) LTD.**
No. 17, Chemmany Road, (Next to Agrarian Service Center)
Nallur, Jaffna. Phone: 2227012, 222 2849.

(C/35832) (24-34-19)

## விற்பனைக்கு

37.H.P. - 490R.P.M. BLACKSTONE என்ஜின்-1
18 K.V.A. - 3 பேஸ் டைனமோ ENGLAND - 1
40- H.P. - 3 பேஸ் SLIPPING மோட்டர் INDIAN - 1
40-H.P. - 3 பேஸ் OILBATH ஸ்ராட்டா INDIAN - 1
12-H.P. - டீசெல் என்ஜின் - PETER - 1
ROTARY - செக்கு மெஷின INDIAN - 1
எண்ணெய் ஸ்ரோரேச் டாங்குகள் - (இரும்பு)
2x30,000 லீற்றர் கொள்ளக்கூடியது - 2
லேடன் 26 SRI என்ஜின், கியர் பொக்ஸ், மோட்டார் -1
நல்லநிலையில் உள்ளன.

**உடனடி விற்பனைக்குண்டு.**

வேலை நேரங்களில் பார்வையிடலாம்.

**மல்ரி - ஒயில்**
தேங்காயெண்ணெய் ஆலை, இணுவில்.

T.P 222 6887

(33484)(40-19)

# பல்கலை. அனுமதியை இழந்தவர்களுக்கு வழிகாட்டும் தொழில்சார் பயிற்சிப்பட்டறை

**பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு மொரட்டுவைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றம் 'உதயன்' ஊடக அனுசரணையுடன் தொழில்சார் கற்கைநெறி வழிகாட்டல் மற்றும் கணனியியல் கருத்தரங்குகளை யாழ்ப்பாணத்தில் நடத்திவருகின்றது. நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற இக்கருத்தரங்கு இன்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், அதனைத் தொடர்ந்து வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பிரதேசங்களிலும் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கின் அவசியம் குறித்து விரிவாக ஆராய்கிறது இந்தக்கட்டுரை.**


மக்கள் வங்கியின் சிசு உதான் இணைப்பாளர் வ.சிவசந்திரதேவன் குத்துவிளக்கேற்றும்போது..


மொறட்டுவைப் பல்கலைக் கழக மாணவன் சிறீ கைலைநாதன் தலைமையுரை ஆற்றும் போது...

போட்டி முறைமையின் குறிப்பிடத்தக்க பின்விளைவுகளில் கல்வியில் ஏற்பட்டுள்ள போட்டி நிலைமையும் ஒன்றாகும். இவ்வாறான போட்டிக் கல்வியின் இலக்கைத் தொழில்துறை, தொழில் வாய்ப்பு என்பவற்றில் முற்றாக குவித்துவிட, அவ்வா


நேற்றைய பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றிய இளைஞர்கள்

படங்கள்-புஷ்பா

றான கல்வியினைப் பொருத்தமாகவும், திட்டமிட்டும் பெறுவது மிகுந்த சவாலுக்குரிய விடயமாக உருவாகியுள்ளது. உயர்கல்வி விடயத்திலேயே இது முக்கிய கவனத்தைப் பெற்றுள்ளது. இவற்றின் அனுகூலம், பிரதிகூலம் என்பன பற்றிய வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பால் இவ்வாறான யதார்த்தத்தைப் புரிந்து கொள்வதும, அதற்கேற்ற வகையில் தொழிற்படுவதுமே அவசியமானது.

மறுபுறத்தில் கல்வியில் சம வாய்ப்பு என்பது கோட்பாட்டளவில் உறுதியாக இருப்பினும் நடைமுறைச சிக்கல்களும், ஏனைய இடர்பாடுகளும் இக்கோட்பாட்டினைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதில் சிக்கலாக்கியுள்ளன. வளங்களின் பற்றாக்குறை, வளப்பங்கீட்டில் அசமத்துவம், அவ்வாறான வளங்களின் உச்சப்பயன்பாட்டைப் பெறுவதில் காணபடும் முகாமைத்துவ இடர்பாடுகள் என

பன அவ்வாறான சில நடைமுறை இடர்பாடுகளாகும். கூர்மையாகப் பிளவுபட்டுள்ள சமூகங்களில் சீர்திருத்தங்களுக்கு எதிரான பாரிய எதிர்ப்புக்ளும் இவ்வாறான அசமத்துவத்தைத தக்கவைப்பதில் குறிப்பிடத்தக்க பஙகாற்றுகின்றன.

தமிழ் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளோ இன்னமும் தனித்துவமானவை. கல்வித்துறை சார்ந்த அண்மைய புள்ளி விவரங்கள் தமிழ்ச சூழலைப் பொறுத்தவரை திருப்திகரமானவையாக இல்லை என்பது கல்வியாளர்களால் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக பல்கலைக்கழக அனுமதி குறித்த வடக்கு-கிழக்கு புள்ளி விவரங்கள் அத்துணை மகிழ்ச்சி தரவல்லன அல்ல என்பது குறிப்பிடத்தக்கதாகும். பாரியயுத்த அனர்த்தங்களின் மோசமான பின்விளைவுகளில் இதுவும் ஒன்றாகும்.

இலங்கையில் அனைவருக்கும் இலவசமான பாடக்கல்வி உயர் தரத்துடன் மட்டுப்படுத்தப்பட்டுவிட உயர்தரப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுகின்ற குறிப்பிட்ட அளவுள்ள மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் உயர்கல்விக்

காக அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வாறாக, கிடைத்தற்கரிய சொற்ப இடங்களுக்காக பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் போட்டியில் ஈடுபடுவதும குறிப்பிட்ட அளவான மாணவர்கள் தெரிவாவதும் வருடாந்தக் கதையாகியுள்ளது. ஏனையவர்களில் ஒரு பகுதியினர் செய்வதறியாது திகைத்து நின்றிட வேறுபலர் உயர் கல்வி நோக்கத்தையே கைவிட்டு தொழில்வாய்ப்புக்களைத் தேடியோ, வேறுவழிகளை நாடியோ சென்றுவிடுகின்றனர்.

**கபிலன்**
**மொரட்டுவைப் பல்கலைக்கழகம்**

இவ்வாறான பல்கலைக்கழகங்ளுக்கு ஈடான அல்லது மாற்றீடான தொழில்சார் உயர்கல்வியை வழங்கக் கூடிய நிறுவனங்களோ, வாய்ப்புகளோ சில வருடங்களுக்கு முன்னர் பெரிய அளவில் காணப்படவில்லை. எனினும், பல்வேறுபட்ட காரணங்களினால அந்நிலை மாற்றமடைந்து உயர் கல்விக்கான வாய்ப்பு பல்வேறு மட்டங்களில் திறந்து விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். எவ்வாறாயினும், இவ்வாய்ப்புக்களை நாடுவதிலும் உபயோகிப்பதிலும் உள்ள நடைமுறைச்சிக்கல்களைக் கருத்திற்கொண்டு அவற்றை நிவர்த்தி செய்வதில் ஈடுபடுவதே அவசியமானதாகும். இதுதொடர்பாக பொதுவாக அவதானிக்கப்படும், சில இடர்பாடுகளாக:-

1. வாய்ப்புகள் பற்றிய தகவல்களை இலகுவாகப் பெற முடியாமை.
2. பொருத்தமான உயர் கல்வியைத் தெரிவுசெய்வதில் உள்ள குழப்பம்.
3. உயர் கல்விக்கு அவசியமான ஆங்கில அறிவு போதாமை.
4. தொழில் வாய்ப்புக் குறித்த அவநம்பிக்கை.
5. தனியார் கல்வியின் தரம் குறித்த மரபுவழி நம்பிக்கையின்மை.

போன்றவற்றை இனங்காணுவது சுலபம். இவை அனைத்து சமூகங்களுக்கும் பொதுவானவை. எனினும், தமிழ்ச் சூழலில் இவற்றின் தாக்கமும், இவ்வாறான போக்கும் அதிகமாகவே அவதானிக்கப்படுகின்றன.

பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்பினை இழந்ததும், மேற்கொண்டு தமது உயர்கல்வி வாய்ப்புகள் அனைத்தும் இழக்கப்பட்டுவிட்டதாக உணரும் தமிழ் மாணவர்கள் மேற்கொண்டு முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துவரும் போக்கு வெகு சாதாரணமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே, சாத்தியமான வாய்ப்புக்களை உச்ச அளவில் உபயோகிப்பதற்கான சூழலையும், வசதி


ஊடக அனுசரணை
உதயன்

களையும் உருவாக்குவதற்காக முன்னின்று உழைக்கவேண்டிய பாரிய பொறுப்பும், சுமையும் கல்விச் சமூகத்தின் முன்னே உள்ளன.

தனியார் கல்வி நிறுவனங்களும்; பத்திரிகைகளின் விசேட இணைப்புக்களும் கணிசமான பங்களிப்பினை இவற்றுக்காக வழங்குகின்றன. எனினும், இன்னும் அதிக அளவிலும் பரந்தளவிலும் இவ்விடயம் கையாளப்படவேண்டிய தேவையுள்ளது.

இவற்றைக் கருத்திற்கொண்ட மொறட்டுவைப் பல்கலைக்கழக தமிழ இலக்கிய ஒன்றியம் எதிர்வரும் மாதங்களில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் தொழில்முறை வழிகாட்டி நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடத்தத் தீர்மானித்துள்ளது. முதற்கட்டமாக இத்திட்டமானது அண்மையில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளுக்காகக் காத்திருப்போருக்காக தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்களில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சாத்தியமான தொழில்கல்வி வாய்ப்புகள் குறித்த தகவல்கள் திரட்டப்பட்டு அவற்றை மாணவர்களின் பொருளாதார, கல்விப் பின்னணிக்கு ஏற்ற வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டு மாணவர்கள் சுலபமான வழியில் பொருத்தமான வாய்ப்புகள் குறித்த தகவல்களைப் பெறும் வகையில் இது திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டமானது மொறட்டுவைப் பல்கலைக்கழக மாணவர்களினால் ஏனைய கல்வி, சமூக செயற்பாட்டாளர்களின் ஒத்துழைப்புடனும், ஆலோசனைகளுடனும் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், தகவல்களைத் திரட்டுதல் அவற்றை ஒருங்கிணைத்தல் என்பவற்றில் கணிசமான உழைப்பும், பொருளும் செலவிடப்பட்டுள்ளது. இம்முயற்சியின் வெற்றியானது தமிழ்ச்சமூகத்தில் உயர்தொழில்சார் கல்வி குறித்த விழிப்புணர்விலேயே தங்கியுள்ளது எவ்வாறாயினும் இவ்வாறான முயற்சிகள் தொடர வேண்டியதன் அவசியம் பரவலாக உணரப்பட்டே உள்ளது. ★

# தமிழக மீனாட்சி மிஷன் ஆஸ்பத்திரியின் வைத்திய சேவை யாழ்ப்பாண மக்களுக்கும்

## வைத்தியப் பணிப்பாளர் ராஜசேகரம் தகவல்

சர்வதேச தரம்வாய்ந்த - இந்திய அரசின் விருதுபெற்ற தமிழ் நாடு மீனாட்சி மிஷன் வைத்திய சாலை மற்றும் ஆராய்ச்சி நிலையம் யாழ்மக்களுக்குச் சேவையாற்ற முன வந்துள்ளது.

சலுகை அடிப்படையில் சகலவிதமான சிகிச்சைகளையும் இந்த வைத்தியசாலையில் யாழ். மாவட்ட மக்கள் பெறுவதற்கு விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் வந்திருந்த அந்த வைத்தியசாலையின் வைத்தியப் பணிப்பாளர் பேராசிரியர் வி.என்.ராஜசேகரம் தெரிவித்தார்.

ஆண்மையியல் மற்றும் சிறுநீரியல், மயக்கவியல், இருதயநோய், இருதயநாள அறுவை, பல் அறுவை, தோல் மருத்துவம், சர்க்கரை நோய், மகப்பேறின்மை, குடல்நோய், கதிர்வீச்சு மருத்துவம் உட்படப் பலவிதமான நோய்களுக்கான சிகிச்சைகளையும் ஒரே கூரையில் தமது வைத்தியசாலையில் பெறமுடியும் என்றும் -

அதிநவீன வைத்திய கருவிகளின் உதவியுடன் சிகிச்சைகள் வழங்கப்படும் என்றும் - அவர் கூறினார்.

இலங்கையைச் சேர்ந்த நோயாளர்களுக்கு மொத்தச் செலவீனத்தில் 50 சதவீதமான சலுகைக் கட்டணம், நோயாளிக்கும் அவரது உதவியாளருக்கும் இலவச இருப்பிட, உணவு வசதிகள் வழங்கப்படவிருக்கின்றன.

அத்துடன், தமிழகம் வருவதற்கான விஸா மற்றும் பயண உதவிகளைக் கொழும்பில் உள்ள தமது முகவர் ஏற்பாடு செய்வார் என்றும் -

கொழும்பில் செயற்படும் தமது முகவரான லெனின் கோபாலுடன் 4610627 அல்லது 0785109710என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு உதவியைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் - அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் தமது நிறுவனத்தின் இரு முகவர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அவர் சொன்னார்.

கடந்த வாரம் ஆறு வைத்திய நிபுணர்கள் சகிதம் இலங்கைக்கு வந்த பேராசிரியர் ராஜசேகரன் கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள வைத்திய நிபுணர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார். (எ-3)

# நலன்புரி நிலையங்களிலுள்ள தகுதியான வீடுகளுக்கு மின்சாரம்

## வழங்குமாறு மக்கள் கோரிக்கை

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் உள்ள தகுதியான வீடுகளுக்கு மின்சாரம் வழங்குமாறு நலன்புரி நிலையங்களில் வாழும் குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த காலத்தில் பல இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் இருந்த தற்காலிக ஓலைக் கொட்டகைகள் மாற்றப்பட்டு தற்போது தகரத்தினாலான கூரை, சிமெந்துத் தூண்கள் என்பன கொண்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் ஓரளவு அரை நிரந்தர வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த காலத்தில் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் உள்ள சில குடும்பங்கள் சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற்றமைக்காக நீதிமன்றினால் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலைமையில் பிள்ளைகள் கல்விகற்பதற்கு வசதியாகத் தகுதியான வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்படவேண்டும் என்று சம்பந்தப்பட்ட மக்கள் மின்சாரசபையிடம் கோரியிருக்கின்றனர். (-4-86)

# வலி. தெற்கில் பல இடங்களிலும் கட்டாக்காலிகளால் தொல்லை

வலி.காமம் தெற்கு,ஜூன்26

வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் மற்றும் கட்டாக்காலி கால்நடைகள் என்பவற்றின் தொல்லை அதிகரித்துள்ளதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

கட்டாக்காலி நாய்களால் தினமும் வீதிகளில் செல்லும் பயணிகளுக்குப் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. கால் நடையாகச் செல்லும் பயணிகளை அச்சுறுத்தியும், சைக்கிள்களில் செல்வோரைத் துரத்தியும், மோட்டார் சைக்கிள்களுக்கிடையில் குறுக்காக ஓடி விபத்துக்களையும் ஏற்படுத்தி வருகின்றன. அத்துடன் இவை வீதிகளில் மலசலம் கழிப்தால் சூழல் மாசடையவும் செய்துவிடுகின்றன.

அதேவேளை - கட்டாக்காலி காலநடைகளும் விவசாய நிலங்களில் விளைந்துள்ள பயிர் வகைகளை அழித்து நாசம்செய்து வருகின்றன.

கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டி அழிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறவேண்டும் என்றும் - அதனால்தான் இவற்றைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் வலி. தெற்குப் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் - கட்டாக்காலிகளான கால்நடைகளைப் பிடிப்பவர்கள் அவற்றை விவசாய சம்மேளனத்தினரிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் -

சம்மேளனத்தினர் பயிர் அழிவு, பிடிகூலி, பராமரிப்புச் செலவு போன்றவற்றினை பற்றுச்சீட்டுக்களைக் கொடுத்து பெற்றபின்னர், கால்நடைகளை உரியவர்களிடம் வழங்க வேண்டும் என்றும் - உடுவில் பிரதேச பெருமபாக உத்தியோகத்தர் எஸ்.சோதிநாதன் அறிவித்துள்ளார். (எ-152)

# இறைச்சிக்காகப் பசுவை வெட்டியவர் சுகாதாரப் பிரிவினரால் பிடிக்கப்பட்டார்

## கடையிலிருந்த இறைச்சி அழிப்பு

அனுமதியின்றிப் பசுமாட்டை இறைச்சிக்காக வெட்டி விற்பனை செய்த இறைச்சிக் கடை உரிமையாளர் ஒருவரை யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் மடக்கிப் பிடித்துள்ளனர்.

குருநகர் பகுதியில் இயங்கிவரும் இறைச்சிக் கடையின் உரிமையாளர் ஒருவரே இவ்வாறு கடந்த 22ஆம் திகதி அனுமதியின்றிப் பசுமர்டு ஒன்றை வெட்டுவதாகச் சுகாதாரப் பரிசோதகர் பணிமனைக்குக் கிடைத்த தகவலையடுத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டவராவார். சுமார் 76 கிலோ எடையுள்ள பசுமாட்டின் இறைச்சியினைக் கடையிலிருந்து மீட்ட சுகாதாரப் பணிமனையினர் அவற்றை உடனடியாக அழித்துவிட்டனர்.

பின்னர் சம்பந்தப்பட்ட இறைச்சிக்கடை உரிமையாளர் சுகாதாரப் பிரிவினரால் எச்சரிக்கை செய்யப்பட்டார். (எ-6)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை
திருமதி கலைவாணி அருள்மாறன் அவர்களின்
அன்புச் செல்வம்

**அ. வைதேகி**

அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர்த்
துளிகளைக் காணிக்கையாக்குவதுடன் அவர்களது
துயரை நாமும் பகிர்ந்து கொண்டு
மழலைச் செல்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்.

(C/35840)(40-13-17)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்26

நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (10-139)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்26

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் உள்ள சனசமூக நிலையத்தில் சங்கத்தலைவர் ந.கனகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (10-ரி)

## மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடலும ஒன்று கூடல் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குப் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்பவர்களுக்கான போக்குவரத்துக்கள் மேற்படி சங்கத்தால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. எனவே, அனைத்து மத்தியஸ்தர்களையும் அன்றைய தினம் காலை 8 மணிக்கு சங்கப்பணிமனையில் தவறாது ஒன்று கூடுமாறு செயலாளர் இ.ஆனல்ட் கேட்டுள்ளார். (10-190)


தமிழீழ விளையாட்டுத் துறையின் ஆதரவுடன்
சிறி விவேகா நகை மாடத்தின் அனுசரணையுடன்
கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கலாசாரக்கழகம்
யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தும்
மாபெரும் சுற்றுப் போட்டிகள் - 2004

★ மென்பந்து கிரிக்கெட் (11 பேர், 20 ஓவர்)
★ கரபந்தாட்டம்.
★ கூடைப்பந்தாட்டம் (ஆண்,பெண்)

இப்போட்டிகளுக்கான வீண்ணப்ப முடிவுத் திகதி :08.07.2004
பதிவுக் கட்டணம்: 200/=
அணி ஒழுங்குத் தெரிவு 10.07.2004 (பி.ப 4.30)
விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும் இடங்கள்:
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
சோபி கொமினிகேசன் (கோப்பாய் பெற்றோல் செற் அருகில்)
T.P: 0212226712, 0777111326 - செயலாளர்

## நினைவஞ்சலி

2 ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு



அமரர்
அமரசிங்கம் அன்பழகன்

மண்ணில் 14.06.1966
விண்ணில் 04.06.2002



அமரர்
செல்லத்தம்பி அமரசிங்கம் (P.M.)

மண்ணில் 05.11.1938
விண்ணில் 29.06.2001

அன்பின் சிகரங்களே! நீங்கள்
அப்பாவும், மகனுமாய் அரனடி சேர்ந்துவிட்டீர்கள்
உறவோடு உறவாகக் கலந்துவிட்டீர்கள்
உயிரோடு உயிராகச் சென்றுவிட்டீர்கள்
ஈரவிழிகளுடன் இருவரையும் பிரிந்து,
பாரமனதுடன் தவிக்கிறேன் தனிமரமாய்
ஆருயிர்த் தெய்வங்களின் ஆத்ம சாந்திக்காய்
ஆண்டவனை வேண்டி இன்று அஞ்சலிக்கின்றேன்.

465/3, K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்.

(33507)(37-16-18)

திருமதி அ.திலகவதி,
(மனைவி, தாய்) ,குடும்பத்தினர்.

## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

### பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் பிற்போடல்

நாளை (27.06.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த மேற்படி பொதுக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 11.07.2004 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்பதை உங்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

செயலாளர்,
திரு.எஸ்.மன்மதராசலிங்கம்

அதிபர்
திரு.வி.மாணிக்கம்

(C/35835)(40-13-17)


Jayoda ஜயோதா ජයෝද

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7234834 முதல் 7246497 வரை
சீட்டிழுப்பு இல. 44 திகதி 24-06-2004

வெற்றி எண்கள் **9 3 7 4 7 6** சுப்பர் எண் **11**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,08,59,825/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,08,59,825/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 104 | 5,000/- | 5,20,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,039 | 500/- | 5,19,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,367 | 50/- | 5,18,350/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,02,753 | 10/- | 10,27,530/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 5,000/- | 60,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 99 | 1,000/- | 99,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,042 | 100/- | 1,04,200/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,274 | 20/- | 205,840/- |
| மொத்தம் | 1,25,702 | | 55,54,060/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 55,54,060/-

இந்த திங்கட்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,11,48,125/-**

தொடர் இல. 6271611 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூன 28 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

7245368-2-19
7242305-7-65
7246451-4-68
7242727-4-43
7242299-6-73

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


## பிரதான அறிவித்தல்



### வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும்


எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் நாளை (27.06.2004) ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு (புதிய நேரம்) யாழ்.ப.நோ. கூட்டுறவுச் சங்கத் தலைமையகக் கேட்போர் கூடத்தில் தலைவர் திரு.த ரூபன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆகவே, சகல ஓட்டோ உரிமையாளர்களும் சாரதிகளும **கிளைச் சங்கங்களின் உறுப்பினர்களும** இக் கூடடத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

**வ.பி.மு.மோ.ஊ.சே. சங்கம்**
**41, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.**

-நிர்வாகம்

(33496)(40-13-17-)


முதன் முறையாக

தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No : 50445
BS No : 5412:1996
Licence No : KM41240

ஏக முகவர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554

WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்

Access Graphics

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# செஞ்சிலுவையுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜுன்26

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு பின்வருவோரை தமது அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுள்ளது.

சனி,ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தவிர்ந்த நாள்களில் குறிப்பிடப்பட்டவர்கள் தமது அலுவலகத்துடன் தொடர்புகொள்ளலாம் என்றும் -செஞ்சிலுவைக்குழு அறிவித்துள்ளது.

அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

சுந்தரமூர்த்தி சிறீஸ்கந்தராசா, 7ஆம வட்டாரம், சிவநகர் குடிசைத் திட்டம், புதுக்குடியிருப்பு, செல்வராணி அலெக்சாண்டர், 224, 5ஆம் பிரிவு தர்மபுரம், அப்பாக்குட்டி கதிரிப்பிள்ளை நாகராசா, மின்சார சபை கிளிநொச்சி, ராசநாயகம் பிலோமினா புஸ்பம் விஜயராஜ், இடம பெயர்ந்தோர் முகாம் அருகில், 7ஆம வட்டாரம் புதுக்குடியிருப்பு, மஞ்சுளாதேவி புலேந்திரன், 487, வீடமைப புத்திட்டம். மறவன்குளம் ,வவுனியா, கணபதிப்பிள்ளை மகேசன், 49, 5ஆம பண்ணை, கனகபுரம் கிளிநொச்சி, சதீஸ்குமார் ஈஸ்வரதேவி, அந்தோனியார் கோயிலடி மாத்தளன், புதுக்குடியிருப்பு, சதீஸ்குமார் நிவேதினி, காந்தி கிராமம், கோணாவில், கிளிநொச்சி, அற்புதம் சிறீநந்தினி, மே/பா உதயகுமார் குமரன், 4ஆம் வட்டாரம், கொம்புவில், புதுக்குடியிருப்பு, பத்மநாதன் கிருபாம்பாள், விலங்கு விஞ்ஞானப் பிரிவு, விவசாயபீடம், கிளிநொச்சி, மோகனஅகிலன் ஆன் யூலியட், மே/பா புனிதம், புனித தெரேசா கோவில், கிளிநொச்சி, சிதம்பரப்பிள்ளை சரோஜா, 11ஆம் மண்டபம்-3ஆம் பிரிவு, பூந்தோட்டம் இடம்பெயர்ந்தோர் நிலையம வவுனியா, அருணாசலம் பெருமாள், 24ஆம் ஒழுங்கை, யூனியன்குளம், கிளிநொச்சி, குணராசா அன்னலட்சுமி, அம்பலப் பெருமாள் சந்தி, அக்கராயன், கிளிநொச்சி, ரட்ணசிங்கம் மல்லிகா தேவி, அந்தோனியார் கோவிலடி, கண்ணகிபுரம், ஸ்கந்தபுரம், நடராசா சிந்தாமணி, கிருபாதரன் குடியிருப்பு, ஆனைவிழுந்தான், கிளிநொச்சி, தங்கையா பரமேஸ்வரி, ஒட்டுப்புலம் வெதுப்பகம் வீதி, கோணாவில், டானியல் சந்திரா, சிவன் வீதி, உருத்திரபுரம், ரவி ராஜேஸ்வரி, மே/பா துரை, 202/4 தர்மபுரம் மேற்கு, கணேசன் சிவகலா, 8ஆம் கட்டை, குள வீதி, ஆரோககியபுரம், அக்கராயன், ஆனந்தராசா ஆனந்தபவானி, அந்தோனியார் கோவிலடி, கெற்பப்பிளவு, முல்லைத்தீவு, பவானந்தன் தேவி, பிள்ளையார் கோவில், கருடர்மடு, ஒட்டுசுட்டான்,

(எ)

## அழைப்புக் கட்டளை

சாவகச்சேரி குடும்ப நீதிமன்றம்
அழைப்புக் கட்டளை
வசந்ததேவன் பரந்தாமன் பெண் சிவநந்தினி,
வளர்மதி, மட்டுவில் தெற்கு,சாவகச்சேரி.

இல.: 377/ ம.நீ.

வழக்காளி
எதிராக
வசந்ததேவன் பரந்தாமன்
தேவரையாழி, நெல்லியடி வடக்கு,கரவெட்டி.
எதிராளி

மேற்படி எதிராளிக்கு,

மேற்படி வழக்காளி தங்களிடமிருந்து மணநீக்கம் பெறுவதற்கு இந்த நீதிமன்றில் உமக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்துள் ளாராதலினால், இவ்வழக்குக்கான பிராதுக்கு உமது மறுமொழியை 2004 ஆம் ஆண்டு 07 ஆம் மாதம் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக இந்த நீதிமன்றில் கோப்பிடுமாறு வேண்டப்படுவதோடு, சொல் லப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் மறுமொழியை அணைக் கத்தவறும் பட்சத்தில் எதிராளியான நீவீர் இல்லாமலே ஒருமுக விளக்கத் திற்கு எடுக்கப்படும் என்பதை அறிந்துகொள்ளுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றீர்.

பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் நீங்கள் தோன்றாவிடின் சட்ட முறையான அறிவித்தலுக்கான யாவற்றையும் சேர்ப்பிக்கக்கூடிய முகவரி ஒன்றை மன்றில் கூப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

2004 ஆம் ஆண்டு 06 ஆம்
மாதம் 22 திகதி
வரைபு வழக்காளியின் சட்டத்தரணி
C.பாலகிருஷ்ணன்.

நீதிமன்றக்கட்டளைப்படி
பதிவாளர்:
சாவகச்சேரி மாவட்ட நீதிமன்று.
(C/35844)(37-11-16-36)

## கண்ணீர் அஞ்சலி



அமரத்துவம் அடைந்த எமது
சிரேஷ்ட பொருளியல் ஆசிரியரும்,
உயர்தரப் பிரிவுத் தலைவருமான

### க.றஞ்சித்


அவர்களுக்கு எமது இதய அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரது பிரிவால் துயருறும் தாய், சகோதரர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 27.06.2004 ஞாயிறு காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, அங்கிருந்து பூதவுடல் காலை 10.30 மணிக்கு புனித பத்திரிசியார் கல்லூரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு நடைபெறும் அஞ்சலி நிகழ்வுகளுக்குப் பின் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப் படும். பழைய மாணவர்கள், பெற்றோர் அனைவரையும் கல்லூரியில் நிகழும் அஞ்சலி நிகழ்வில் பங்குகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*புனித பத்திரிசியார் கல்லூரி,* அதிபர், ஆசிரியர்கள்,
*யாழ்ப்பாணம்.* (33504)(36-33-11-16) மாணவர்கள்,

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
1926
07
26



உதிர்வு
2003
06
26

### அமரர் ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை

(3ஆம் வட்டாரம், மண்டைதீவு)

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் இருந்து
அமரர் ஆகிவிட்ட எங்கள் தெய்வமே!
அன்பெனும் அமுதூட்டி பாசத்தால் பாதுகாத்து
பண்பினால் வழி நடத்தி, வாழ்க்கைப் பாதைக்கு
ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எமது அன்புத் தெய்வமே!
உடலால் நீங்கள் எமைப்பிரிந்து ஆண்டொன்று
சென்றாலும் இப்புவியில் நாமுள்ளவரைக்கும்
எம் உள்ளங்களில் உங்கள்
நினைவுகள் என்றும் அழியாது.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.*

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார். உறவினர், நண்பர்கள்.

3ஆம் வட்டாரம்,
மண்டைதீவு. (33503)(36-33-11-16)

## பொதுக்கூட்டம்

கோப்பாய், ஜுன்26

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பழைய மாணவர்சங்கப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில நடைபெறும்.

இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக பழையமாணவர்களான வைத்தியகலாநிதி சு.சந்திரசேகரா, பொறியியலாளர் த.உபேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர் (ஒ-72)


நாகம்ஸ் சுன்னாகம்

சூரியா. மாதவன்.
மீராஜஸ்மின்.
ஈசா
நடித்த



தினசரி: 11.00, 3.00,
(C/35739) (12)

ராஜா யாழ்ப்பாணம்

விஜய், த்திரிசா,
பிரகாஸ்ராஜ் நடித்த



கில்லி

காட்சி நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30 (பு.நே.)
(C/34517) (12)

லக்சுமி இணுவில்

அஜித், சிநேகா,
ரகுவரன், வையாபுரி,
கருணாஸ்
நடித்த



ஜனா

தினசரி: 11.00, 3.00, 7.00 புதிய நேரம்
விசேட காட்சியாக வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 9.30 இற்கும் (33466) (40)

நிறைஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், ஜோதிகா, வடிவேல் நடித்த

அருள்

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
EXPOGURE [இரவு 8.45]
(C-35633)(12)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக தாதிய உத்தியோகத்தர்
செல்வி சாந்தினி துரைசிங்கம் அவர்களுடைய அன்புத் தாயார்

### திருமதி துரைசிங்கம் தர்மபூபதி

அவர்களது மறைவு பேரிழப்பாகும். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**99 A,** பிரிவு தாதிய உத்தியோகத்தர்கள்,
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(33505)(36-11-16)

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் சிதம்பரநாதன்

(ஓய்வு பெற்ற தபால் அத்தியட்சகர்)



நவிண்டிலைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சிதம்பரநாதன் அவர்கள் 23.06.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீதரன் (லண்டன்), ரவீந்திரன் (கொழும்பு), சுலோஜனா (சுவிஸ்), இறஞ்சனா (லண்டன்), கிருபேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சியாமளா, தசரதன், நேசகுமார்,சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.06.2004) ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எள்ளாங்குளம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இலுப்பையடி,*
*வல்வெட்டி.* (33506)(36-11-16)

தகவல்:
சி.ரவீந்திரன்(மகன்)

### கந்தையா றஞ்சித்



(B.A.(Hons)Dip-in-Ed., ஆசிரியர் யா/புனித பத்திரிசியார் கல்லூரி)

22(46), பலாலி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா றஞ்சித் அவர்கள் 20.06.2004 (ஞாயிற்றுக்கிழமை) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சிவயோகம் ஆகியோரின் மூத்த மகனும் றஞ்சிதமலரின் (கனடா) அன்புக் கணவரும் றஸ்மியின் (கனடா) பாசமிகு தந்தையும், பவளராணி, றஜனி (கனடா), றஜந்தன் (பிரான்ஸ்), றஞ்சினி (லண்டன்), ராகினி (சமுர்த்தி முகாமையாளர், பிரதேசசெயலகம், யாழ்ப்பாணம்), றஞ்சன் (கனடா), றசிகன் ( பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச சகோதரனும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம், காலஞ்சென்ற கதாகரன், ஜெயந்தன் (லண்டன்), காலஞ் சென்ற யோகராசா(கிராமசேவையாளர்), வனஜா (பிரான்ஸ்), சுஜீவா, ஜெய சாந்தி (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் சதானந்தன், ஜெயாநந்தன், சததியா, நித்தியா, மயூரானந்தன், திவியாநந்தன், சிந்தூரி (கனடா), ஜெசேன் (லண்டன்), ஜெசிதா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வைதிகா (பிரான்ஸ்), றெசாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரிய தந்தையும் டிலுக்சனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.06.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது (59), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் 10.30 மணிக்கு யா/புனித பத்திரிசியார் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் வில்லூன்றி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*59,பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (33509)(36-11-16)

தகவல்:
க.சிவயோகம்(தாய்),
யோ.இராகினி (சகோதரி).

### திருமதி பொன்னையா இராசம்மா



ஆத்திசூடி, கலட்டியைப் பிறப்பிடமாகவும், நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசம்மா 22.06.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் சந்திரதாஸ், சற்குணதாஸ் (லண்டன்), பிரேமதாஸ், ஞானதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், கிறேமா, ரஞ்சி (லண்டன்), ராணி, தயா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெஸ்ரீனா, நிரோஜன், ஜெஸ்மிலா, நிரஞ்சன், கௌரிகன், ரமிலா, சயினா (லண்டன்), ஏன்சோ, வெனுசா, பிரதீபா, கரின்சோ, வேளாயினி, கனிஸலன், வேர்ஜின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2004) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாரதி வீதி,*
*செம்மணி றோட்,*
*நாயன்மார்கட்டு* (33510)(38-11-16)

தகவல்:
ஞானதாஸ்
(குட்டி - மகன்)

### திருமதி பொன்னுச்சாமி முத்தம்மா



புளியங்கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுச்சாமி முத்தம்மா 25.06.2004 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் வள்ளியம்மை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா மாணிக்கம் தம்பதிகளின் மருமகளும்,காலஞ்சென்றவரான பென்னுச்சாமியின் அன்பு மனைவியும், ஜெயபாலன், காலஞ்சென்ற செல்வாம்பிகை மற்றும் விமலாதேவி, விஜயலக்சுமி, சிவபாதம், சத்தியலக்சுமி, விநாயகமூர்த்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2004) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுருவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*புளியங்கூடல் தெற்கு,*
*ஊர்காவற்றுறை.* (33511)(36-11-16)

தகவல்:
பொ.ஜெயபாலன்
(மகன்).

# 'ஹலோ ரஸ்ட்' மீதான தாக்குதல் தொண்டு நிறுவனங்கள் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜூன்26

குடாநாட்டில் கண்ணி அகற்றும் பணியில் ஈடுபட்டுவந்த 'ஹலோ ரஸ்ட்' நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்தை யாழ்மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வன்மையாகக் கண்டித்திருக்கின்றது.

மிதிவெடி இடர் அபாயக் கல்வி வாரம் அனுஷ்டிக்கப்பட்டுவரும் வேளையில் இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றிருப்பது வேதனைக்குரியது என்று இணையம் வெளியிட்ட ஓர் அறிக்கை கூறுகின்றது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மனிதநேயத்தை மையமாகக் கொண்டு கண்ணிவெடி அகற்றிச் செயற்பட வந்த பிரிட்டிஷ் நாட்டைச்சேர்ந்த சர்வதேச தொண்டர் நிறுவனமான 'ஹலோ ரஸ்ட்' மீது நடத்தப்பட்ட மிருகத்தனமான தாக்குதல் நடவடிககையினை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மக்களின் உயிர்களைக் காவுகொள்ளுகின்ற கண்ணிவெடிகளை தமது உயிர்களை பணயம் வைத்து அகற்றி மக்களின் பாதுகாப்பான வாழ்விற்கு உறுதி செய்யும் பணி பாராட்டப்பட வேண்டியது.

தனிப்பட்ட குரோதங்களுக்காக ஒரு ஸதாபனத்தை நிர்மூலமாக்கும் நடவடிக்கை வேதனை அழிக்கின்றது. குரோதங்கள விரோதங்கள், பிரச்சினைகள் பேசித் தீர்க்கப்பட வேண்டியவையே ஒழிய வன்முறை நடவடிக்கைக்குரியவை

இத்தகைய வன்முறைக் கலாசாரமாக எதிர்காலத்தில் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் தமது தொண்டுகளை கைவிட்டு திரும்பும் நிலை ஏற்படலாம். அப்படி திரும்பும் பட்சத்தில் பாதிக்கப்படப்போவோர் எமது மக்களே.

"கண்ணிவெடி இடர் அபாயக்கல்வி விழிப்புணர்வு வாரம்" அனுஷ்டிக்கின்ற இவ்வேளையில் இச்சம்பவம் நடைபெற்றது மிகவும் வேதனையானதே. இப்படிப்பட்ட செயல்கள் இனிவரும் காலங்களில் இடம் பெறாமல் தவிர்க்கப்படவேண்டும் இத்தகைய மிருகத்தனமான செயலை இணையம் வன்மையாகக் கண்டிக்கின்றது. (ஐ-6)

## வெளிவாரிப் பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,ஜூன்26

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினால் நடத்தப்பட்ட பொதுக்கலை மாணிப் பகுதி I (2000) பரீட்சையில் சித்திபெற்றவர்களின் பெயர் விவரங்கள் வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன என்றும்-

நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் பரீட்சார்த்திகள் பெறுபேற்று அட்டவணைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

மீள் பரீட்சார்த்திகள் பரீட்சை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஆளுநரின் செயலர் இன்று வருகிறார்

குருநகர்,ஜூன்26

தெல்லிப்பழையில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதமளவில் முழு அளவில் இயங்கவுள்ள புற்றுநோய் ஆஸ்பத்திரியைப் பார்வையிட்டு வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநருக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் பிரத்தியேகச் செயலாளர் த.குலவரசிங்கம் இன்று காலை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார். (ஒ-51)

## சிரமதானம்

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு மானிப்பாய் தேசிய எழுச்சிப் பேரவை சிரமதான நிகழ்வு ஒன்றுக்கு இன்று ஏற்பாடு செய்துள்ளது.

சுதுமலை அம்மன் வீதிப் பின்புறமும் அதன் பாரிய வாய்க்கால்களும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளன. (ஒ-185)

## புலிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி ஏற்கனவே வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

எனினும் -

'நிலைமை சரிசெய்யப்பட்டுவிட்டது. மாதாந்தச் சந்திப்புக்கு புலிகள் இணங்கிவிட்டனர். சனியன்று(இன்று) காலை அக்கரைப்பற்றில் சந்திப்பு இடம்பெறும்' - என்ற சாரப்பட நேற்று சில ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன.

ஆனால், சந்திப்பில் கலந்து கொள்ளமாட்டோம் என்று புலிகள் நேற்றுப் பிற்பகல் அறிவித்தனர். (க)

## கருணாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானப் பேச்சைத் தொடரவேண்டும் என்று உதவி வழங்கும் நாடுகள் இலங்கை அரசுக்கு நிபந்தனை விதித்துள்ளன.

இந்நிலையில் தாங்கள் சமாதானப் பேச்சில் அக்கறை உள்ளவர்கள் - கறையற்றவர்கள் - என்று சர்வதேச சமூகத்துக்குக் காட்டுவதற்காக அமைச்சர் பதிவியிலிருந்து டக்ளஸ் தேவானந்தாவை விலக்கும் யோசனையை ஆளும் தரப்பின் சில பிரமுகர்கள் முன்வைத்துள்ளனர் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது. இந்த விடயத்தை அவர்கள் ஜனாதிபதியிடம் விரைவில் கொண்டுசெல்வார்கள் என்றும் நம்பப்படுகிறது.

ஆனாலும் ஜனாதிபதி இந்த யோசனைக்கு இணங்குவாரா? என்பது சந்தேகம் என்றும் கூறப்படுகிறது.

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான வழக்குகள் எவையும் இதுவரை நீதிமன்றத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றும் - அவ்வாறு பதிவுசெய்யும் பட்சத்தில் இதுதொடர்பாக நீதிமன்றத்தால் நடவடிக்கை எடுக்கமுடியும் என்றும் - மேலதிக நீதிவான் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

★ யாழ். ஆஸ்பத்திரி வீதி - மணிக்கூட்டு வீதிச் சந்தி, வின்ஸர் சந்தி, வேம்படிச் சந்தி, ஆஸ்பத்திரி வீதி, முனீஸ்வரன் ஒழுங்கைச் சந்தி, ஆகிய இடங்களில் சமிக்ஞை விளக்குகள் அமைத்தல். வின்ஸர் சந்தியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் ஏனைய இடங்களில் மாநகர சபையும் இவற்றை அமைக்கவுள்ளன.

★ பிரதான வீதிகளுடன் வந்து சேரும் உப வீதிகளில் வீதிகளை மறித்து வீதித்தடைகளை ஏற்படுத்துதல்.

★ சகல சந்திகளிலும் மக்கள் வீதியைக் கடக்கும் பகுதியை அடையாளமிட்டுக் குறிப்பிடல்.

★ முச்சந்திகள் சேரும் இடத்தில் மெதுவாகச் செல்லும் அடையாளக் குறியீடுகளை நடுதல்.

★ பாடசாலைகளுக்கு முன்பாக வீதியைக் கடக்கும் அடையாளங்களை இடுதல்.

★ குடாநாட்டில் சேவையில் ஈடுபடும் 400இற்கும் மேற்பட்ட தனியார் பஸ்களில் 200 பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுவதற்கான சான்றிதழ்களைப் பெற்றுள்ளன. ஏனையவற்றுக்கும் சான்றிதழ் பெறுமாறு கோருதல்.

★ குடாநாட்டில் 2 ஆயிரம் ஓட்டோக்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன. அவற்றில் 450 ஓட்டோக்கள் மட்டுமே சங்கத்தில் பதிவு செய்துள்ளன. ஏனையவற்றையும் பதியுமாறு கோருதல்.

★ வீதி ஒழுங்குகளை மீறும் பாடசாலை மாணவர்களுக்கு சிறு தண்டனையாக சைக்கிள் காற்றைத் திறந்து விடுதல்.

★ போக்குவரத்து நிலைமையைச் சீராக மேற்கொள்ள எதிர்வரும் செப்ரெமபர் 24ஆம் திகதி மீண்டும் மீளாய்வுக்கூட்டமொன்றைக் கூட்டுவது என்றும் முடிவுசெய்யப்பட்டது. (ஒ-3-13)

## கருணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றுவிட்டார் என்ற சந்தேகம் ஏற்பட்டிருந்தது.

சில மாதங்கள் வெளிநாட்டில் இருந்துவிட்டு வந்து இங்கு அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்கப் போகிறார் எனக் கருணா நிலாவினியிடம் கூறியிருந்தார் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனால், கருணா தனது குடும்பத்தவருடன் வெளிநாடு ஒன்றுக்குச் சென்றுவிட்டாரா என்ற சந்தேகம் பரவலாக நிலவியது.

ஆனால், அவர் கொழும்புக்கு வெளியில் ஓரிடத்தில், பழைய அதே பாதுகாப்பு வசதிகளுடன் தங்கியிருக்கின்றார் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (க)

## தந்தையின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கந்தசாமியை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், எனினும் கந்தசாமியின் கோரிக்கையை ஏற்று அவரை யாழ். நீதிமன்றத்தில் உடன் ஆஜர் செய்ய உத்தரவிட்டனர்.

எனினும் தம்மைப் பொலீஸார் தொடர்ந்து விளக்கமறியலில் வைத்தனர் என்றும் - பின்னர் பிழையாக அடையாளம் கண்டதால் தம்மைக் கைதுசெய்துவிட்டனர் எனத் தெரிவித்து மே மாதம் 31 ஆம் திகதி விடுவித்தனர் என்றும் -

கந்தசாமி தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார். தாம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதால் தமது தந்தையின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்ற முடியவில்லை என்றும் - அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு ஒக்ரோபர் 4ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவிருக்கின்றது. (க)


NEW SCIENCE CENTER
யாழ்நகர்
A/L 2005
Paper Class
Sat., Sun. 3-4 p.m.
A/L 2006 புதிய பிரிவு
விரைவில் ஆரம்பம்
By: அன்பழகன் B.Sc.
(33422)(40)

கணக்காளர் தேவை
யாழ். மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் விற்பனை நிலையத்திற்கு கணக்கியல் அனுபவமுள்ள கணக்காளர் தேவை. சொந்தக் கையெழுத்தினாலான முழுமையான விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.
வி. இல. 2309
மே. பா. உதயன் (33380)

விற்பனையாளர் தேவை
யாழ். மாநகர சபை எல்லைக்குள் இயங்கும் பான்ஸிக் கடைக்கு (ஆண்/பெண்) விற்பனையாளர்கள் தேவை. முழுமையான சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல. 2308
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம். (33381)(38)

ஆசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சை
வகுப்பு 2004
ஆரம்பம்:
26.06.2004 சனி காலை
9.மணி
கட்டணம் ரூ 250/=
பட்டப்படிப்புகள் கல்லூரி
57/18, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன
(சி35753)(38)

கணக்கீடு
A/L 2006
திரு.பாலவாசன்
B.B.A (F.M.Spl)
தொங்கல் கணக்கு
Sat., Sun. 4-5 (இன்று ஆரம்பம்).
ஆரம்பம் :- 26-06-2004 4p.m.
BECON
வெலிங்டன் சந்திக்கு அருகில்
(33447)(38)

2006 A/L தமிழ்
பிரிவு I சனி, ஞாயிறு 7.30 -8.30 பு.நே.
பிரிவு II சனி, ஞாயிறு 10 -11 பு.நே.
BY: S.சிவா
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
நிர்வாகி
மதுபாரத், இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்

Walk In Interview
A "Walk In" interview will be held at the IIS, 100, Clock Tower Road, Jaffna. for the Post of Lecturer and Visiting Lecturer on 28.06.2004 from 10.00 a.m .to 11.00 a.m.
Candidates holding a degree in computing from recognized Universities or an equivalent professional qualification are Entertained.
Please note that attractive salaries will be offered for suitable candidates.
Director,
Institute of Informatics Studies,
100, Clock Tower Road. Jaffna. (சி35802)(37-11-18)

புதிய பிரிவு
ஆரம்பம்:
27-06-2004
10.00.a.m.

| COURSE | DURATION | FEES |
|---|---|---|
| Diploma in Ms Office | 3Months | 1800.00 |
| Diploma in Internet Technology | 3Months | 3000.00 |
| Diploma in Hardware Engineering | 4Months | 3750.00 |
| Diploma in Desk Top Publishing | 3Months | 2400.00 |

"அனைவருக்கும் கணனிக்கல்வி" என்பதற்கமைய மிகக் குறைந்த கட்டணம் அதிநவீன வசதிகளுடன் கூடிய கற்பித்தல் முறைமை.
மேலதிக விவரங்களுக்கு:
தலைமை அலுவலகம் #410,K.K.S Road, Jaffna.
கிளைகள் NMMV Road, Nelliady.
Chankaththanai, Chavakachcheri
(சி 33427)

தென்னிந்தியாவில் இருந்து
நான்காவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற
சிவபால ஜோதிடர்





ராஜகுருசாமி அவர்கள்
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 2004 ஆம் ஆண்டு புதுப் பலன்களை அறிவதற்கு மீண்டும் யாழ். மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கி வருகை தந்துள்ளார்.
பார்க்கும் நேரம் காலை 9.00 - 6.00 மணி
கைரேகை மட்டும் 9.00 - 1.00 மணிவரை
★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
இவற்றில் பல வருட அனுபவம் பெற்றவர்.
(சி35797)(37) ராஜகுருசாமி T.P.: 5867
மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.


# மரண அறிவித்தல்கள்

## குமாரசாமி கலைச்செல்வி (கீதா)

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி கலைச்செல்வி நேற்று (25.06.2004) வெள்ளிக்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் குமாரசாமி - விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மகளும், விஜயகுமாரின் பாசமிகு சகோதரியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.விஜயலட்சுமி (தாய்),
கு.விஜயகுமார் (சகோதரன்),
(விஜயன்).

*41/11 ஈச்சமோட்டை,*
*யாழ்ப்பாணம்.* (33513)(37-11-18)

## நாகலிங்கம் தம்பித்துரை

*(ஓய்வுபெற்ற துறைமுக அதிகார சபை மேற்பார்வை உத்தியோகத்தர்)*

உடுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொம்பனித்தெரு, வக்சோல் வீதியை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தம்பித்துரை அவர்கள் 22.06.2004 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கோண்டாவில் கிழக்கு, நாகநாதன் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, 27.06.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கோண்டாவில் கிழக்கு, கட்டை ஆலடி இந்து மயானத்திற்குத் தகனஞ்செய்வதற்காக எடுத்துச்செல்லப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகநாதன் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*
*கோண்டாவில்.* (33514)(37-11-18)

தகவல்:
மனைவி: விக்கினேஸ்வரி
பிள்ளைகள்.

## ஞானமூர்த்தி ஐயாத்தம்பி



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமூர்த்தி ஐயாத்தம்பி 22.06.2004 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளிமுத்து அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ரட்ணசிங்கம், ஆச்சிமுத்து, பொன்னுத்துரை ஆகியோரின் சகோதரரும் புவனேஸ்வரி, யோகேஸ்வரி (ஆசிரியை, வீரசிங்கம் மகாவித்தியாலயம்), செல்வராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் வைரமுத்து (நீர்ப்பாசனத் திணைக்களம்), ஞானேஸ்வரன் (கிராமசேவையாளர் - பூநகரி), சுப்புலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் குமாரசுவாமி, ஏகாம்பரம் ஆகியோரின் சகோதரரும் புஸ்பலதா (லண்டன்), புஸ்பராசன் (லண்டன்), புஸ்பரஜனி, புஸ்பகாந்தன், அனோஜா, வானுஜா, மதுரங்கன், நிரோசா, நிவேதன், நிருசன் ஆகியோரின் அன்புப் பேரனும் பிரிதா, யதுன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.06.2004 ஞாயிறு காலை 10.00 மணியளவில அவரின் இல்லத்திலிருந்து பூதவுடல் எடுத்துச்செல்லப்பட்டு வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்,* (33411)(37-11-18)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.06.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.